தனி இதழ்: ₹50

# காணிநிலம்

சொல் விளையும் பூமி

• ஜனவரி – ஜூன் 2020 • இதழ் : 9 & 10 • தனிச்சுற்றுக்கு மட்டும்



# உள்ளே... உள்ளே...

## சிறுகதை


| | |
|---|---|
| இரா.இரமணன் | 4 |
| ஜெகநாத் நடராஜன் | 8 |
| ரமணி முருகேஷ் | 18 |
| கீர்த்தி | 24 |
| ஆ.ஆனந்தன் | 28 |
| புதுமைப்பித்தன் | 54 |
| ஐ.கிருத்திகா | 56 |


## கட்டுரை


| | |
|---|---|
| சங்கரராம பாரதி | 14 |
| இரா. நாறும்பூநாதன் | 50 |


## கவிதை


| | |
|---|---|
| ம.சக்திவேலாயுதம் | 7 |
| ராசி அழகப்பன் | 11 |
| பாப்பாக்குடி இரா.செல்வமணி | 12, 44 |
| துரை. நந்தகுமார். | 12 |
| எஸ்.வீ.ராஜன்.... | 13 |
| உமையவன் கலையரசன் | 17 |
| ஷாருதி ரமேஷ் | 22 |
| கண்ணன் புலமி | 23 |
| செ.ச.பிரபு | 37 |
| இரா.மீனாட்சி சுந்தரம் | 43 |
| மெல்லின முட்கள் | 45 |
| ப்ரிம்யா க்ராஸ்வின் | 46 |
| கனகா பாலன் | 47 |
| ப.தாணப்பன் | 52 |
| ஆர்க்கே இராமநாதன் | 53 |
| பெருமாள் ஆச்சி | 53 |
| தச்சை மணி | 62 |


## மேலும்...


| | |
|---|---|
| நூல் அறிமுகம் | 36, 49 |
| படித்ததில் பிடித்தது | 48 |
| சுண்டல் பக்கம் ரமணி முருகேஷ் | 61 |

# காணிநிலம்

தனி இதழ்: ₹50

சொல் விளையும் பூமி

• ஜனவரி – ஜூன் 2020 • இதழ் : 9 & 10 • தனிச்சுற்றுக்கு மட்டும்



## ஆசிரியர் குழு

- சுப்ரா
- இரா. நாறும்பூநாதன்
- எம்.எம். தீன்
- சண்முகம்
- இரா. செல்வமணி
- ப. தாணப்பன்
- சங்கரராமன்
- ரமணி முருகேஷ்
- சக்தி வேலாயுதம்
- செ.ச. பிரபு



## தொடர்புக்கு:

ஆசிரியர் குழு

காணிநிலம் இலக்கிய இதழ்,

29, ‘தமிழ் அகம்’ வி.ஐ.பி. நகர்,

தியாகராஜ நகர்,

திருநெல்வேலி – 11,

அ.எண் – 627 011.

அலைபேசி எண்

94423 28085, 94421 12763

kaaninilam2018@gmail.com

காணிநிலம்



■ இதழ் வடிவமைப்பு: டிஸைன்ஷாப், 76677 55673.


கொரோனா ஊரடங்கு காரணமாக இதழ் 9 (ஜனவரி மார்ச் 2020) அச்சில் கொண்டு வர முடியாமல் போனது. ஆகவே முடிந்த வரை pdf வடிவில் வாசக நண்பர்களுக்கு அனுப்பி வைத்தோம். தொழில் நுட்பம் (வாட்ஸ்அப் மற்றும் ஸ்மார்ட்போன், ஈமெயில்) இல்லாத நிறைய பேருக்கு இதழ் போய்ச் சேரவில்லை. எனவே அந்த இதழின் 44 பக்கங்களோடு புதிய படைப்புகள் 20 பக்கங்கள் சேர்த்து 64 பக்கங்களாக உங்களுக்கு அனுப்பி வைக்கிறோம்.

வாசக நண்பர்கள் தொடர்ந்து ஆதரவு தருவதோடு உங்கள் நண்பர்கள் உறவினர்களையும் காணி நிலம் இதழின் சந்தாதாரர் ஆகுவத மூலம் நம் இதழ் நீண்ட காலம் தங்கு தடையின்றி வர உதவியாக இருக்கும். மேலும் படைப்பாளிகள் தங்கள் கவிதை, கதை மற்றும் கட்டுரைகளை எங்கள் மின்னஞ்சலுக்கு அனுப்பி வையுங்கள்.

இதழின் தரம் குறையாமல் வளர உங்கள் ஆதரவோடு இலக்கியப் பயணம் தொடரும்.

**– ஆசிரியர் குழு, காணிநிலம்.**

**பெருமையும், உரிமையும்**
**படைப்பாளிக்கே...**


**சந்தா விபரம்**

| | |
|---|---|
| ஆண்டுச் சந்தா | ₹100/- |
| ஈராண்டுச் சந்தா | ₹200/- |
| ஐந்தாண்டிற்கு | ₹500/- |
| ஆயுள் சந்தா | ₹1000/- |

வங்கி மூலம் பணம் செலுத்த:

A/C Name. Thanappan P.

A/C No. 119010100045727


IFSC CODE ANDB0001190

Union Bank of India

(Erstwhile Andhran Bank). TIRUNELVELI.



# பாட்டியின் டைரி



எங்களுக்கு வீடு மாற்றுவது ஒன்றும் புதிதல்ல. ஏதாவது ஒரு காரணத்தினால் இரண்டு ஆண்டுகளுக்கு ஒரு முறை வீடு மாற்றி விடுவோம். சில சமயங்களில் வீட்டுச் சொந்தக்காரருடன் தகராறு; சில சமயம் வருமானம் லேசாக உயருவதும் அதனால் சற்று வசதியான வீடாகப் பார்ப்பதும் வருமானம் குறையும் போது வசதிக்குறைவான வீட்டிற்கு செல்வதும் வழக்கம். அந்த நகரின் ஒரு எல்லையில் இருந்த காந்தி நகரிலும் இன்னொரு எல்லையில் இருந்த காயத்ரி அம்மன் கோயில் தெருவிலும் மையமான செங்கழுநீர்ப் பிள்ளையார் கோயில் தெருவிலும் கீழ வீதியிலும் சாத்தப்பாடி தெருவிலும் இருந்திருக்கிறோம். ஆனால் எந்த சாமானையும் கழிப்பதில்லை. பழைய பென்ச், ஸ்டூல், ஃபேன், இரண்டு உத்தரங்களில் மாட்டும்பலகை, என்பாட்டியின் தகரப்பெட்டி, குண்டு பல்புகள், கடவுள் படங்கள் என எல்லாம் கூடவே வரும்.

பாட்டி போன வருசம் காலமாகி விட்டார்கள்.எனக்கு கல்யாணம் பண்ணி வைத்து விட்டு கொள்ளுப் பேத்தியைப் பார்க்காமலேயே போய்விட்டார்கள். ஒரு மாறுதலுக்காக அந்த ஊரை விட்டு வேறு ஊருக்கு போவது என்று முடிவெடுத்தோம். பாட்டி இருந்தவரை சாமான்களை பேக் செய்வதும் அவிழ்த்து இடம் பார்த்து வைப்பதும் பாட்டியும் அம்மாவுமே செய்து விடுவார்கள். முதல்முறையாக சாமான்களைக் கட்டுவது என் பொறுப்பில் வந்தது. போகும் ஊரும் தெருவும் சற்று நகர்ப்புற நாகரிகத்தை சேர்ந்தது என்பதால் பழைய சாமான்களை கழித்து விடுவது என்று முடிவெடுத்திருந்தோம். பாட்டியின் ட்ரங்க் பெட்டியை திறந்து பார்த்தேன். புடவைகளுக்கடியில் டைரி ஒன்று இருந்ததைப் பார்த்து ஆச்சரியப்பட்டேன்.

பாட்டி எட்டாவதோ பத்தாவதோ படித்திருந்தாள். ஆனால் உறவினர்களுக்கு கடிதம் எழுதுவாள். நான்தான்

இன்லேண்ட் கவர் வாங்கிக் கொடுப்பேன். காலை நீட்டி உட்கார்ந்து கொண்டு என்னுடைய பரீட்சை அட்டையின் மேல் வைத்துக் கொண்டு எழுதுவாள். பிள்ளயார் சுழியோ ராமஜெயமோ போட்டு ஆரம்பிப்பாள். இரண்டு பக்கங்களும் ரொம்பும் அளவுக்கு பாட்டிக்கு எழுத விசயங்கள் இருந்தன. சில சமயம் மூன்றாவது பக்கம் கூட முடிந்து விடும். கவரை ஒட்டும்போது அதன் பசை என் நாக்கில் ருசியாக இருக்கும். பிள்ளயார்கோயில் கல்தூணில் மாட்டியிருக்கும் தபால் பெட்டி எனக்கு எட்டாது. பக்கத்தில் ஒரு கல் இருக்கும்.அதன்மேல் ஏறி போடுவேன்.

எனக்கு அஞ்சு வயசு வரை தாத்தாவும் இருந்தார். அவர்களுடன் திருச்செந்தூர் போனதும் அங்கு குருக்கள் வீட்டில் தங்கியதும் அவருக்கு குழந்தைகள் இல்லாமல் ஒரு பூனையை ‘சீத்தா சீத்தா’ என்று கொஞ்சிக் கொண்டு இருந்ததும் நினவில் இருக்கிறது. தாத்தா செத்துப்போன பிறகு கொஞ்ச நாள் பாட்டி வீட்டை விட்டு வெளியே வரவில்லை. அப்புறம் கொஞ்சம் கொஞ்சமாக கல்கி படிப்பது, கோயிலுக்கு போவது என்று நார்மலானார். சினிமாவுக்கும் போக ஆரம்பித்தார். எனக்கு மிகவும் பிடித்த படங்களான நாடோடி மன்னன். வீரபாண்டிய கட்டபொம்மன் வந்தபோது அப்பாவிடம் காசு இல்லை. பாட்டிதான் காசு கொடுத்து அனுப்பினார்.

பாட்டியின் டைரியில் பல சுவாரசியமான நிகழ்ச்சிகள் குறிக்கப்பட்டிருந்தன.

‘காமாட்சிக்கு கல்யாணம் ஆகி இரண்டு வருசம் ஆகியும் முழுகாமல் இருக்கா. மூக்கும் முழியுமா லட்சணமாத்தான் இருக்கா. ஆனா அவளுக்கு சரியாக விளையாடத் தெரியல்ல. குழந்தைங்க சொப்பு வெச்சுண்டு விளயாடற மாதிரி இருக்கா போல. நான்தான் சொல்லிக்கொடுத்தேன் எப்படி விளயாடணமின்னு.’

இது நாங்க குடியிருந்த ஒரு வளவில பக்கத்து வீட்டுப் பெண் பற்றியது.

‘வேட்டைக்காரன் சினிமா பார்த்தேன். சாவித்திரி எனக்கும் அந்த மாதிரி நடிக்கத் தெரியுமுன்னு காட்டிட்டா’

சாவித்திரி எம்ஜியாருடன் நெருக்கமாக நடித்தது பற்றி இந்த விமர்சனம்.

‘வீட்டில அரிசி சுத்தமா காலியாப் போயிடுச்சு. இன்னக்கு சாயந்தரத்துக்குள்ள அரிசி வந்துரணும். இல்லாட்டி இந்த ஏசு சிலையை தூக்கிப் போட்டுருவேன்.’

அந்த வீட்டிற்கு நாங்கள் குடிவரும் போதே சுவரில் பதித்த ஸ்டாண்ட் ஒன்றில் ஏசுநாதர் சிலை இருந்தது. மிகவும் ஆச்சாரமான பாட்டி அந்த சிலையை ஏன் தூக்கி எறியாமல் வைத்திருந்தார் என்று தெரியவில்லை.

‘பாண்டி தனிக்குடித்தனம் போகணும்கிறான். நண்டும் சிண்டுமா இருக்கிற இந்தக் குழந்தைகள வைக்சுகிட்டு நான் எங்க போவேன்?’

என் பெரியப்பா பாண்டியின் வருமானத்தில் தான் குடும்பம் ஓடிக் கொண்டிருந்தது. எங்க அப்பா ஒரு நிப்புக் கம்பெனியில வேல செஞ்சுக்கிட்டிருந்தார். அதில வர வருமானம் சொற்பம். பெரியம்மா தனிக்குடித்தனம் போகணுமின்னு சொன்னதும் பாட்டிக்கு நெஞ்சுவலி வந்து விட்டது. அப்ப எழுதியதாக இருக்கலாம். அப்புறம் நாங்கெல்லாம் படிச்சு முடிக்கிறவரை கூட்டுக் குடும்பமாகவே ஓடியது.

‘நேத்து பாண்டி இருமுடி கட்டி மலைக்கு புறப்பட்டான். இன்னும் இரண்டு வருசம் போயிட்டா பதினெட்டு தடவை ஆயிடும். கண்ணு வச்சு மாதிரி நேத்து தேங்காயில நெய் நிறயவேயில்ல. அவன் கண் கலங்கிடிச்சு. குளத்துப்புழை ஐயன்பாட்டைப் பாடினப்பறம்தான் நிறஞ்சுது.’

பெரியப்பா மாலை போட்டுட்டா அந்த மாதம் முழுவதும் எங்க வீடு திருவிழாக்கோலம்தான். சனிக்கிழமை பானகத்திற்காகவே காத்திருப்போம். பரண்மேலிந்திருந்து பதினெட்டுப்படியை இறக்கி அதற்கு ஜரிகைப் பேப்பர் ஒட்டி ஐயப்பன் படத்தை மேலே வைத்து இரண்டு பக்கமும் கற்பூரத்தை ஏற்றுவார். முதல் நாளே நிறய பூ வந்திரும். ராத்திரி கண்முழிச்சு அதை ஆய்ந்து பிரித்து வைப்போம். வருசம் முழுவதும் பணப்பற்றாக்குறை இருந்தாலும் அந்த மாதம் பணம் தாரளமாக புழங்கும். பெரியப்பாவின் ஐயப்பன் கோயில் போற குருப்பு சின்னதா தொடங்கி கடைசி வருசம் ஒரு பஸ் புடிச்சுப்போகிற அளவுக்கு பெரிய கூட்டமாயிடுச்சு.

‘தம்பி கோவிந்தனுக்கு இந்த வருசம் கல்யாணத்த முடிச்சுடணும்டா. அவன் எங்கெங்கயோ போறானாமே?’

வீட்டில ஒக்காந்திருக்கிற பாட்டிக்கு என் சித்தப்பா எங்க போறார்ன்னு தெரிஞ்சிருக்கு.

வைகுண்ட ஏகாதசிக்கு அடுத்த நாள் நெல்லிக்காய் பச்சிடியும் அகத்திக்கீரை துவட்டலும் தவறாமல் செய்வாள். வீட்டில் எவ்வளவு கஷ்டம் இருந்தாலும் பிள்ளயார் சதுர்த்தியும் கிருஷ்ண ஜெயந்தியும் பலகாரங்களுடன் கொண்டாடுவோம். இதுதவிர பிள்ளையார் எறும்பு வந்தால் நீர்கொழுக்கட்டையும் தேள் வந்தால் கோமதிஅம்மனுக்காக மஞ்சள் பொங்கலும் வடகமும் பொரிப்பாள். லெளகீகமும் வைதீகமுமாக பாட்டியின் வாழ்வு இருந்தது.

கடைசி டைரி படிக்கும் வரை எனக்கு தெரிந்த பாட்டி இதுதான். ஆனால் கிளைமாக்ஸ் அதிர்ச்சியாக இருந்தது. பாட்டியின் வரிகள் இது.

‘எனக்கு ஒண்ணுமே புரியல்ல.பத்து வயசுதான் எனக்கு. கழுத்தில பெரிய மாலையப் போட்டு யார் கூடவோ அனுப்பிச்சா. எனக்கு கல்யாணமாம்.அப்புறம் கொஞ்ச நாள் கழிச்சு அவன் செத்துப் போயிட்டான்னு எல்லாத்தையும் கழட்ட சொன்னா. நான் எங்க அப்பாவைக் கட்டிட்டு அழுதேன். அவர் எங்க வீட்டிற்கு திரும்ப கூட்டிட்டு வந்து விட்டார். எங்க அப்பா கொஞ்சம் வித்தியாசமானவர். அந்தக் காலத்து வழக்கப்படி தலையை மொட்டையடித்து வெள்ளை சீலை உடுத்தி ஒரு மூலையில் உட்காரச் சொல்லவில்லை. தையல், கோயில், கச்சேரி, சினிமா என எங்குவேண்டுமானாலும் போக சுதந்திரம் கொடுத்திருந்தார். அவரோட நண்பர் கல்யாணம்னு ஒருவர் அடிக்கடி வீட்டிற்கு வருவார். இருவரும் உலகவிசயங்கள், ஊர் விசயங்கள் எல்லாம் பேசுவார்கள். எனக்கு அப்பா கொடுக்கும் சுதந்திரம் அவருக்குப் பிடிக்காது. ஜாடை மாடையாக கண்டிப்பார். கொஞ்சநாள் கழித்து அவர் அப்பா இல்லாத போதும் வரஆரம்பித்தார்.

‘நீ போடற காப்பி மாதிரி யாராலும் போட முடியாது. அதுக்காகவே வரணும் போலஇருக்கு’ என்பார். காப்பி டம்பளரை வாங்கும் போது கையைத் தொட்டு வாங்குவார்.

இதில வேடிக்கை என்னன்னா அவரோட பையனும் நான் டைப் அடிக்கிற இன்ஸ்டிடுட்ல தான் படிக்கிறான். அவன் எங்கூட சிரிச்சு சிரிச்சுப் பேசுவான். என்ன விட இரண்டு மூணு வயசு பெரியவனா இருப்பான். அவனப்பாக்கும் போதெல்லாம் ஏதோ ஜுரம் வர்ற மாதிரி இருக்கும். தலையெல்லாம் நரைச்சுப் போய் இருக்கிற அவன் அப்பா என்னடான்னா என் கையை தொட்டு தொட்டுப் பேசுறார். சரி இத நம்ம அப்பா காதில் போட்டு வச்சுரலாமுன்னு நினைச்சேன். கல்யாணம் மாமாவைப் பற்றியும் அவருடய பையனை நான் விரும்புவது பற்றியும் தைரியமாக சொன்னேன். ஒரு நாள் அவர் வந்திருந்த போது அப்பா பேச்சை ஆரம்பித்தார்.

‘உன் பையனுக்கு கல்யாணத்திற்கு பார்க்கிறாயாமே?’

‘ஆமாம். அவனுக்கும் வயசாகிகிட்டே போகுதில்ல’

‘நான் ஒண்ணு சொல்றேன். யோசிச்சுப் பாரு. என் பொண்ணுக்கு 15 வயசுதான் ஆகுது. நல்லா சமைப்பா. வீட்டை எப்படி வெச்சிருக்கா பார்த்தியா?’

‘நீ என்ன சொல்ற?’

‘உன் பையனுக்கு நல்ல ஜோடிப் பொருத்தமா இருப்பா. அவ தையல் கிளாசுக்கு போகும்போதுஉன் யைனும் அவள விரும்பறதா சொல்றானாம்.’

‘நீ அவளை அங்க அங்க அனுப்பும்போதே சொன்னேன். இதெல்லாம் தப்புன்னு. இப்ப ஆட்டக் கடிச்சு மாட்டைக் கடிச்சு கடைசியில என் மடியில கைவைக்கிறயா?’

‘நமக்கு 60 வயசுக்கு மேலேயே ஆகுது. நமக்கே இன்னும் சபலம் விடல்ல. அவ வாழ வேண்டிய பொண்ணு. உனக்கு இஷ்டம் இருந்தா சொல்லு. இல்லைன்னா அவளுக்கு ஒரு வாழ்வு அமைச்சுக் கொடுக்க என்னால் முடியும்.’

‘இதோ பாரு. இந்தப் பேச்ச இத்தோட விட்டிரு. நம்மளோட நட்புக்காக இத நான் மறந்திடறேன். இல்லைன்னா ஊர்முழுக்கசொல்லி நாறடிச்சிருவேன்.’

‘நானும் உன் ஃப்ரிண்ட்ஷிப்புக்காகத்தான் உன் பிஹேவியர வெளியில சொல்லல. மரியாதையா வெளியிலபோ.’

பாட்டியின் டைரி அதோடு நின்று போய்விட்டது. பின்னர் நிழலாடியது. அம்மாதான் நின்று கொண்டிருந்தார். அம்மாவைக்கேட்டேன்.

‘அப்படின்னா நம்ம தாத்தா....”

‘ஆமாம். அந்த கல்யாணத்தின் மகன் தான் நம்ம தாத்தா. பாட்டியின் இரண்டாவது கணவர்.’ ●

# நாங்களும் வாழ்ந்திட...

மெலிந்த குச்சியின்
உடல் முழுவதும்
நறுமணத் திரவியங்கள்...
அது அவளாகத்தான்
இருக்கக்கூடும்...
சற்றே தடிமனான
திரியை சூழ்ந்த
மெழுகுப்பூச்சுகள்...
இது நானாகவே
இருக்கக்கூடும்...
அவள் மணம் வீசவே
தன்னைத்தான் இழக்கிறாள்...
நான் ஒளி வீசவே
என்னை நான் துறக்கிறேன்...
அவள் ஆலயங்களுக்காகவே
வாழ்கிறாளோ என்னவோ?!
நான் தேவாலயங்களுக்காகவே
வாழ்கிறேனோ என்னவோ?!
உன் வாசனையில்
என் வசந்த கால நியாபகங்கள்..
என் ஒளியில்
உன் கார் கால நினைவலைகள்...
துர்நாற்றத்தை
விரட்ட அவள் போதும்...
புற இருளை
அகற்ற நான் போதும்...
அது சரி...
உனையும் எனையும்
பற்ற வைக்காமல் வைத்திருந்தால்
நீயும் நானும்
வாழ்ந்தொரு பயனுமில்லையே!
பற்ற வையுங்கள்...
பற்றி வையுங்கள்...
இந்த ஊதுபத்தியையும்
மெழுகுவர்த்தியையும்...
காத்திருக்கிறோம்..
தீக்குச்சிகளே உங்களால்
நாங்கள் வீழ்ந்திட அல்ல..
எல்லோருக்குள்ளும் வாழ்ந்திட!

நாங்களும் வாழ்ந்திட...

# மனம் மேல் பூனை

மதில் மேல் பூனையாக
கவனமாய் நடக்கிறேன்..
திக்கெட்டும் பயமே..
இருப்பினும் சுகமே...
எங்கோ செய்யும் உணவின்
வாசனை எம்முள்ளம் தொட்டு
அலைபாய்ந்திடவே
அகமகிழ்வாய்
கம்பீரமாய் அலைகிறேன்...
ஒற்றைக்கோப்பையில்
பாலை வைத்து
எனை பிடிக்கவோ அடிக்கவோ
கொல்லவோ காத்திருக்கும்
மனங்களோடு
சுண்டக்காய்ச்சிய பாலோ
எனை சுண்டி இழுக்கிறது...
மனம் மேல் மனிதனாக
மலர்ந்து நடக்கிறேன்..
திக்கெட்டும் திகிலே...
இருப்பினும் இனிப்பே...
எங்கோ எனை கடக்கும்
அவளின் வாசனையில்
எம்மனம் சென்றிடவே
அவளின் அனுமதியில்
ஒற்றைக்கால் கொக்காய்
அவளை கம்பீரமாய்
மணக்கிறேன்...
ஊரார்கள் சுற்றங்கள்
உறவின் முறைகள்
சாதியம் பேசிப்பேசி
எம்மிருவரைப் பிரிக்க
ஆயிரம் வலைகளோடு
எம் இரத்த உறவுகளால்
இணக்கமாய் இழுத்திடத் திட்டம்...
அங்கே வேண்டுமானால்
மதில் மேல் பூனை
மாட்டிக் கொள்ளும்..
இங்கே மனம் மேல் மனிதர்களாய்
நல்லகம் கொண்ட நாங்கள்
அகப்பட மட்டுமே மாட்டோம்!

மனம் மேல் பூனை



# திரும்புதல்

செல்லையா அந்த பஸ்சை ஆச்சர்யமாகப் பார்த்தார். மெல்ல விரலால் தொட்டார். படியேறி உள்ளே சென்று பார்த்தார். எல்லா சீட்களும் காலியாக இருந்தது. ஒவ்வொரு சீட்டிலும் வெள்ளை உறை போட்டிருந்தார்கள். இங்கு உட்காரவா அங்கு உட்காரவா என்று யோசித்துக் கொண்டிருந்த போது, யாருங்க? என்று குரல் கேட்டது வெள்ளை சட்டையும் பேண்டும் போட்ட ஒருவன் நின்றிருந்தான். தெங்காசிக்குப் பக்கம் போற பஸ்தான இது பஞ்சாயத்து தேர்தலுக்கு, போட்டிக்கு நிக்கது நம்ம சித்தி பொண்ணு முத்து லச்சுமி பேத்தி வசந்திதான். அவள பாத்து... என்று இன்னும் பல விஷயங்களைப் பேச ஆர்வமாக இருந்தபோது, இடை மறித்த வெள்ளைச் சட்டைக்காரன் ‘‘பஸ் கிளம்ப நேரம் இருக்கே சீக்கிரமா வந்திருக்கீங்க” என்று கேட்டான். கொஞ்சம் அதட்டலாகக் கேட்டது மாதிரி இருந்தது அவருக்கு. கொஞ்சம் கோபம் கூட வந்தது. இன்னும் கொஞ்ச நேரம் ஆனால் ஊர்க்காரர்கள் வந்து விடுவார்கள். வந்ததும் வைத்துக்கொள்ளலாம் என்று தன்னை சமாதானப் படுத்திக் கொண்டு, “தூரமா இருந்து வரேன். மாடம் பாக்கம். மழவேற வர மாதிரி இருந்துச்சா அதான் சீக்கிரம் வந்துட்டேன். உள்ள உக்காரலாமா இல்ல எல்லாரும் வரவரைக்கும் வெளில நிக்கட்டுமா? டீ சாப்பிடுதியளா? தம்பி பேரு என்ன, என் பேரு செல்லையா. டீக்கடை செல்லையான்னா எல்லாருக்கும் ஊர்ல தெரியும், மெட்ராசுக்கு வந்து ரொம்ப வருஷம் ஆச்சு. எலக்‌ஷனுக்கு ஊர் ஆளுங்கள கூட்டிட்டுப் போக பஸ் கெளம்புது, ஓட்டு போட்டுட்டு குத்தாலத்ல போய் குளிச்சுட்டு, திருமலக் கோயில்ல சாமி கும்பிட்டுட்டு கொண்டு வந்து விடுறாங்கன்னு யாரோ சொன்னாங்க. சரி ஊருக்கும் போயி வருஷமாச்சுன்னு கிளம்பிட்டேன்”

என்று தொடர்ச்சியாகப் பேசியவரைக் கண்டு கொள்ளாமல் வெள்ளைச் சட்டைக்காரன் போனை எடுத்துப் பார்த்துக் கொண்டிருந்தான். அவருக்கு கோபம் இன்னும் உர்ரென்று ஏறியது. இந்த மெட்ராஸ்காரனுவளே தன்மையிலாதவங்க என்று நினைத்துக் கொண்டார்.


சொந்த ஊருக்குப் போவது அவருக்கு மிகவும் சந்தோஷமாக இருந்தது. இத்தனை வருடங்களாக வராத ஆசை அது. கடந்தவாரம் சாலையில் பார்த்த சொந்தக்காரன் ஒருவன்தான் ஊருக்கு பஸ் போகிற விஷயத்தைச் சொன்னான். பஞ்சாயத்து தேர்தல் அவ்வளவு தூரம் ஆகி விட்டது அவருக்கு ஆச்சர்யமாக இருந்தது. அதுவும் இரண்டு உறவுக்காரப் பெண்கள் போட்டியிடுகிறார்கள். பிரசிடெண்ட் ஆவதால் என்ன லாபம் என்று அவர் அப்பாவியாகக் கேட்டார். துட்டுதான் என்றான் உறவுக்காரன். அவர் வயதுக்கு அவன் மிகச் சின்ன பையன். அவனுக்கு உலகம் எவ்வளவு தெரிந்திருக்கிறது.

இனி ஊரிலிருக்க வாய்ப்பே இல்லை என்றான பிறகுதான் அவர் சென்னைக்கு வந்தார். அவருக்கு குழந்தைகள் இல்லை. மனைவி செத்துப் போனாள். அவர் இருந்த வீட்டை மனைவியின் தம்பி விற்கப் போவதாக ஒருநாள் சொன்னான். ஊரில் அவர் எல்லார் வீட்டுக்கும் வேலை செய்வார். கல்யாணம், சாவு வீடு, கோவில் கொடை, சடங்கு, சீமந்தம் எல்லா வேலைகளும் அத்துப்படி. கை சுத்தம், செலவை பேப்பரில் எழுதிக் கொடுத்தால் சரி பார்க்க அவசியமே இருக்காது. என்னதான் அடித்துப் பிடித்து சுருக்கி செலவு செய்து கணக்கைக் கொடுத்தாலும் கடைசியில் அவருக்கு பணம் கொடுக்கத்தான் யோசிப்பார்கள். எங்க போயிடப் போகுது அப்பப்ப செலவுக்கு வாங்கிக்கங்க என்பார்கள். அவர் முகம் மாற மாட்டார். காய்கறி, மிச்ச சோறு என்று எதாவது ஒரு வழியில் அவர் பாடு கழிந்து விடும். தங்க வீடு இல்லாமல் போனதுதான் அவருக்கு அவமானமாகி விட்டது. தன் வீட்டுப் பொருட்களை அங்கும் இங்குமாகப் போட்டு கோவில் வாசலில் தூங்கினார்.அது ஒரு மழைக்காலம் வரை தொடர்ந்தது. ஊரில் எந்த நல்லதும் நடக்க வில்லை.கொஞ்ச காலத்தில் செத்துப் போவது மாதிரி எந்த இழுத்துக் கொண்டு கிடப்பவர்களும் யாருமில்லை. என்ன செய்வது என்று யோசித்த ஒரு நாளில்

யாரிடமும் சொல்லிக் கொள்ளாமல் ரயிலில் கிளம்பி விட்டார். மதுரைக்கு என்று டிக்கெட் எடுத்து மதுரை வந்ததும் பதட்டமாகி சென்னை வரை வந்தார். சென்னைக்கு வந்த போது கொஞ்சம் திடமாகியிருந்தார். ஜவுளிக்கடை வேலைக்குத்தான் ஆசைப் பட்டார். கொஞ்ச காலம் ஜவுளிக்கடையில் வேலை பார்த்த அனுபவமும் அவர் கணக்கில் சேர்ந்திருந்தது. ஒரு கடைவாசலில் நீண்ட நேரம் நின்று வேலை வாங்கி விட்டார். அங்கேயே தங்கிக் கொள்ளலாம். ஒரு மாதம் கழித்து சமபளம் என்ன என்பது முடிவு செய்யப் படும் என்றார்கள். சம்மதம் சொல்லி விட்டார்.

சென்னைப் பெண்கள் ஊர்ப் பெண்கள் போல இல்லை. எல்லாப் புடவைகளையும் எடு,விரி என்று கலைத்துப் போட்டார்கள். மலை போல குவித்த எல்லாவற்றையும் பார்த்து ஒன்றும் வேண்டாம் என்று கிளம்பிப்போன கல் மனசுக் காரிகளால் அவர் வேறு வேலை தேடினார். ஜவுளிக் கடைக்கு கேணில் டீ கொடுத்தவன் தொழிலை சொல்லிக் கொடுத்தான். செலவு கருதி கோடம்பாக்கத்திலிருந்து தூரமாக மாம்பாக்கம் பக்கம் வந்து விட்டார். ஒரு சின்ன அறை. மூலையில் பம்ப் ஸ்டவ். நான்கைந்து பாத்திரங்கள். ஒரு பழைய சைக்கிள். காலையில் டீ நிறைந்த கேணை எடுத்துக் கொண்டு கூட்டம் நிற்கும் இடத்திற்குப் போவார். விற்ற பின் தன் அறைக்குத் திரும்புவார். மதியம் சாப்பிட எதாவது செய்து வைத்து விட்டுத்தான் போயிருப்பார். உண்டு உறங்கி மாலை மறு பயணம். நன்றாக விற்றால் முன்னூறு வரை லாபம் பார்க்கலாம். சிலநாள் நடக்கும் மழை, போராட்டம், கெட்ட நேரம் என்று சில நாள் கழியும். பாக்கி வைத்து நாமம் சாத்திவிட்டுப் போனவர்களும் உண்டு. கையில் கொஞ்சம்பணம் சேர்த்து சின்ன கடை போட்டு ஆளை வைத்து தொழில் நடத்த ஆசையும் உண்டு. சம்பாதிக்க வேண்டும். வீடு வாங்க வேண்டும். ஊரில் சொந்த வீட்டில் செத்துப் போக வேண்டும்.

ஆனால் கையில்கொஞ்சம் பணம் புரண்டால் உடம்புக்கு எதாவது வந்து விடும். வேலை நடக்காமல் போய் விடும். ஒரு முறை நாய் கடித்து விட்டது. இன்னொரு முறை பஸ் இடித்து விட்டது. கீழே விழுந்து கூட்டம் கூடியதில் சைக்கிள் காணாமல் போய், காயம் சரியாகி எழவும் ஒரு மாதமாகிவிட்டது. உடல் நலம் தேறி எழுந்து வரும் போது ஆயிரம் ரூபாய் செல்லாது என்று விட்டார்கள். அவரிடம் நிறைய



ஆயிரங்கள் இருந்தன. சோதனைக்காலம் வாழ்வின் கடைசிவரை விடாது என்று நினைத்துக் கொண்டார். வட்டிக்கு கடன் வாங்கி மீண்டும் தொழில். சம்பாத்தியத்தில் வட்டி ஒரு பகுதியை சாப்பிட்டு விடுகிறது. கொஞ்சம் துவண்டிருந்த போதுதான் ஊர்க்காரனைப் பார்த்தார். பைசா செலவில்லாமல் ஊர். குற்றாலக் குளியல். முருக தரிசனம், கையில் ஐநூறு ரூபாய் வேறு தருகிறார்களாம். அவர் தயாராகி விட்டார், அதிகாலையிலேயே ஊரிலிருக்கும் கனவு அவருக்கு வந்து விட்டது. அப்படியும் இப்படியுமாக பொழுதைக் கழித்து மதியம் வரை வந்து விட்டார். ஊருக்குப் போகும் பஸ் எங்கிருந்து கிளம்புகிறது. எத்தனை மணிக்கு கிளம்புகிறது என்றெல்லாம் கேட்டு வைத்திருந்தார். அவ்வப்போது அதனை ஞாபகப் படுத்தியும் கொண்டார். மாம்பாக்கத்தில் இருந்து வடபழனி செல்லும் டவுண் பஸ் வர தாமதமாகும் என்று நினைத்த போது பஸ் உடனேயே வந்து விட்டது. வேகமாக கோயம்பேட்டுக்கு வந்தும் விட்டார். உரிமையாக அங்கிருந்தவர்களிடம் கேட்ட போது பஸ்சைக் காட்டினார்கள். வெண்ணிறத்தில் அது நின்றிருந்தது.

கொஞ்சம் கொஞ்சமாக ஊர்க்காரார்கள் சேரத் துவங்கினார்கள். ஆண்களும் பெண்களும் கலகலப்பும் நக்கல் நையாண்டிப் பேச்சுமாக இருந்தது. பஸ்ல யாரும் தண்ணியடிக்க கூடாது என்றான் வெள்ளைச் சட்டைக் காரன். இரண்டு மூன்று பேர் கொஞ்ச நேரத்தில் வருவதாக வெளியே கிளம்பினார்கள். சீக்கிரம் வந்திருங்கப்பா என்று அவர் சொல்லி வைத்தார். சிலருக்கு அவரை நன்றாக அடையாளம் தெரிந்திருந்தது. அடையாளம் தெரிந்த சிலரிடம் அவர் ஞாபகம் இருக்கா? என்று உரிமையாகக் கேட்டு அறிமுகமும் செய்து கொண்டார்.

கொஞ்சம் கொஞ்சமாக கூட்டம் சேர்ந்தது. ஒருவன் இரண்டு பெரிய பைகளைக் கொண்டு வந்தான். எல்லோருக்கும் ராத்திரி சாப்பிட பிரியாணி என்றார்கள். சின்னதாக தண்ணீர்ப் பாட்டிகள் வந்தன. வாட்ட சாட்டமாக இருந்த ஒருவன் கையில் ஒரு பட்டியலை வைத்துக் கொண்டு ஆட்களிடம் பெயர் கேட்டான். ஆறுமுகம். அப்பா பேரு சிவராமன். கோமதிநாயகம் அப்பா பேரு சொக்கலிங்கம். என்று சொல்லச் சொல்ல அவருக்கு புன்னகை வந்தது எல்லா அப்பா மார்களும் அவருக்கு சொந்தம். அதற்குள் வண்டியில் ஏசியைப் போட்டு விட்டார்கள். விளக்குகள் பிரகாசமாக எரிந்தது. நறுமணம் பரவிற்று. செல்லையாவின் மனசு கிடந்து குதித்தது.

நீங்க...

என்று யாரோ அழைத்த குரலுக்கு அவர் நிமிர்ந்து பார்த்தார். பேர் செல்லையா. அப்பா பேரு? சொக்கநாதன். கேட்டவன் அங்கும் இங்கும் பேப்பரைப் புரட்டி எந்த தெரு.? என்றான். நேரு வீதி. வீட்டு நம்பரு?. 16 அவர் சொல்லச் சொல்ல அனைவரும் அவரையே பார்த்தார்கள். யாராவது தன்னை தெரியும் என்று சொல்வார்கள் என்று எதிர்பார்த்தார். ஒரு சத்தமுமில்லை.

“உங்க பேரு ஓட்டு லிஸ்ட்ல இல்லையே?”

“இருக்கும்யா”

“இல்ல”

“இல்லையா? என்னங்க இது அநியாயமா இருக்கு”

என்று அக்கம் பக்கம் பார்த்தார்.

அனைவரும் அவரையே பார்த்தார்கள். குற்றவாளிபோல அவர் பதைத்தார்.

“ஐயா நீங்க இறங்குங்க.”

எறங்கவா?

அவர் அதிர்ச்சியோடு கேட்டார்

“ஆமா. ஓட்டு இருக்கறவங்கள மட்டும்தான் கூட்டிட்டு வரச் சொல்லியிருக்காங்க.”

“போயி பாத்துக்கலாம் தம்பி. ஓட்டுக்கு நிக்கற பொண்னு எனக்கு ரொம்ப சொந்தம்தான்.

“இல்லங்க முடியாது. இறங்குங்க”

“நெறைய எடம் காலியா இருக்கே தம்பி”

“யோவ் இறங்குய்யா”

செல்லையா முகம் வாடினார். அவருக்கு எல்லோருக்கும் முன் அவன் பேசியது ஒரு மாதிரியாகி விட்டது. அழுகை வந்தது. கண்ணில் நீர் திரண்டது.

“என்ன தம்பி யாரோ மாதிரி பேசிட்ட”

“சொன்னா கேளுங்க. தாம்பரத்ல கொஞ்ச பேரு ஏறுவாங்க. பெருங்களத்தூருக்கும் கொஞ்ச பேர வரச் சொல்லியிருக்கேன். இடம் காணாது.”

அவரைப் பார்க்காமல் பஸ்சிற்குள் ஏறும்

ஆட்களைப் பார்த்துக் கொண்டு சொன்னான்

"ஒரு ஓரமா. கீழ வேணும்ன்னா இருந்துக்கிட்டு வரட்டுமா?"

''கொஞ்சப் பேர அங்கதான் உக்காரச் சொல்லணும் போலருக்கு."

"ஒரு ஆளுதான?"

''கொஞ்சம் புரிஞ்சுக்கங்க. உங்களுக்கு ஓட்டு இல்லையே. எறங்குங்க. பிரச்சினை பண்ணாதீங்க"

அவர் மெல்ல எழுந்தார். யாராவது அவருக்கு ஆதரவாக பேசுவார்கள் என்று எதிர்பார்த்தார். அமைதியே நிலவியது. அவரவர் அவரவர் வேலையைப் பார்த்துக்கொண்டிருந்தார்கள். பேசி சிரித்துக் கொண்டிருந்தார்கள். ஒருத்தி முறுக்கை விநியோகித்துக் கொண்டிருந்தாள். அவருக்கு இப்போது கண்ணீர் வந்தது. துண்டால் முகத்தை துடைத்துக் கொண்டார். எல்லோரையும் ஒரு பார்வை பார்த்து விட்டு இறங்கினார். யாராவது தன்னை அழைக்க மாட்டார்களா ஆசைப்பட்டார். அப்படி எதுவும் நடக்கவில்லை. இறங்கிக் கொண்டார். சற்று தூரம் நடந்து திரும்பி பஸ்சையே பார்த்தார். அதன் பின்னாலுள்ள சிகப்பு விளக்கு எரிந்தது. ஹார்ண் அடிக்கப் பட்டது. அவசரமாய் ஓடி வந்த ஒரு ஆணும் பெண்ணும் ஏறிக்கொண்டார்கள். கதவு சாத்தப் பட்டது. அவர் நெஞ்சில் அடைத்துபோல சத்தம் கேட்டது. பின் பஸ் தேர் போல மெல்ல ஆடி அசைந்து அது கிளம்பியது. கோபத்தோடு பார்த்தார்

''சம்பாதிக்கம்ல சம்பாதிச்சுட்டு ஊருக்கு வரம்ல."

மனதிற்குள் சொல்லிக் கொண்டு மாம்பாக்கம் போகும் பஸ்சை தேடி நடந்தார். அவரே ஆச்சர்யத்தக்க வகையில் அவரது நடையில் வேகம் கூடியிருந்தது. ●

# பூம் பூம் மாடு!

ராசி அழகப்பன்



மனிதனுக்குள்ளிருக்கும்
ஜீவகாருண்யத்தை
வீடு தோறும் சென்று
கணக்கெடுக்கிறது பூம் பூம் மாடு!

வள்ளலாருக்கும்
வள்ளுவனுக்கும்
மறுபரிசீலனை செய்ய
பட்டியல் தயார்...

பூம் பூம் மாடு தான்
இப்போது -
எல்லாவற்றுக்கும்
தலையாட்டுகிற
மனிதர்களைப் பார்த்து
அசந்து நிற்கிறது...

உயர்ந்த கட்டிடங்கள்
ஆளுயர்ந்த கேட்டுகள்
பத்திரமாகப் படுத்திருக்கிறது
பரிசுத்த இதயங்கள்...

மார்கழிப் பனியில்
பூம் பூம் மாட்டுக்காரனின்
நாதஸ்வர ஓசையில்
கிராமங்களில் -
பூசணிப்பூக்கள் புல்லரிக்கும்...

தெய்வீகக் களையாய்
வலம் வரும் மாடுகள்
விவசாய மக்களின்
விருப்ப முகவரிகள்...

காலம் -
வெப் சீரிஸில்
நழுவிப் போவதால்
பாதங்களின் சுவடுகளும்
வரப்புகளின் உயரங்களும்
சிமெண்டுச் சாலையாய்
உருமாறிக் கிடக்கின்றன...

பிள்ளைகளுக்கு -
இயற்கையும் -
உணவும் -
படம் வரைந்து
பாகம் குறிப்பதாகும் சூழல்!

டிஜிட்டலில் தலையாட்டும்
பூம் பூம் மனிதர்களுக்கு
நிஜமாகவே இங்கு பார்க்கலாம்
வீட்டுக்கு முன்னால் பூம் பூம் மாடு!

# மன்னித்திடு விழியழகே!...



பேரழகே!...
எப்படிக் கலந்தாய்
என் உயிரோடு?...

தேன் தோட்டம்
தழுவி வரும்
தென்றலோடு
நடை பழகும்
மென்சுகந்த
மலர்களின்
வாசமதை
வசமாக்கி
வந்தாயோ?

அந்திப் பொழுது
வந்து நிற்க
பொன் மஞ்சள்
சுமந்து நாளும்
கண்ணுக்குள்
வந்திறங்கும்
ஒளியோடு
போட்டுக் கொண்ட
ஒப்பந்தமோ?

வானவில்லை
கொடியாக்கி
நாணமில்லா
இரவொன்றில்
நட்சத்திரங்களின்
அணிவகுப்பில்
நிலவதனில்
ஏறி வந்து
கதவில்லாத
கனவின் வழியதனை
கள்ளத்தனமாய்
கைகொண்டாயோ?

மன்னித்திடு
விழியழகே!...
எப்படியெனினும்
என் உயிரில்
கலந்து விட்ட
உன் உருவை
பூமிக்காற்றதனில்
என் சுவாசம்
மிதக்கும் வரை
விட்டு விடுதல்
ஒரு இயலா நிலை!

**– பாப்பாக்குடி**
**இரா.செல்வமணி**

# நுனி தூரிகை...

வந்தமர்ந்தப் பறவையை
வரைந்து முடிக்கிறேன்
வெளியின் வெளியில்
கீச்... கீச்சென சத்தம்.

அச்சத்தத்தில் நுட்பமாய் நுழைகையில்
ஆழமாய்ப் புலப்பட்டது
வரைந்தது தாய்ப்பறவை.

குஞ்சுகளின் சத்தத்தைக் கேட்டதும்
தூரிகை குழைந்து மன்றாடுகிறது
என் வளைவுகளுக்கு வளையுமது
என்னிடம் முதல்முறை வரைகிறது
ஜீவகாருண்யமான விண்ணப்பம்.

நிபந்தனையற்ற அனுமதியில்
அதுவாய் வரைந்ததில்
வெளியின் வெளியில் கேட்ட
குஞ்சுகளின் சத்தம்
தெளிவின் தெளிவில் தெரிந்தது
உள் நுழைந்து நோக்கிய ஓவியம்
கண்முன் கிடந்தது காட்சியாய்.

தாய்ப் பறவையின் அலகிலிருந்தது
தேவைக்கேற்ற இரை.

**– துரை. நந்தகுமார்.**



# இடப்பெயர்ச்சி...!

பழகியவற்றை
பழகியயிடத்திலேயேவிட்டு
பழகாதவற்றை
பழகிக்கொள்ளச்
சொல்லித்தருகிறது
இடமாற்றம்.

வீட்டைக்கட்டிப்பார்... !
என்பதின் பாதியளவு பொதி
வீட்டை மாற்றிப்பார்....!
என்றால் மிகையிலை
என்கிறேன்..
தன்னைத்தானே
ஆமோதித்து
ஆட்டிக்கொள்கிறது
என் தலை.

அன்றொருநாள்
வேண்டியதாகி
பின்னர்
வேண்டாதவையாகி
இன்று
வேண்டவே வேண்டாமென்றாகி
வீசப்படும் போது
எல்லாமொரு நாள்
குப்பைதான்
என்று புரியவைப்பதற்குள்
படாதபாடு பட்டுவிடுகின்றன
வாங்கி வாங்கிச் சேர்த்த வகைவகையானச்
சாமான்கள்.

"அனைத்தும் வாடகை தான்" என்று
தனக்குள் மெதுவாகச்
சொல்லிப்பார்க்கத்துடிக்கிறது
எதையோ
புரிந்துகொண்டுவிட்ட
மனது.

இன்னுமொரு
புதுவிலாசம்
கிடைத்த
தற்கால மகிழ்ச்சியில்
எனது
அடையாளங்கள்
சிரிக்கின்றன...
சிதறிய
சில்லரைகள் போலே....!

வெகுநேரமாகக்
கைநீட்டிக்
கூப்பிட்டுக்
கொண்டேயிருக்கின்றது
சாய்வு நாற்காலி.....
அவ்வசதியைத் தேடுகிறதென்
அசதி
என்பதை எப்படியோ
தெரிந்துகொண்டு.!

– எஸ்.வீ.ராஜன்....





# நிற்க அதற்குத் தக

*கற்க கசடறக் கற்பவை கற்றபின்*
*நிற்க அதற்குத் தக*

இது வள்ளுவனின் குறளில் அனைவரின் வாழ்வோடும் தொடர்புடைய ஒரு குறளாகும். நம்முடைய வாழ்க்கை பல்வேறு புறத்தூண்டல்களாலும் தீர்மானிக்கப்படுகிறது. உண்மையில் நாம் கற்ற கல்வியும் அனுபவமும் நம்முடைய வளர்ச்சியை இன்னும் நெட்டித் தள்ளுகிறது என்பது யாராலும் மறுக்கமுடியாத வாதமும் ஆகும். இந்த உலகம் தொடங்கிய காலம் முதல் இன்று வரை தொடர்ச்சியாக நன்மையும் தீமையும் கலந்தே பயணிக்கின்றன என்றால் அது மிகையாகாது. நம்முடைய வளர்ச்சி எல்லாம் நன்மையை மட்டுமே கருத்தில் கொள்ள வேண்டும். இன்னமும் நம்முடைய எண்ணத்தில் எதிர்மறையான விஷயங்கள் எல்லாம் எளிதாக பதிந்துவிடுகிறது. நேர்மறைகள் அத்தனை எளிதாக பதிவதும் இல்லை.

*பூக்கள் மலர்வது யாருக்கும் தெரிவதில்லை*
*வெடிகுண்டுகள் சத்தமே எல்லோருக்கும் கேட்கும்*

எங்கோ எப்போதோ படித்த வரிகள். இதுவே நடைமுறையில் உண்மையும் கூட. ஒவ்வொரு நாளும் நாம் எதிர்கொள்ளும் அனுபவங்கள் எல்லாம் நமக்கும் நம்மைத் தொடர்பவர்களுக்கும் வழிகாட்டுவதாக அமைகிறது. உண்மையில் நம்முள் இருக்கும் நல்ல மனமே நம்மை சிறந்த முறையில் வழிநடத்தும். ஆக்கம் எப்போதும் அமைதியாகவே நிகழும். அது மலர்வதைப்போல அத்தனை எளிதாக யாருக்கும் தெரியாது. நிச்சயமாக நம்முடைய எதிர்மறை எண்ணங்களால் ஏற்படும் அதிர்வை அனைவராலும் உணர்ந்து கொள்ள முடியும். அனைவருக்கும். அந்த பாதிப்பு கேட்கும்.

சமீபத்தில் சென்னை மவுலிவாக்கத்தில் இடிக்கப்பட்ட அந்த அடுக்கு மாடிக் கட்டடம். 3 விநாடிகளில் தரைமட்டமாகியது. அதே கட்டடம் இரவுபகலாக வேலை பார்த்தாலும் 3 மாதங்கள் பிடிக்கும். நம்முடைய தமிழ் மரபில் பெண்ணிற்குரிய நான்கு குணங்களாக கூறுவனவற்றில் நான்காவதாக கூறப்படுவது பயிர்ப்பு என்பதாகும். நான்கும் அடிமைத்தனத்தின் எச்சமே என்று பெண்ணியவாதிகள் சண்டைக்கு வந்துவிடாதீர்கள். நான் அதை நியாயப்படுத்த வரவில்லை. உண்மையில் பயிர்ப்பு என்றால் பயிரை வளர்க்கும் முறைகள் போலவே பெண்ணின் வளர்ப்பிற்கும் சில முறைகள் இருப்பதாக சொல்வார்கள். உண்மையில் உங்கள் மனதிலே இப்போது வரை பதிந்து இருப்பது இதுவரை உங்கள் மனதில் பதிந்த எண்ணங்களின் தொகுப்பே என்றால் அது மிகையாகாது

அரிச்சந்திரா நாடகம் பார்த்த நாள்முதல் மகாத்மா காந்தி வாய்மைக்கு மாறியதும், ஷெல்லியின் கவிதைகளால் கவரப்பட்டபின் தன்னை ஷெல்லிதாசன் என்று பாரதி தன்னை அறிவித்துக் கொண்டதும் இங்கே உருவாக்கம் பெற்ற நடப்பு உண்மைகளே ஆகும். எதைப்பார்த்து கற்றுக் கொள்கிறீர்கள் என்பதைப் பொறுத்தே நம்முடைய தரம் உயரும்

*சில நல்ல மனிதர்கள்*
*நம்மையும் மீறி*
*நம்முள் ஊடுருவி விடுகிறார்கள்*

**– சதா பாரதி**

ஒவ்வொரு முறையும் நாம் படித்த நூல்கள், பார்த்த திரைப்படங்கள், கேள்விப்பட்ட செய்திகள் ஏதாவது ஒரு வகையிலே நம்முடைய மனதிலே ஆழமாகப் பதிந்துவிடுகின்றன. அவை நம்மையும் அறியாமல் நம்முடைய செயல்களிலும் ஊடுருவி விடுகின்றன. நிச்சயமாக அது நல்லவகையில் பாதித்தால் இந்த சமூகம் மிகச் சிறந்த மனிதர்களைச் சந்திக்கும். இல்லையெனில் நமக்குள் பிறக்கும் தீய எண்ணங்கள் நம்மை மட்டுமின்றி நம்மைச் சூழ்ந்த அனைவரையும் பாதித்துவிடும்.

“அதெல்லாம் எனக்கு தெரியாது தம்பி.

ஓவ்வொரு சுதந்திர தினத்திற்கும், குடியரசு தினத்திற்கும் நான் காலைல இருந்து விரதம் இருப்பேன். நமக்காக பட்டினியோடு போராடி இதை வாங்கிக் கொடுத்திருகாக. இதுல என்ன தப்பு?"

என் நெற்றிப் பொட்டில் அறைந்ததைப் போன்ற ஒரு நிகழ்வு கடந்த குடியரசு தினம் அன்று கிடைத்தது. தினமலரில் என்னுடைய கட்டுரை ஒன்று அன்று வெளியாகியிருந்தது. இரண்டு நாட்கள் கழித்து வந்த அழைப்பு. மதுரை பேருந்து நிலையத்தில் பூ கட்டி வியாபாரம் செய்து வரும் பாட்டிதான் அழைத்து மேலே சொன்னதை என்னிடம் சொல்லி வாழ்த்தியது. இன்னொரு அதிசயதக்க உண்மை என்ன என்றால் அந்த பாட்டிக்கு படிக்க தெரியாது போல. ஓவ்வொரு நாளும் தன்னுடைய பேரன் வந்தவுடன் இதுபோன்ற கட்டுரைகளோ செய்திகளோ வந்தால் வாசிக்கச் சொல்லி கேட்பாராம். எனது அலைபேசி எண் வாங்கி பேசி வாழ்த்திவிட்டு இந்த தகவலையும் சொன்னபோது உண்மையிலே நெகிழ்ந்தே போனேன். அந்த பாட்டியிடம் நன்றி தெரிவித்துவிட்டு, பேரனிடம் பேசி பாட்டிக்கு என் சார்பாக ஒரு முத்தமும் வழங்கச் சொன்னேன். அந்த பாட்டியின் தந்தை ஒத்துழையாமை இயக்கத்தில் பங்கேற்றவராம்.

உண்மையிலேயே என்னை மெய்சிலிர்க்க வைத்த நிகழ்ச்சிகளில் இதுவும் ஒன்றாக அமைந்தது. தன்னுடைய உணர்வுகளை எவ்வித சூழலாக இருந்தாலும் சமரசம் இன்றி வெளிப்படுத்துவது என்பது எல்லோராலும் அத்தனை எளிதாக முடியாது. ஆனால் எல்லாவற்றையும் தாண்டி தான் பெற்ற அனுபவத்தையும் தனது வறுமையையும் தாண்டி தேசத்தை நேசிக்கும் அந்த பாட்டியைப் போல ஏராளமானவர்கள் இன்னும் வாழ்ந்து கொண்டிருப்பார்கள் என்பதே நாம் அறிந்த உண்மையாகும். நம்மில் பலருக்கும் நேர்மையாக நடக்க வேண்டும் என்ற ஆசை இருக்கிறது. ஆனால் சூழலையும் கூட இருப்பவர்களின் நேர்மையற்ற செயலையும் காரணம்காட்டி அவற்றை தவிர்த்து விடுகிறோம். நாம் பெற்ற கல்வியும் அனுபவமும் நமக்கு மட்டுமல்ல நமக்குப் பின்னர் வரும் தலைமுறைகளுக்கும் வழிகாட்டும் என்பதை மனதிலே ஏற்க வேண்டும். ஓவ்வொரு முறையும் இந்த சமூகத்தின் மீது ஏராளமான குறைகளையும், கோபத்தையும் வைக்கிறோம். ஆனால் உண்மையிலே அதே சமுதாயத்தில் நாமும் ஒரு அங்கமாக இருக்கிறோம் என்பதையும் மறந்துவிடுகிறோம்

"நீயெல்லாம் படிச்சவன்தானே?"

இந்தக் கேள்வியை நாம் எல்லோரும் ஏதாவது ஒரு தருணத்திலே எதிர்கொண்டிருப்போம். அந்த நிமிடம் நாம் படித்த படிப்புகள் எல்லாம் நம் கண்முன் வந்து அசிங்கமாக திட்டுவதைப் போல இருக்கும். காரணம் படித்தவனிடம் இந்த சமூகம் எதிர்பார்க்கும் குறைந்தபட்ச ஒழுக்கம் கூட இல்லாத நிலையிலோ அதை ஒரு பொதுவெளியில் கடைபிடிக்காத நிலையிலோ இந்த கேள்வியை நாம் எதிர்கொண்டிருப்போம். இந்த கல்வி நமக்கு நிறைய அறிவினை கொடுப்பதாக ஒப்புக் கொண்டாலும் ஒழுக்கத்தை கற்றுக் கொடுத்துள்ளதா என்று கேள்வி கேட்டால் நிச்சயமாக இல்லை என்ற பதிலே பெரும்பான்மை வரும். காரணம் நாம் நடந்து கொள்ளும் முறை. பள்ளி, கல்லூரி, வீடு ஆகியவற்றில் அவர்களுக்கு சொல்லித்தரக்கூடிய கல்வியானது வெறும் தேர்வுக்கான ஒன்றாகவே மாறியிருக்கிறது.



உடற்கல்வி வகுப்பு, யோகாசன வகுப்பு, ஓவிய வகுப்பு, வாய்ப்பாடு வகுப்பு என்பதையெல்லாம் வாழ்க்கைக் கல்வி என்று சொல்வார்கள். ஆனால் இந்த பாடவேளைகள் பெரும்பாலான கல்வி நிலையங்களில் இருக்கும். ஆனாலும் அந்த பாடவேளைகளிலும் வேறு பாடங்களை எடுத்து

எப்படியாவது அவர்களை மாநிலத்தில் முதல் மாணவனாக மாற்றும் குரளி வித்தைகளை பல நிறுவனங்கள் கல்வி என்ற போர்வையில் நடத்திக் கொண்டிருக்கிறது. அவர்களும் மனப்பாடம் செய்து மாநில அளவில் மதிப்பெண்கள் பெற்று கொண்டாடப்படுகிறார்கள். அடுத்த சில ஆண்டுகளில் மறக்கப்படுகிறார்கள். ஏன் சில நாட்களிலே மறக்கவும் படுகிறார்கள். இதைவிட பெரிய அதிர்ச்சி அதே மாணவர்கள் (மனப்பாடம் மட்டுமே செய்து படித்தவர்கள்) தற்கொலை என்ற ஒரு கேவலமான நிலைக்கும் தள்ளப்படுகிறார்கள். காரணம் என்ன என்று யோசித்துப் பார்த்தால் கல்வி என்பது வாழ்க்கையைக் கற்றுத்தர வில்லை. வாழ்க்கை கல்வியும் கற்றுத் தரவில்லை. நிச்சயமாக ஏதோ ஒரு வெறுப்பையும் மனபாரத்தையும் இந்த குழந்தைகள் மேலே ஏற்படுத்திவிடுகிறோம்.

தெனாலிராமன், பரமார்த்த குரு, மரியாதைராமன் போன்ற கதைகளையும் அம்புலி மாமாவையும் இன்றைய குந்தைகளுக்கும் அறிமுகம் செய்ய வேண்டிய கட்டாயத்தில் உள்ளோம். உண்மையாக நம்முடைய குழந்தைகள் வருங்காலத்தில் சிறந்த மனிதர்களாக உருவாக வேண்டும் என்றால் அதற்கான விதைகள் அவர்களுக்கு இளமையிலே ஊட்டப்பட வேண்டும். தாத்தா, பாட்டிகளின் மடியிலே படுத்துக்கொண்டு கதை கேட்டுக்கொண்டே உறங்கிப்போகும் சுகங்களை எந்த பெரிய பணமோ வசதிகளோ தந்துவிடுவதில்லை. நம்மை நாம் சுயபரிசோதனை செய்துகொள்ள வேண்டிய நேரம் வரும். நம்மைச் சுற்றி இருப்பவர்களோ நம்முடைய குழந்தைகளோ நமது பாதிப்பு இல்லாமல் நிச்சயமாக இயங்க முடியாது அந்த பாதிப்பு அவர்களுக்கு நன்மை வழங்குவதாக இருத்தல் அவசியமாகிறது

*பாதகம் செய்பவரைக்கண்டால் - நீ*

*பயங்கொள்ள லாகாது பாப்பா*

*மோதி மிதித்துவிடு பாப்பா - அவர்*

*முகத்தில் உமிழ்ந்து விடு பாப்பா*

இந்த வரிகள் பாரதி பாப்பாக்களுக்கு மட்டும் பாடி விடவில்லை. இந்த சமூகத்தை பொறுப்போடு நேசிக்கும் ஒவ்வொருவருக்குமான வார்த்தைகள் இவை. குழந்தைகளிடம் சொல்ல வேண்டும். அல்லது குழந்தைகளாக இருக்கும்போது சொல்ல வேண்டும் என்பதே அவனுடைய விருப்பமாகவும் இருந்தது. தனது குழந்தையான சாகுந்தலாவுக்கு அறிவுரையாக அவன் சொன்னது இன்று உலக குழந்தைகள் அனைத்திற்குமான பாடலாக உள்ளங்கள் தோறும் நம்முடைய இல்லங்கள் தோறும் பாடப்பட்டு வருகிறது. ஆனால் நிச்சயமாக இது மனப்பாட பாடலாகவே இன்றுவரை, தேர்வுக்காக படிக்கும் பாடலாகவே நின்றுவிட்டது என்பதே வருத்தமான ஒன்று. ஆனால் நிச்சயமாக நாம் நம்முடைய அடுத்த தலைமுறைக்கு சில நல்லவற்றை கடத்தும்போது அது செயல்களாக மாற வேண்டும். ஆயிரம் அறிவுரைகளை விட மேலானது ஒரு செயல் என்பதே எனது வாதமாகும்

அறம் செய விரும்பு

ஔவையின் அறமொழி. உண்மையிலேயே உலக இலக்கியங்களிலே தலைசிறந்த பல அற இலக்கியங்கள் நிரம்பியது நமது தமிழ் இலக்கியமே ஆகும். ஒவ்வொரு இலக்கியமும் நமக்கு வாழ்க்கையைக் கற்றுக் கொடுப்பதாகவே இருக்கிறது. இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு எழுதப்பட்ட திருக்குறள் இன்றளவும் அதனுடைய சுவையும், வளமும் குன்றாமல் போற்றப்படுகிறது என்றால் அது காலம் தாண்டிய கருத்துக்களை நம்மிடையே விதைத்துள்ளது என்பதே நாம் அனைவரும் அறிய வேண்டியதாகும். இருப்பது வேறு வாழ்வது வேறு என்பதை உணர்ந்து கொண்டு வாழ்பவனால்தான் இந்த உலகத்தில் நிலையான மகிழ்ச்சியைப் பெற முடியும். உலகம் முழுவதும் காட்டுமிராண்டிகளாக திரிந்த போதே நாம் இங்கே அரசியலை நடத்திக் கொணடிருந்தோம் என்பதை ஆய்வுகளும் சொல்லி வருகின்றன.

வெறும் பெருமைகளை மட்டுமே பேசிக்கொண்டிருப்பதில் பயனேதும் இல்லை. அது வேண்டுமானால் அப்போதைக்கு நம்முடைய மனதிற்கு இதமாக இருக்கலாம். ஆனால் சூழலுக்கு ஏற்ப தன்னை தகவமைத்துக் கொள்ள முடியாத எந்த உயிரும் இங்கே நிலைத்திருப்பதில்லை. நமது இலக்கியங்களும் நாம் சந்திக்கும் அனுபவங்களும் நமக்கு ஏதோ ஒன்றைக் கற்றுக்கொடுத்து கொண்டிருக்கின்றன என்பதே உண்மையுமாகும். நாமோ அவற்றையெல்லாம் ஒரு கடமைக்கு மட்டுமே படித்துவிட்டு கடந்து போய்விடுகிறோம். நாம் படித்தவற்றை நமது வாழ்க்கைக்காக மாற்றும்போதுதான் வாழ்வு நிலைபெறுகிறது.

“சார் ரொம்ப நன்றி . இப்பதான் எனக்கு

புரிகிறது.”

பல நேரங்களில் என்னுடைய மாணவர்கள் படித்துமுடித்துவிட்டு சில ஆண்டுகளில் வேலைக்கு சேர்ந்த பின்னரோ அல்லது நேர்முகத் தேர்வு முடிந்த பின்னரோ அழைப்பார்கள். காரணம் வேறொன்றுமில்லை. நிச்சயமாக வகுப்பறையிலோ அல்லது பொது மேடைகளிலே நாம் சொல்லும் சிறுசிறு விஷயங்கள் அவர்களுக்கு அந்த சூழலில் கைகொடுத்து இருக்கும். புன்னகையோடு பேசுதல், நம்பிக்கையோடு நடத்தல் அல்லது வாசிப்பு அனுபவம் என்று ஏதாவது ஒன்று அவர்களுக்கு கை கொடுத்திருக்கும். அப்போதே அவர்கள் அதை நினைத்துப் பார்த்து அழைப்பார்கள். உண்மை என்ன என்றால் சில விஷயங்களை நாம் தொடர்ந்து செய்துவந்தால் அது அனிச்சை செயலாகவோ அல்லது பழக்கமாகவோ மாறிவிடும். தினமும் அல்லது வாரத்திற்கு ஒருமுறையாவது ஏதேனும் நல்ல காரியங்களை செய்திடப் பழகுங்கள். பெரிய அளவில் என்று கூட வேண்டாம். அடுத்தவருக்கு உதவி செய்தல், மாதமோ அல்லது உங்கள் பிறந்த நாளிலோ அருகிலே இருக்கும் முதியோர் இல்லங்கள், மனநலம் பாதிக்கப்பட்ட குழந்தைகளுக்கு உதவி செய்யுங்கள். சில நாட்களுக்குப்பின்னர் சில வாரங்களுக்கு பின்னர் அதுவே நம்முடைய வாழ்க்கைக்கான நெறிமுறையாக மாறிவிடுகிறது.

*குழந்தைகள் கெட்ட வார்த்தைகள்*
*பேசுவதில்லை*
*கேட்ட வார்த்தைகளையே பேசுகிறார்கள்*

சமீபத்தில் இணையத்தில் நான் வாசித்த வாசகங்கள். நீங்களும் இதை கேட்டிருப்பீர்கள் அல்லது வாசித்திருப்பீர்கள். எத்தனை அழகிய உண்மை. சில நேரங்களில் நம்மை நமக்கே அறிமுகம் செய்யும் உண்மையும் கூட. நமக்குள் இருக்கும் நல்லவற்றை நமக்கு அறிமுகம் செய்பவைகள் நமது செயல்களும் சொற்களுமே. நம்மை பின்தொடர்பவர்கள் அனைவரும் நாம் சொல்லும் விஷயங்கள் பற்றி பேசுவதில்லை. நாம் செய்யும் ஒவ்வொரு செயல்களையும் கவனிக்கிறார்கள். நாம் செய்பவற்றை கவனிக்கிறார்கள். அதுவே பல நேரங்களில் அவர்கள் வாழ்வைத் தொடர்ந்து நடத்தவும் உதவுகிறது.

*உங்களை பின் தொடர்பவர்கள்*
*பெரும்பாலும்*
*உங்கள் கருத்துக்களை தொடர்வதில்லை*
*உங்கள் செயல்களையே தொடர்கிறார்கள்*

**– சதா பாரதி**

நல்லவற்றைக் கற்றுக்கொள்வதை விட முக்கியம் அதை நம் வாழ்விலே கடைபிடிப்பது என்பதே ஆகும். இன்றைய சூழலில் நம்முடைய குழந்தைகள் நம்மைவிட அறிவாளிகளாக இருக்கின்றனர் என்பதை மறுக்க முடியாது. எதிர்கால தலைவர்களை நாம் நமது வீட்டிலே உருவாக்கி கொண்டிருக்கிறோம். அவர்கள் நம்முடைய அறிவுரைகளைக் கேட்பதில்லை மாறாக நம்முடைய நடவடிக்கைகளை கவனிக்கிறார்கள். நம்மைப் போலவே நடக்க முயற்சி செய்கிறார்கள். நாம் சரியாக நடந்துகொண்டாலே போதும் நம் நாட்டின் எதிர்காலத்தை அவர்கள் சிறப்பாக வழிநடத்தி விடுவார்கள். ●



## காதல் காதல் காதல்

*நாம் அலைந்த*
*பெருவனம் ஒன்றில்*
*உன் வாசத்தை நுகர்ந்த*
*சுள்ளிகளை பொறுக்கி*
*வைத்திருக்கிறேன்...*

*நம் விரல்கூட ஸ்பரிசம்*
*கொள்ளாத அவ்வனத்தின்*
*யௌவன நினைவுகள்*
*வந்துபோகும் இந்த*
*இரவுகளை குளிர்காய...*

**– உமையவன் கலையரசன்**



# நிகழ்தகவுகள்

ரயில் வாராங்கல் நிலையத்திற்குள் நுழைந்த போது இரவு மணி எட்டு. வண்டி நிற்கும் முன்னரே டீ காபி இட்லி வடை பூரி பானிபானி என்ற வியாபாரிகளின் குரல்கள் பெட்டிக்குள்ளேயே ஒலிக்கத் தொடங்கியிருந்தன.

முன்னல்லாம் டூ டயர் ஏசி கோச்சுக்குள்ள வந்து இப்படியெல்லாம் வித்துக்கிட்டு இருக்க மாட்டாங்க. இப்ப எல்லாந் தலகீழ என்று முகத்தைச் சுளித்து காதுகளை கைகளால் பொத்தியபடி அங்கலாய்த்தார் எதிர் இருக்கை பெரியவர் தன் மனைவியிடம்.

ஜன்னல் ஓரத்தில் என் மனைவி வேணியின் மடியில் இருந்து விற்றுக் கொண்டு போகிறவர்களை வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தாள் ஒன்றரை வயது மகள் அம்மு. தெலுங்கு செய்தித்தாளால் சுற்றப்பட்ட பொதியை என்னைத் தாண்டி அம்முவிடம் நீட்டியவனைத் திரும்பிப் பார்த்தேன். அழுக்குச்சட்டை அழுக்கு வேட்டி எண்ணெய் காணாத தலை நாலு நாள் தாடி வியர்வை நாற்றம் என படு பரிதாபமாக இருந்தான். நாற்பது வயது இருக்கலாம்.

வேண்டாம் அம்மு என்பதற்குள் அவனிடம் இருந்த அந்த பொதியை வாங்கியிருந்தாள். வெறும் 25 ரூபாய்தான் ஜி ஒரு பார்சல். அஞ்சு இட்லி இருக்கும். ரெண்டு வாங்கிக்கோங்க....

இல்லப்பா பசி இல்ல.

உங்களுக்கு பசியில்ல ஆனா எனக்கு பசி இருக்குல்ல என்று அதட்டலாகச் சொன்னவனைப் பொருட்படுத்தாமல் அம்முவிடம் இருந்து வலுக்கட்டாயமாக பொதியை வாங்கி இந்தா இந்த ரூபாயை வச்சுக்க ஆனால் எனக்கு இட்லி வேண்டாம் என பொதியோடு சேர்த்து ஐம்பது ரூபாயை அவன் கையில் கொடுத்தேன்.

இட்லிய வாங்கினாதான் டப்பு வாங்குவேன். உங்களுக்கு வேண்டாம்னா யாராவது பசிக்கிறவன் வருவான் கொடுங்க ரெண்டு பேர் பசியைத் தீர்த்த புண்ணியம் கிடைக்கும் என்றவன் இருக்கையில் பொதிகளை வைத்தான.

இத எடுத்துட்டுப் போன்னு சொல்றேன்ல.. சும்மா தொணதொணன்னுகிட்டு..

ஹலோ... அவர்தான் சொல்றாருல்ல எடுத்துட்டு போடா என்று பெரியவர் அவர் பங்குக்கு எரிந்து விழுந்தார். அவருக்கு அவன் நிற்பதே பிடிக்கவில்லை என்பது அவர் உடற்மொழியிலேயே தெரிந்தது.

பிச்சைக்காரனை உழைச்சு சாப்புடச் சொல்றது. உழைக்க நினைக்கிறவனுக்கு பிச்சை போடுறது. ஆண்டவா! இவங்கள்ளாம் எப்ப திருந்துவாங்க... தின்னா தின்னு இல்லாட்டித் தூக்கிப் போடு என்று ஒருமையில் பேசிவிட்டுச் செல்பவனின் முதுகிலேயே இட்லியை எறிந்து விடத் தோன்றியது.

விக்கிறவன் கொஞ்சம் சுத்தமா வரக்கூடாதா என்றாள் வேணி. ஆமா ஒரே வேர்வ நாத்தம் என்ன மாவோ... எப்ப பண்ணானோ... யாரும் பிச்சைக்காரங்க வந்தா போட்டுரலாம் என்றபடி முதுகுக்குப் பின்னால் புத்தகங்கள் வைப்பதற்காக பொருத்தப்பட்டிருந்த வலைப் பையில் சொருகினேன்.

வேண்டா வேண்டாம்னாலும் கேட்கிறானா பாருங்க.. வெளியே தூக்கி போட்டுருங்க யாராவது பிச்சைக்காரனுக்கு கொடுத்து அவனுக்கு ஏதாவது நோய் வந்துடப் போகுது என்றார் எதிர் இருக்கைக்காரர் மனைவி.

பொதியைப் பிடுங்கியதால் அழத் தொடங்கிய அம்முவை அதைத் தின்னா பூச்சி வரும்மா. இந்த பாரு அத்தை கொடுத்த சப்பாத்தி சூப்பரா இருக்கும். இதைச் சாப்பிடுவோம் என்று ஊட்டத் தொடங்கியிருந்தாள் வேணி.

இன்னுமா சப்பாத்தி இருக்கு! அக்கா எப்போதும் அப்படித்தான் அவள் ஒரு வேளைக்கு வைக்கும் உணவை இரண்டு நேரம் அல்லது மூன்று நேரம் கூட சாப்பிட்டுக் கொள்ளலாம். அதனால் நாங்கள் கிளம்பிய நேற்று இரவுக்கும் இன்று காலைக்கும் மட்டும் தயார் செய்து கொடு போதும் என்று கறாராகச் சொல்லியிருந்தேன். அரை மனதாக ஒப்புக் கொண்டு வைத்த இட்லி மற்றும் சப்பாத்திகளைத்தான் நேற்றிரவு

இன்று காலை மதியம் இரவு என உண்டு கொண்டிருக்கிறோம்.

விமானப்படையில் வேலை எனக்கு. நேற்று அதிகாலை அமிர்தசரஸில் இருந்து கிளம்பி மதியம் டில்லி அடைந்து அக்காவையும் பிள்ளைகளையும் ஒரு எட்டு பார்த்துவிட்டு இரவு ரயில் ஏறினோம்.

அக்காவுக்கு நான் டில்லியில் அவள் வீட்டுல இரண்டு நாட்களாவது தங்கி விட்டு போகாதது வருத்தம். வாரதயாவது சொன்னானா பாரு என்றவளிடம் அம்மு, லக்கேஜ்லாம் வச்சுக்கிட்டு நடக்குறது கஷ்டம்க்கா. நான் வர்றேன்னு சொன்னா நீ வேற அம்மாக்கு அப்பாக்கு அம்முவுக்குன்னு ஒரு பெட்டியே தயார் பண்ணீருவ. அதான் சொல்லலக்கான்னு சமாதானப்படுத்தினேன்.

எதிர் இருக்கை தம்பதியருக்கு ரயிலிலேயே ஏற்பாடு செய்திருந்த உணவுகள் வந்திருந்தன. முன்னர் ரயிலில் உணவு எப்படி இருக்கும் இப்போது எப்படி இருக்கிறது என ஒப்பிட்டுச் சொல்லியபடியே சாப்பிட்டனர். நாங்களும் ஒருவழியாய் சப்பாத்திகளைத் தீர்த்திருந்தோம்.

காலை ஏழு மணிக்கெல்லாம் சென்னை வந்து விடும். இரவு எட்டரைக்கு மேல்தான் பொதிகை எக்ஸ்பிரஸ் தென்காசிக்கு. பகல் நேரத்தில். வள்ளி மாமா வீட்டுக்குப் போகணும். இல்லனா என்னடே மாப்ள.. பெரிய மனுஷன் ஆயிட்டியோடே.. மெட்ராஸத் தாண்டி போற.. தாய்மாமாவ பாக்கணும்னு தோண மாட்டங்க எனத் தொலைபேசியில் சிடுசிடுப்பார். அத்தை அடையோ பூரியோ சுட்டுத் தருவார்கள். உங்க அம்மை மாதிரில்லாம் எனக்கு செய்ய தெரியாதுப்பா என்று சொன்னாலும் அருமையாக இருக்கும்.. வேணி அருமையான பொறுமையான புள்ளடா என்று அத்தை ஒரு வாஞ்சையுடன் அவளைப் பார்ப்பது என் நெஞ்சை நிறைக்கும்.

நானும் எதிர் இருக்கைப் பெரியவரும் மேல் படுக்கைகளிலும் என் மனைவியும் பெரியவரின் மனைவியும் கீழ் படுக்கைகளிலும் படுத்திருக்க ரயில் சீரான சத்தத்துடன் போய்க் கொண்டிருந்தது. என் மனைவி அருகில் படுத்து இருந்த மகள் மட்டும் அவள் மொழியில் தூங்கிக் கொண்டிருந்த தன் அம்மாவிடம் புரியாத பாஷையில் வாயைக் குவித்துக் குவித்து ஏதோ பேசிக்கொண்டே இருந்தாள். குழலினிது யாழினிது குறள் வந்து போனது. அந்த இசையிலேயே உறங்கிப் போனேன்.



அதீதமாய் கேட்ட மனிதக் குரல்களில் விழித்துக் கொண்டேன் நான். என் படுக்கையில் இருந்து தலையை சற்று வெளியே நீட்டிக்

குனிந்து பார்த்தபோது வேணியும் அம்முவும் நிம்மதியாக உறங்கிக் கொண்டிருந்தனர். கைபேசியை ஒளிரச் செய்து நோக்கிய போது மணி ஆறென்றது. இன்னும் ஒண்ணு ஒன்றரை மணி நேரத்திற்குள் சென்னை போய்விடுவோம் என்ற நினைப்பைக் கெடுத்தது இன்ஜின்ல எதோ பெரிய பிரச்சனையாம் இன்னும் மூணு நாலு மணி நேரத்துக்கு வண்டி நகருமான்னே தெரியல என்று யாரோ யாரிடமோ சொல்லும் குரல்.

அடுத்த அரை மணி நேரத்திற்குள் பெட்டி முழுவதும் சலசலக்க ஆரம்பித்திருந்தது. இந்திய ரயில்வே துறையின் அலட்சியத்தைப் பற்றியும் தங்களுக்கு இதற்கு முன் ஏற்பட்ட அனுபவங்களைப் பற்றியும் ஒருத்தருக்கு ஒருத்தர் பகிர்ந்து கொள்ளத் தொடங்கியிருந்தனர்..

எழுந்து அமர்ந்திருந்த பெரியவருக்கும் மனைவிக்கும்பொத்தாம் பொதுவாய் குட் மார்னிங் என்றபடி மேலிருந்து இறங்கினேன். என்னத்த குட்மார்னிங் இன்னும் நாலஞ்சு மணி நேரத்துக்கு இன்ஜின் சரியாக தாமே என வெறுப்பானார்..

இருக்கைக்கு அடியில் இருந்த காலணிகளை காலாலேயே துழாவி வெளியே எடுத்து அணிந்துகொண்டு பல் தேய்க்கச் சென்றேன். ஆனால் அங்கு தண்ணீர் இல்லை. பின்பு குடிக்க வைத்திருந்த நீரை எடுத்து பல் தேய்த்து முடித்துவிட்டு வேணியின் காலடியில் வந்து அமர்ந்து கொண்டேன்.

ஜன்னல் வழியே வெளியே பார்த்தேன். இரண்டு-மூன்று பெயர் தெரியா மரங்கள் அடங்கிய ஒரு பொட்டல் காடு மஞ்சள் வெயிலில் தகதகத்தது. பயணிகள் பலர் இறங்கி பேசிக் கொண்டும் புகைத்துக் கொண்டும். ஒன்றிரண்டு இளஞ்ஜோடிகள் எந்த கவலையும் இல்லாமல் உரசி பேசி சிரித்தபடி உலவிக் கொண்டுமிருந்தனர்.

ரயில் இப்ப கிளம்பாதா என்றபடி எழுந்து கொண்ட வேணி அம்முவுக்கு பால் வாங்கி வச்சிருங்க..தீந்துடாம என்றாள். ஐயா உங்களுக்கு எதுவும் வேண்டுமா என்று கேட்டதற்கு எதுவானாலும் வாங்கி வாருங்கள் ஆனால் பணம் வாங்கிக் கொள்ள வேண்டும் என்றார் பெரியவர். அதெல்லாம் அப்புறம் பாத்துக்கலாம் என்று சிரித்துவிட்டு ரயிலின் சமையலறைப் பெட்டி தேடி நடந்தேன்.

அங்கே பெரும் கூட்டம் எதையோ அடிபிடி போட்டு வாங்கிக் கொண்டிருந்தது. உற்றுப் பார்த்ததில் உப்புமா என்று தெரிந்தது. ஒரு

**தென்காசி காற்று குளிர்ந்துதானிருக்கும். ஆனால் போர்வையைத் தேட வேண்டாம். ஒரு காதலியைப் போல உடம்போடு தழுவி சிலிர்க்க வைக்கும்.**

கரண்டி உப்புமாவை நூறு ரூபாய்க்கு விற்றுக் கொண்டிருந்தார்கள். கூட்டத்தில் முண்டியடித்து வாங்கும் திறமையெல்லாம் இல்லாததால் அமைதியாக இருக்கைக்குத் திரும்பினேன்.

பெரியவர்க்கு நான் வெறுங்கையோடு திரும்பியது அதிருப்தியைத் தந்திருக்க வேண்டும். அவ்வளவு கூட்டமா இருக்கு என்று சலித்துக் கொண்டார்.

மணி எட்டரை. அம்முவும் எழுந்து விட்டிருந்தாள். அவசரத்திற்கு என்று வைத்திருந்த மாரி பிஸ்கட் பாக்கெட்டை எடுத்துப் பிரித்து பெரியவருக்கும் அவர் துணைவியாருக்கும் கொடுத்துவிட்டு நாங்களும் உண்ணலானோம்.

கைபேசியில் அம்மா முறுக்கு சுற்றிக் கொண்டிருப்பதை அப்பா படம் பிடித்து அனுப்பியிருந்தார். ஏட்டி ஆச்சியப் பாரு உனக்கு முறுக்குச் சுடுதாங்க என்று அம்முவிடம் கைபேசியை நீட்டியபோது அதைத் தட்டி விட்டவள் சிணுங்கத் தொடங்கினாள். வேணி, சத்தம் வராமல், பாலுக்கு அழுகிறாள் என்றதாக உதடசைத்தாள்.

மீண்டும் உணவகப் பெட்டிக்கு சென்ற போது கூட்டம் இல்லையே என மகிழ்வதற்குள் பால் கூட இல்லை என்று கையை விரித்தார்கள். இரண்டு தண்ணீர் பாட்டில்களும் பிளாஸ்கில் வெந்நீரும் மட்டும் வாங்கிக் கொண்டு திரும்பினேன். அம்மு ஸ்நிக்கர்ஸ் சாப்பிட்டபடி கண்ணாடி ஜன்னல் வழி வெளியே பயணிகளை வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தாள்.

வெயில் ஏற ஆரம்பித்திருந்தது பொட்டல் காட்டில் உலவியவர்கள் பலர் மீண்டும் பெட்டிக்குள் ஏறி விட்டிருந்தனர்.

விஜயவாடாவில் இருந்து சரி பண்ணுவதற்கு மிஷின் எல்லாம் வந்து விட்டதாம் என்று சொன்னபடி யாரோ கடந்தார்கள். சிலர்

சீட்டு விளையாடத் தொடங்கியிருந்தனர். சில அப்பாக்கள் அழும் குழந்தைகளை தூக்கியபடி பெட்டிக்குளளே நடந்து கொண்டிருந்தனர். இவ்வளவு தாமதமானால் இன்றிரவு பொதிகை ரயிலைப் பிடித்து விட முடியுமா இல்லையெனில் என்ன செய்யலாம் என்ற கவலை தொற்றியிருந்தது.

ரயிலை விட்டால் தனியார் பேருந்தில் போய்விடலாம்தான். ஆனால் பொதிகை ரயிலில் தென்காசிக்குப் போவது ஓர் சுகானுபவம்.

ரயில் மதுரையைத் தாண்டி விட்டாலே ஒரு சொல்லொணா மகிழ்ச்சி தொற்றிக்கொள்ளும். அநேகமாக ரயில் பெட்டி காலியாகி விட்டிருக்கும். வயல்களுக்கும் தோப்புகளுக்கும் வாழைத் தோட்டங்களுக்கும் நடுவிலூடே ரயில் பாய்ந்து செல்கையில் தோன்றும் உணர்வு அம்மாவின் மடியில் தலை வைத்துக் கொள்வதைப் போன்றது. அதற்காகவே குளிர்சாதன வசதிப் பெட்டியிலிருந்து மாறி இரண்டாம் வகுப்பு பெட்டிக்கு மாறி அமர்ந்து கொள்வோம்.

எய்யா.. ச்சீனிக் கொய்யாய்யா.. வாங்கிக்க ராசான்னு நார்ப் பெட்டியத் தூக்க முடியாமல் தூக்கிக் கொண்டு வரும் கிழவி, கோயில்பட்டி கட்லே மிட்டாய், மரபா இஞ்சி மரபாவென ராகத்தோடு தோள் பையிலும் கையிலுமாக கொண்டு வரும் வாலிபன் என ஊர் வாடை அடிக்கத் துவங்கிவிடும்

கண்ணை மூடிக்கொண்டு இருந்தாலும் காற்றை வைத்தே கண்டுபிடித்து விடலாம் கடையநல்லூர் வந்துவிட்டது என்று. தென்காசி காற்று குளிர்ந்துதானிருக்கும். ஆனால் போர்வையைத் தேட வேண்டாம். ஒரு காதலியைப் போல உடம்போடு தழுவி சிலிர்க்க வைக்கும்.

போதும்.. சின்னப் புள்ளை மாதிரி குதி குதின்னு குதிக்காதீங்க ஒரு இடத்தில உட்காருங்க என்பாள் வேணி என் மனநிலையை உள்ளூர ரசித்துக் கொண்டே. ஆனாலும் குதூகலம் கட்டுக்குள் அடங்காது.

காலை 8:15க்கு தென்காசி சென்றடையும் ரயிலுக்கு அப்பா ஆறு மணிக்கே வந்து காத்திருப்பார். நடைமேடையில் மிகத் துல்லியமாக நாங்கள் இருக்கும் பெட்டிக்கு நேரே நின்று கொண்டிருப்பார். பயணம் எல்லாம் சௌரியம்தானே என்று கேட்டுவிட்டு பதிலை எதிர்பார்க்காமல் மருமகளுக்கு ஒரு புன்னகையைத் தந்துவிட்டு பேத்தியை வாங்குவதிலேயே குறியாக இருப்பார்.

பேத்தியை வாங்கியதும் அவளை தலைக்கு மேலே தூக்கி அம்மை வந்தியா அம்மை வந்தியா என்று அண்ணாந்து பார்த்துக் கொஞ்சுவார். அம்முவையோ அக்காவின் மகள்களையோ பார்த்தால் மட்டுமே வாயெல்லாம் பல்லாக மனமாரச் சிரிப்பார் அப்பா.கூட வந்த ஆட்டோக்கார முருகன் எட்டு மணிக்கு மேலதானய்யா ரயில் வரும்னு சொன்னா ஐயா எங்க காது கொடுத்துக் கேக்காஹ ஆறு மணிக்கே வந்து குத்த வச்சாச்சு என்றபடி பெட்டிகளை எல்லாம் சுமந்து செல்வான்.

நண்பகல். எதிரிருக்கைப் பெரியவருக்கு ஏ.சி. குளிரிலும் வியர்த்தது. படபடன்னு வருது என்றவருக்கு பாட்டில் தண்ணீரைக் கொடுத்தேன். காலையிலிருந்து வெறும் ரெண்டு பிஸ்கட் மட்டும்தான் சாப்பிட்டாரா அனேகமாக பசியா இருக்கும்னு நினைக்கிறேன். பசி தாங்க மாட்டார் என்று கலங்கினார் அவர் மனைவி.

பெரியவரை பார்த்ததாலா அல்லது கடும் பசியா என்று தெரியவில்லை அம்மு ஓவென்று அழ ஆரம்பித்தாள். எத்தனை சமாதானப்படுத்தினாலும் அழுகை நின்றபாடில்லை. அம்முவின் அழுகை சத்தத்திலும் எதிர் இருக்கை பெரியவர் அரைக்கண் செருகி சாய்ந்து அமர்ந்திருந்தார்.

நான் அவர் அருகே போய் சார் சார் என்ற போதுதான் கண்ணில் பட்டன எதிரே அந்த வலைப் பையில் திணித்து வைத்திருந்த இட்லி பொட்டலங்கள். படக்கென்று எழுந்து அந்தப் பொதிகளை வெளியே எடுத்துப் பிரித்து முகர்ந்து பார்த்தேன். கெட்டுப் போயிருக்கவில்லை. உடனே அந்தக் இட்லிகளை இரண்டு தட்டுகளில் தட்டி சட்னியைப் பிரித்துக் கொட்டி வேணியிடமும் எதிர் இருக்கை அம்மாவிடமும் நீட்டினேன்.

வேணி அம்முவுக்கும் அம்மா ஐயாவிற்கும் ஊட்ட அம்மு அழுகையை நிறுத்தியிருந்தாள் அவரும் மெல்ல கண்களைத் திறந்தவர் ஒரு மிடறு நீரருந்திவிட்டு தானே தட்டை வாங்கி உண்ணத் துவங்கினார்.

எந்த அருவருப்பும் வியர்வை நாற்றமும் மனதில் தோன்றவில்லை. இப்போதும் அவன் யாரிடமாவது வலுக்கட்டாயமாக இட்லி விற்றுக் கொண்டிருக்கக் கூடும். அந்த அடாவடி அழுக்குச் சட்டைக்காரனை நினைத்துக் கரம் குவித்தேன்.

ரயில் மெல்ல நகரத் தொடங்கியிருந்தது. •

ஷாருதி ரமேஷ்

சிரிப்பின் உருவமாய்
எல்லோரும் தெரிகிறார்கள்.

பூமியின் மீது
ஒழுக்கமில்லாமல் வளர்கிறார்கள்.

சுற்றிச்சுற்றி இதே வட்டத்தில்
ரத்தக் கறைபடிந்த பனிகளில் வளர்கிறார்கள்.

என் காலடி எங்கும் நடுக்கங்கள்
என்னைச் சூழ்ந்துகொள்ளும்
அதிபயங்கர வஞ்சகங்கள்
எங்களின் பிஞ்சுமுகம் அவர்களைப் பார்த்தும்
காய்ந்துவிடுகிறது.
எங்களின் உயிருக்கு இங்கே மதிப்பில்லை.

வீட்டைவிட்டு பொது வெளியில்
குழந்தையின் உரிமை அபகரிப்பு.

பொய் பித்தலாட்டத்திற்குள்
குழந்தைகள் கொடூரமாக தள்ளப்படுகிறார்கள்.

ஆட்டுத் தோல் போர்த்திய
ஓநாய்களை இவர்கள் ஒருபோதும்
அறிவதில்லை.

இவர்கள்
அவர்களின் ஏளனத்திற்குப் பின்னால்
மிகவும் அப்பாவிகளாக




தெரிகிறார்கள்.
இங்கே பாதுகாப்பான
இடங்களைப் பார்க்க முடியாது

கோவில் சுவர்களில் கூட
மந்திரங்கள் பொறிக்கப்படவில்லை

நீ பிறந்து வளர்ந்த நகரெங்கும்
சுதந்திரமாய் விளையாட முடியாது

உன்னுடைய குடும்பமும்
இந்த அவமானத்திலிருந்து
தப்பிக்க முடியாது

உங்களின் குழந்தைகள்
சிரமமான வேலைக்கு தள்ளப்படுகிறார்கள்

உங்களின் குழந்தைகள்
தூரத்து உறவுக்காரனால்
கற்பழிக்கப்படுகிறாள்
பெற்றோரின் மனதும் வயிறும் பற்றி எரிகிறது

பெண் குழந்தைகளின்
மணக்கோலக் கண்ணீர்
பட்டிலும் முத்திலும் உடைகிறது.

நகரத்தில் எந்த நேரத்திலும் ஒருவர்
பாதிப்புக்குள்ளாகிறார்

உலகப் பயங்கரவாதத்திற்கு
ஆள்கடத்தலே
அடித்தளமாகின்றது

ஆனால் இங்கே இந்தக் கொடூரக்
குற்றங்களுக்கிடையிலும்
வாழ்வதற்கான நம்பிக்கை
கற்றுக்கொடுக்கப்படுகிறது

பாதித்தவர்களுக்கு நாம் உதவுவோம்
இந்தச்செய்தி திசையெங்கும் பரவட்டும். ●



# எங்க ஊர்

அந்தி நேரத்தை வரையும்
அரசமரமும் ஆலமரமும்
கெச்...கெச்...கெச் என்று
விளக்கேற்றச் சொல்லி
ஊருக்கு விரைவுச் செய்தி
அனுப்பிக் கொண்டிருந்தன..

வீட்டின் கதவுகள் எல்லாம்
கருக்கலிடம் கதை கதையாய்க் கிசுகிசுத்தன.
அதில் வயசுப் பொண்ணுகளின் வாலிபம்
மின்னின..

கதை மினுக்கமத்தனையும்
அவர்களின் தடைபடாத ஏக்க மூச்சில்
சிதைந்து விடக் கூடாதே என்று
கதிகலங்கிக் கத்தலாயின சுவர்க்கோழிகள்..

காற்று கலைத்து விளையாடும்
கைக்கடங்காத கொண்டை முடியை
அள்ளி அள்ளி முடிந்து கொண்டிருந்தார்
கொல்லுப் பட்டறை மேட்டில் அமர்ந்தே
அரைப் பார்வையில் அறுபத்தஞ்சு
ஆண்டுகளையும் ஒக்கிட்டு நிமிர்த்திய
பாப்பாசாரி...

அவர் வாயில் குதப்பியிருக்கும்
வெற்றிலை சொல்லும் ஊர்ப் பட்ட
புராணங்களை..

மேய்ச்சலில் இருந்து திரும்பிய
நொண்டிக் கோமதி அக்காளின்
வெள்ளாட்டு வீரர் கூட்டத்தில்
இரண்டொன்று பட்டறை ஓலையைப்
பதம் பார்த்துக் கடந்தன..

விட்டு விட்டு அம்மி தட்டும் சத்தம்
கேட்டு ஊர் அம்மனுக்கு உள் நாக்கில்
எக்கச்சக்கமாய் எச்சில் ஊறியது..

பாதிக்கும் மேல் ஊர் பாய் உதறுவதை
பால் நிலா படம் பிடித்து ரசித்தது...

பண்டாரம் பொஞ்சாதி காவேரி
பத்து அய்யர் வீட்டில் வேலை முடித்து
சேலைத் தலைப்பால் மூடிச் சுமந்து வந்த
வெஞ்சன வாசம் எல்லாக் கதவுகளையும்
பலமாய்த் தட்டி பந்தி வைத்தது..

பூசாரி சைக்கிளின் லொடலொடப்பு
ஒடுங்கும் நேரமும், வரிக்காரர்களின்
சீட்டுக்கட்டை வெட்டும், கலைக்கும்
சத்தமும் அம்மனின் வலக்கர சூலாயுதம்
இடப் பக்கம் மாறுவதும் சொல்லி வைத்தது
போல் ஒரே நேரத்தில் நடக்கிறது...

தன் வீட்டு முற்றத்தில் நின்று கொண்டு,
மேற்கே அம்மன் கோவில் திசைக்கு நின்ற
வாக்கிலும், முட்டும் போட்டு விழுந்தும்
கட்ட சண்முகத்தின் தேவரின் இரண்டாவது
மருமகளுக்கு நாள் நின்று இன்றோடு
எட்டு வெள்ளியாம்...

"பிழைச்சிக் கிடந்தா ஓம்பேரையே
பிள்ளைக்கு விடுதேன் ஆத்தா" என்று
வணங்கி எழவும்...

பக்கத்து வீட்டு பசுமாட்டுக் கழுத்து மணி, "
பலே பல்லு ஆறுமுகம் என்றிசைக்க...

வீட்டு முற்றத்தில் சட்டி பாத்திர பளபளப்பு
வட்டமாய் வரைந்த நிலாச்சோறு
வளையத்தில் சோறும் கறியும் சொக்கனை
கொக்கி போட்டு இழுக்க..

நிலா வெளிச்சம் நின்று கொண்டே
சோற்றுக்கு உப்பிட்டு தலை தடவி
சாப்பிடச் சொல்ல...

தெரு நாய்களின் ஊளைகளை
வரி வாரியாயாய் நின்ற பசுமரங்கள்
வடிகட்டி பாசுரங்களாய் மடைமாற்றி
மதுர கீதமாக்கிவிட...

உறங்கும் ஊரே ஒரு ஐலேசமாய் எங்கள்
அம்மா ஊர் இலங்கியது அறுபதுகளில்...

"ஈருவலிதான் இவையோவென செல்
டவரைக் கண்டு மிரண்டு காற்று ஓடி
ஒளியும் இப்போது ஊரைப் பற்றி எதுவும்
கேட்காதீர்கள்..



# வீட்டில் சொல்லாத கதை


“அங்க வர்றது பெருமாள் மாமாதானே?" ஒப்புக்குக் கேட்டான் கோலப்பன். நானும் ஐயப்பனும் திரும்பிப் பார்த்தோம். சைக்கிளை உருட்டிக்கொண்டு அணஞ்சபெருமாள் மாமா வந்து கொண்டிருந்தார். அவரது கறுப்பான உயரமான தோற்றம் சட்டென்று அடையாளம் காட்டிவிடும். ஜிப்பாவும் அல்லாத சட்டையும் அல்லாத மாதிரி வெள்ளைக் கதர் துணியில் ஒரு சட்டை.

மற்ற சைக்கிள்களைவிட பெருமாள் மாமாவின் சைக்கிளுக்கு தனி பளபளப்பு உண்டு. இவருக்கு எதுக்கு சைக்கிள்? வெறுமனே நடந்துபோனா, சைக்கிளை உருட்டுற வேலையாவது மிச்சம். எதுக்கு எங்கேயும் சைக்கிளையும் துணைக்குக் கூட்டிட்டுப் போறாரு? என்று என்னைப் போல ஊரில் அநேகம்பேர் நினைத்திருக்கக்கூடும்.

எழுபது வயதைத் தாண்டி இருக்கும். சின்ன வயசில் சைக்கிளைத் தலைகீழாக ஓட்டுவாராம். இப்போது மேடும் பள்ளமுமாக இருக்கும் செம்மண் சரல் பாதையில் அவரால் சைக்கிளை ஓட்ட முடியாது. ஆனாலும் எந்தக் காலத்திலோ வாங்கிய அட்லஸ் சைக்கிள் அவரோடு சேர்ந்தே பயணிக்கும். உருட்டிக்கொண்டு போகிற சைக்கிளையும் தினமும் மண்ணெண்ணெயும் தேங்காயெண்ணையும் போட்டுத் துடைத்து வைப்பார்.

பெருமாள் மாமாவுக்கு ரெண்டு மகள்கள். அந்தப் பெண்களைக் குறிவைத்து மாமாவின் வீட்டில் எதையேனும் காரணம் சொல்லி நுழைந்த விடலைப் பையன்கள் அதிகம். அந்தப் பெண்களுக்காகவே மாமாவின் தூரத்து அண்ணன் உறவுகளின் மகன்களும் கூட அவரை மாமா என்று கூப்பிட்டுக் கெரண்டிருந்தார்கள். ஆனால் இரு மகள்களின் அழகுக்காகவே நகையைப் போட்டுக் கல்யாணம் செய்து கொண்டு பேரனார்கள். ரெண்டு மாப்பிள்ளைகளும் படித்த வசதியான உத்தியோகஸ்தர்கள். ஊரில் எல்லோரும் இலவு காத்த கிளிகளானோம்.

"மாமா... எங்கே போய்ட்டு வாரேரு?" -ஐயப்பன் கேட்டுவிட்டு கோலப்பனைப் பார்த்துக் கண்ணடித்தான்.



"மழைல புறக்கடைச் சுவரு விழுந்து மூணு மாசம் ஆச்சு. எழுப்பிக் கட்டணும். இன்னும் கொஞ்சம் மராமத்து வேலையும் இருக்கு. புன்னவிளையில செங்கல் அறுக்கிறானுகல்ல. செங்கல்லுக்குச் சொல்லிட்டு வாரேன்..." -முகத்தைச் சலிப்பாய் வைத்துக் கொண்டு சொன்னார் மாமா.

கோலப்பன் கையிலிருந்த பீடியை கடைசியாய் ஒரு இழுப்பு இழுத்துவிட்டு தரையில் போட்டு காலால் நசுக்கினான்.

"ஏலேய்... இன்னும் பீடிதான் குடிச்சுட்டு இருக்கீங்களா. ஏம்ல... பஞ்சு வெச்ச சிகரெட்டு வாங்கிக் குடிக்கப்படாதால்ல..." மாமா மூக்கைத் தடவிக் கொண்டார்.

பெருமாள் மாமா அப்படித்தான். இளவட்டப் பசங்க எந்தக் கெட்டப் பழக்கம் செய்தாலும் அதைத் தப்பு என்று சொல்லமாட்டார். அது உடம்பைப் பாதிக்காத மாதிரி செய்யலாமே என்பார். பெருமாள் மாமாவும் எல்லா கெட்டப் பழக்கங்களையும் தொட்டுப் பார்த்தவர்தான். பிறகு ஒவ்வொன்றாகக் கைவிட்டு வெற்றிலை மட்டும் போடுவதில் வந்து நின்றிருந்தார்.

"சரி... மாமா! உம்மக்கிட்டே கதை கேட்டு ரெம்ப நாளாச்சு ஒண்ணு சொல்லுமேம்..." கோலப்பன்தான் ஆரம்பித்தான்.

"எனக்கு நிறைய வேலை கிடக்குலே.... எல்லாந்தான் ஏற்கனவே செரல்லியிருக்கேனே..." என்று இழுத்தார். அப்படி ஒன்றும் அவருக்குப் பெரிய வேலை இல்லை என்பது எங்களுக்கும் தெரியும். ஆனாலும் தான் வெட்டியா இருக்கிறேன் என்று காட்டிக்கமாட்டார்.

"என்ன வேலை மாமா? எதுவானாலும் எங்கக்கிட்டே சொல்லும்... நாளைக்கே வந்து நாங்க முடிச்சுத் தாறோம்.." என்றேன்.

"போங்கலே... நீங்க வந்து முடிச்சுத் தந்துட்டுத்தான் மறுவேலை பாப்பீங்க. என் புள்ளைகளுக்குக் கல்யாணம் ஆகுற வரைக்கும் என் வீட்டைத் தேடித்தேடி வந்த பயலுக நீங்க. இப்பம்லாம் எட்டியே பார்க்கிறதில்லையே..."

"அப்படில்லாம் இல்லை மாமா. யாருக்கு எங்கேன்னு எழுதி வெச்சிருக்கும்ல. சரி, அதை விடும். கதை ஏதாவது சொல்லுமேம். ஊர்ல உம்ம அளவுக்கு உலக அனுபவம் யாருக்கு இருக்கு? அதனால கேட்குறோம். கேட்டு எவ்வளவு நாளாச்சு..." -ஐயப்பன் அழுத்தம் கொடுத்தான்.

உலக அனுபவசாலி என்று தன்னை யாரேனும் சொன்னால் மாமாவுக்கு உச்சி குளிர்ந்து போய்விடும். அது அவரது பலவீனமும்கூட.

"ம்ம்! எல்லாவனும் குண்டுச் சட்டிக்குள்ளே குதிரை ஓட்டிட்டு இருந்தானுக. எனக்கு அப்பன் போய்ட்டான். குடும்பத்தைக் காப்பாத்தணும், கூடப் பொறந்த ரெண்டு பொம்பளைப் புள்ளைகளைக் கரையேத்தணும். ஊர் ஊராத் திரிய வேண்டியதாச்சு.." என்ற பெருமாள் மாமா சைக்கிளை அங்கேயே ஸ்டான்ட் போட்டுவிட்டு, நாங்கள் அமர்ந்திருந்த மரத்தடி திண்டில் உட்கார்ந்தார். இடுப்பு வேட்டி மடிப்பிலிருந்த சுருக்குப் பையை எடுத்து ஒரு துண்டு பாக்கை எடுத்து வாய்க்குள் போட்டுவிட்டு, ஒரு வெற்றிலையை எடுத்து காம்பு கிள்ளினார்.

"மாமா... இந்த கும்பகோணம் வெத்தலைன்னு சொல்றாங்களே. அதெல்லாம் வாங்கமாட்டீரோ?" -கோலப்பன் கேட்டதும்...

"நம்ம ஊர்ல அதெல்லாம் எங்கலே கெடைக்கும்? நம்ம ஊர் வெத்தலைக்கு காரமும் உறைப்பும் அதிகம் தெரியுமா? கும்பகோணம் வெத்தலை நாலு போடுறதுக்கு நம்ம ஊர் வெத்தலை பாதி போட்டாப் போதும். ஆமா, நீங்க எதுக்குலே இந்த பேயடிக்கிற நேரத்துல மரத்தடியில இருக்கீங்க?" என்றபடியே வெற்றிலைக்குச் சுண்ணாம்பைத் தடவி வாய்க்குள் திணித்துக் கொண்டார்.

"சும்மாதான்... நீரு பேய்னு சொன்னதும்தான் ஞாபகத்துக்கு வருது, ஏதாவது பேய்க்கதை சொல்லுமேம்..." -ஐயப்பன் மாமாவை உசுப்பேத்தினான்.

மாமா லேசான யோசனையில் ஆழ்ந்துவிட்டு, "லேய்...இது கதையில்ல... உண்மையான சம்பவமாக்கும். அம்பது அம்பத்தஞ்சு வருசத்துக்கு முன்னாடி நடந்தது..." என்றபடி தொண்டையைச் செருமினார்.

"பதினேழு பதினெட்டு வயசுதான் இருக்கும் எனக்கு. நாடார் கடையில வேலைக்கு நின்னேன். ஏதாவது நல்ல வேலைக்குச் சேர்த்து விடுதேன்னு எங்க ஒண்ணுவிட்ட சித்தப்பாதான் என்னை ஓசூருக்குக் கூட்டிட்டுப் போனாரு. ஒரு உரக் கம்பெனியில வேலைக்குச் சேர்த்துவிட்டார். எல்பர் வேலைதான். சும்மா மூட்டை தூக்கிப் போடுற வேலை..."

"ஏன் மாமா.. நீரு அந்தக் காலத்து எஸ்எஸ்எல்சிதானே? அப்ப இந்தப் படிப்புக்கு

கிளார்க் வேலையே கிடைக்குமே. நீரு ஏன் ஹெல்பர் வேலைக்குப் போனீரு?" -ஐயப்பன் இடைமறிக்க, மாமா முறைத்தார்.

"கதையைக் கேளம்ல... குறுக்கே பேசிட்டு..." -முகத்தைச் சுருக்கிக் கெரண்டார் மாமா.

"சரி மாமா... நீரு கதையைச் சொல்லும்..." -கோலப்பன் சொன்னான்.

"ஆங்... கம்பெனி ரெண்டு ஷிப்ட் ஓடும். காலைல ஏழு மணிக்குப் போனா மதியம் நாலு மணிக்கு வரலாம். அப்புறம் அஞ்சு மணிக்குப் போனா ஒருமணி வரைக்கு வரலாம். நடுராத்திரி எவன் வெளியே வருவான். அப்பல்லாம் சுத்தி ஒரே காடு. ஓசூர் தெரியும்ல... பொட்டல் காடு. அங்கங்கே பாறைமேல பாறையை தூக்கிவெச்சால இருக்கும். இருட்டுல பாறையைப் பார்த்தா ஆளு இருக்கிற மாதிரி இருக்கும். ஆளைப் பார்த்தா பாறை இருக்கிற மாதிரி இருக்கும். செடியெல்லாம் ஒண்ணுக்கும் ஒதவாத முள்ளு. வெறகுக்குத்தான் வெட்டிட்டுப் போவாங்க. வேலையை முடிச்சுட்டு கம்பெனிக்குள்ளேயே படுத்துட்டு விடிஞ்ச பொறவுதான் எல்லவனும் வெளியே வருவான். அன்னிக்கு நானும் வேலையை முடிச்சுட்டு படுத்தேன். கொஞ்சநேரத்துல முழிப்பு தட்டுச்சு. விடியுற நேரமாக்கும்னு நேரா வெளியே வந்து சைக்கிளை எடுத்துட்டேன்..."

"அப்ப விடியலயா மாமா?" -நான் கேட்டேன்.

"அதைத்தான்ல சொல்லுதேன். மணி மூணு இருக்கும்னு நினைக்கேன். கம்பெனிக்கும் நான் தங்கியிருந்த இடத்துக்கும் அஞ்சு கிலோ மீட்டராவது இருக்கும். சைக்கிளை மிறிச்சுட்டே வந்தேன். அப்பல்லா ரோட்டுல லைட்டு ஏது? அம்மாசி முடிஞ்சு அஞ்சாறு நாள் இருக்கும். லேசா நெலா வெளிச்சம்...." இதுவரை சாதாரணக் குரலில் பேசிய மாமா திடீரென்று முகத்தை ஒருமாதிரி வைத்துக் கொண்டு குரலைத் தாழ்த்தினார்.

“பாரு... ரோட்டுல இருவது வயசு இருக்கும் ஒரு புள்ளை. வெள்ளை சேலை கெட்டிக்கிட்டு நிக்குறா. நான் கிட்ட போனதும் கையைக் காட்டி என்னை நிப்பாட்டுனா. நல்ல சுந்தரியா இருந்தா. அந்தப் பக்கம்லாம் தெலுங்குக்காரங்க அதிகம். எல்லாம் மூக்கும் முழியுமா நல்லாத்தான் இருக்கும். என்ன வேணும்னு கேட்டேன். வாயைத் தொறந்து எதுவும் சொல்லமாட்டேங்கிறா. நான் போற வழியைப் பார்த்துக் கையைக் காட்டினா. சரி, சைக்கிள்ல கூட்டிக் கொண்டு விடணும்னு கேட்குறான்னு புரிஞ்சுக்கிட்டேன். கேரியல்ல ஏறி இருன்னு சொன்னேன். ஆனா ஏற மாட்டேங்கிறா."

"அந்த நேரத்துல... ஏய்... யாரு நீ? உனக்கு இங்கென்ன வேலைன்னு ஒரு ஆம்பிளைச் சத்தம் எங்கேயோ கேட்குற மாதிரி இருந்தது. எனக்கு நல்லா போதம் இல்லை. ஆனா குரல் கேட்குது. லேசா மங்கலா ரோடு தெரியுது

"ஏன் மாமா?" -எதுவும் புரியாத மாதிரி ஐயப்பன் கேட்டான்.

"சைக்கிள் இரும்புல்லால்ல. அது இரும்பை எப்படி தொடும்? அப்ப எனக்கு அது புரியல்ல. நானும் கேரியல் கம்பி குத்தும்போலன்னு நினைச்சுட்டு குளிருக்கா வேண்டி கழுத்துல போட்டிருந்த மப்ளர் துணியை எடுத்து கேரியல்ல போட்டேன். அப்புறம் அதுல ஏறி இருந்துக்கிட்டா. நானும் சைக்கிளை மிறிக்க ஆரம்பிச்சேன். கொஞ்ச தூரம் சாதாரணமாத்தான் இருந்தது. அரை கிலோ மீட்டர் போனதுக்கு அப்புறம்தான் என்னால சைக்கிளை மிதிக்க முடியலல்ல. கேரியல்ல கனம் கூடிக்கிட்டே வருது. லேசா ஓரக்கண்ணால கேரியல்ல பார்த்தேன்..."

"என்னாச்சு மாமா?" -இது கோலப்பன்.

"அந்தப் புள்ளை அப்படியேதான் இருக்குறா. என்னைப் பார்த்துச் சிரிச்சுக்கிட்டே இருக்கா. எனக்கு என்னமோ உள்ளுக்குள்ளே ஆகுது. என்னென்னு சொல்லத் தெரியல. நானும் பேசாம சைக்கிளை மிறிச்சேன். ஆனா கொஞ்ச நேரத்துல பாரு... கேரியல் செக்கு கனம் கனக்குது. அந்தக் குளிர்லயும் எனக்கு லேசா வெசர்க்க ஆரம்பிச்சுது. திடீர்னு அந்தப் புள்ளை என்ன நினைச்சுதோ தெரியல. என் இடுப்பைத் தொட்டது மாதிரி இருந்தது. அப்ப இளவட்ட வயசுல்லா. எனக்கு ஒருமாதிரி வந்துது. லேசா இந்திரியம் ஒழுகுற மாதிரி தோணுச்சு..." -மாமா சொல்லிவிட்டு நிறுத்தியதும்...

ஐயப்பனும் கோலப்பனும் ஒருத்தரையொருத்தர் பார்த்து நமுட்டுச் சிரிப்பு சிரித்துக் கொண்டார்கள். எனக்கும் லேசாகச் சிரிப்பு வந்தது. ஆனால் பெருமாள் மாமா அதையெதையும் கவனித்தது போலத் தெரியவில்லை.

"அவ்வளவுதாம்ல... அதுக்கு மேல என்னால சைக்கிளை மிறிக்க முடியல. நான் சைக்கிளோட சாய்ஞ்சு விழுந்தேன். இடது காலை தரையில ஊணலாம்னு பார்த்தா அதுக்குக்கூட ஏலாமப் போச்சு. நான் அப்படியே மண்ணுல விழுந்து கிடக்கேன். அந்தப் புள்ளை அப்படியே சைக்கிள்லயிருந்து இறங்கி நிக்குறா. இவ்வளவு நேரமும் நான் சைக்கிளைப் பிடிச்சுட்டுல்லா வந்தேன். இரும்பு... என்னைத் தொடாம இருந்தவ. இப்ப என்னையப் பார்த்து சிரிச்சுக்கிட்டே வந்து என் மேல கையை வைக்க வந்தா...." -சொல்லும்போதே மாமாவின் கைகளில் ரோமம் எழும்பியது. அவர் உடம்பெல்லாம் புல்லரிப்பது எனக்குத் தெரிந்தது.

"அந்த நேரத்துல... ஏய்... யாரு நீ? உனக்கு இங்கென்ன வேலைன்னு ஒரு ஆம்பிளைச் சத்தம் எங்கேயோ கேட்குற மாதிரி இருந்தது. எனக்கு நல்லா போதம் இல்லை. ஆனா குரல் கேட்குது. லேசா மங்கலா ரோடு தெரியுது. குரல் வந்த திசையில அந்தப் புள்ளை திரும்பிப் பார்க்குறா. பொசுக்குன்னு அவ கண்ணுல ஒரு பீதி. என்னைத் தொட வந்தவ என்னைய விட்டுட்டு குரல் வந்த திசைக்கு எதிர்த் திசையில ஓட ஆரம்பிச்சா. இப்பதான் நானும் குரல் வந்த திசையில பார்த்தேன். நாலைஞ்சு பேரு. துலுக்கமாருங்க. பள்ளியில பாங்கு ஓதிகிட்டு வாராங்க. அதுல வயசான ஒருத்தர் கையில ஒரு துணி. அவரு அந்தத் துணியைச் சுழட்டிட்டே ஓடி வர்றாரு. இந்தப் புள்ளை அவருக்கு பயந்துக்கிட்டுத்தான் ஓடுது..."

"அவரைக் கண்டு இவ ஏன் ஓடுனா?" -கோலப்பன் சந்தேகத்தோடு கேட்டான்.

"என்னத்தலே கேட்குறே? அவரு பள்ளியில மந்திரம் ஓதிக்கிட்டு வாராரு. அந்தத் துணியில சக்தி இருக்கும்லாலே. அவரு அந்தத் துணியைச் சுழட்டுறதைப் பார்த்து இந்தப் புள்ளை ஓடுது. அவங்க எல்லாரும் என்கிட்டே வந்துட்டாங்க. அதுல ரெண்டு பேரு என்னையைத் தூக்கினாங்க. அந்தப் பெரியவரும் கூடவே ரெண்டுபேரும் அந்தப் புள்ளையைத் துரத்திக்கிட்டே ஓடுறாங்க. அவளும் வீல்னு அலறிக்கிட்டே ஓடுறா. இனிமே இந்தப் பக்கம் உன்னைப் பார்த்தேன்னா சும்மா விடமாட்டேன்னு சொல்லிக்கிட்டே அந்தப் பெரியவரு துணியைச் சுழட்டிட்டு ஓடுறாரு. ரெம்ப தூரம் ஓடி அவளைத் துரத்திவிட்டுட்டு வந்தாங்க. என்கிட்டே வந்த ரெண்டுபேரும் என்னைத் தூக்குனாங்க. ஏன் தம்பி நேரம்கெட்ட இந்த நேரத்துல இப்படி தனியா வரலாமான்னு கேட்டாங்க. நான் திருதிருன்னு முழிச்சுக்கிட்டு இருந்தேன். சரிசரி... பாத்து கவனமா போன்னு என்கிட்டே சொல்லிட்டு எல்லாருமா கிளம்புனாங்க. எனக்கு சைக்கிளை ஓட்ட முடியல. நான் உருட்டிக்கிட்டே ஒரு வழியா தங்கியிருந்த இடத்துக்கு வந்து சேர்ந்துட்டேன்..." -சொல்லி முடித்த மாமா பெருமூச்சு விட்டார்.

"மாமா! கதை நல்லாத்தான் இருக்கு. இந்தக் கதையெல்லாம் உம்ம வீட்ல சொல்லியிருக்கீறா?" -கேட்ட என்னைக் கூர்ந்து பார்த்தார்.

"ஏலேய்... கல்யாணத்துக்கு முன்னாடி நடந்த பல கதைகளை பொண்டாட்டிக்கிட்டே ஆம்பிளைங்க சொல்ல மாட்டாங்கலே. செரல்லவும் கூடாது. இது ஆம்பிளைக்கு மட்டுமில்லை, பொம்பளைக்குந்தான். அவளும் மாப்பிள்ளைக்கிட்டே எல்லாத்தையும் சொல்லக்கூடாது. அப்படியிருந்தாத்தான் குடும்பம் ஒழுங்கா நடக்கும். ரெம்ப அன்னியோன்னியமான புருசன் பொண்டாட்டின்னு சொல்றாங்கல்ல. அவங்களும் அப்படித்தான் இருப்பாங்க. இப்ப நீங்க என்னென்ன செய்யுறீங்கன்னு எல்லாத்தையும் உங்களுக்குக் கல்யாணம் ஆன பிறகு பொண்டாட்டிக்கிட்டே சொல்ல மாட்டீங்கலே. சத்தியம் பண்றேன்..." -மாமா சற்று உணர்ச்சிவசப் பட்டிருந்தார்.

கொஞ்ச நேர அமைதியாய் இருந்தோம்.

"ஏன் மாமா! அந்த பள்ளியில ஓதுற ஆம்பிளைங்க அந்த நேரத்துல வரலைன்னா நீரு அந்தப் புள்ளையைக் கெடுத்திருப்பீரா? அல்லது அந்தப் புள்ளை உம்மைக் கெடுத்திருக்குமா? கறுப்பா உசரமா இருக்கிற ஆம்பிளைகளைப் பொம்பளைப் புள்ளைங்களுக்கு ரெம்பப் பிடிக்குமாமே. ஒரு சினிமாலகூட வசனம் வருது. அதனால கேட்குறேன்..." -முகத்தை சீரியஸாக வைத்தபடி மாமாவிடம் ஐயப்பன் கேட்டான்.

"போங்கலே! போக்கத்தப் பயலுகளே. உங்கக்கிட்டே போய் கதையைச் சொன்னேன் பாரு. இப்ப உங்களை மாதிரி பயலுகளுக்குப் பயந்துக்கிட்டுத்தான் அதுக மயானத்தைவிட்டு வெளியே வரதில்லை. சோலியைப் போய் பாருங்கலே..." -முகத்தை உர்ரென்று வைத்தபடி, நிறுத்தி வைத்திருந்த சைக்கிளை எடுத்துக் கொண்ட பெருமாள் மாமா சைக்கிளை உருட்டியபடியே நடந்தார்.

ஒரு மாதத்திற்கு முன்பு இதுபோலொரு கதையைச் சொல்லி முடித்துவிட்டு இப்படித்தான் கோபித்துக் கொண்டு போனார் மாமா. ஏன், அதற்கு சில மாதங்களுக்கு முன்பும். •

ஆ.ஆனந்தன்



பாத்திரங்களை ஒவ்வொன்றாக நன்றாகக் கழுவி, அலசி பக்கத்தில் வெயிலில் கவிழ்த்து வைத்தான். அவனுக்கு உதவியாக இருந்த செல்லப்பா "ஏண்ணே இப்படி வெயிலைக் கண்டு பயப்படுறீங்க, இப்பப் பாருங்க வெயில் இருக்கிறதனால பாத்திரமெல்லாம் நல்லா பள பளன்னு வெரசா ரெடி ஆயிருதில்ல" என்றான்.

''போடா மூதி அப்புறம் நாமதாண்டா வெயில்ல போய் வியாபாரம் பண்ணனும். நான் அத நினைச்சுதாண்டா புலம்பிக்கிட்டு இருக்கேன்"

"சரிண்ணே கொஞ்சம் லேட்டாப் போனாப் போச்சு"

"லேட்டாப் போனா நம்ம பதிவு இடம் போயிருமேடா"

"ஆமால்ல. சரிண்ணே கிளம்பலாம் சரியா இருக்கும்"

நாகு, திருநெல்வேலி பக்கத்தில் ஒரு கிராமத்தில் நன்கு வாழ்ந்து கெட்ட குடும்பம். அப்பாவும் அம்மாவும் இறந்து போகும் பொழுது நாகுக்கு பதினெட்டு வயசுதான் இருக்கும். பக்கத்து வீட்டு இசக்கியா பிள்ளை கூப்பிட்டார்ன்னு அவருக்குத் துணையாக சமையல் வேலைக்கு வந்தவன்தான் மதுரைக்கு. இப்ப நாகுக்கு இருபத்தியேழு வயசாச்சு இன்னும் ஊர்ப் பக்கம் போகவில்லை. நாலு பேர் மதிக்கிற அளவுக்கு ஒரு வாழ்க்கை வந்த பிறகுதான் கிராமத்துக்குப் போகணும்னு ஒரு முடிவோட இருக்கான்.

மதுரைக்கு வந்த பிறகுதான் தெரிந்தது இசக்கியாபிள்ளை சமையலுக்கு கூப்பிடவில்லை, தள்ளு வண்டியில் சுண்டலும், வடையும் போட்டு மேலக் கோபுர வாசல் தெருவில் சென்ட்ரல் சினிமாப் பக்கம் தெருவில் வண்டியோடு நின்று கொண்டு வியாபாரம் செய்ய துணைக்கு ஆள் தேவைக்காக கூட்டிட்டு வந்திருக்கார்ன்னு. ஊர்ல ஒரு போக்கும் இல்லாம சுத்திக் கொண்டிருந்த நாகுக்கு இதுவே ஒரு பெரிய விஷயமாக இருந்தது. கழுதை தேய்ஞ்சு கட்டெறும்பான கதைதான்னு யாரும் சொல்றதக்கு முன்னால நாமும் ஒரு இடத்துக்கு வந்திரணும்ன்னு ஒரு வெறியில அவர் கூட இருந்துகொண்டே கொஞ்சம் தொழிலும் கத்துகிட்டான்.

சொக்கக் கொத்தன் தெருவிலிருக்கிற மடத்தில ஒரு மூலையில் முனியாண்டி சாமி சன்னதிக்கு பின்னால பிளெக்ஸ் சினிமா போஸ்டர், சாக்கு, பல நிற படுத்தாக்களைக் கொண்டு போடப்பட்ட ஒரு சின்ன குடிசையில் வாசம். நியூ சினிமா பக்கத்தில இருக்கிற பொது கழிப்பறை, குளியலறையில் மற்றதெல்லாம். காலையில் ஹரி விலாசில் இரண்டு இட்லி, ஒரு காரா வடை ஒரு சுக்கு மல்லிக் காபி. மதியம் அநேகமாக சாப்பாடு கிடையாது. இரவில் விற்றது போக மிச்சம் இருக்கிற சுண்டல், வடை, எப்பவாவது அது அநேகமாக மழை பெய்கிற இரவு நேரமாக இருக்கும், இரண்டாவது ஆட்டம் சினிமா, மற்றபடி ஒரு கஷ்டமுமில்லாமல்தான் வாழ்க்கை ஓடிக் கொண்டிருந்தது.

எல்லாம் இரண்டு வருஷம்தான். இசக்கியா பிள்ளையின் அளவுக்கு அதிகமான குடியும், ஆர்.எம்.எஸ் பக்கத்துக்கு அடிக்கடி போய் வர்றதுன்னு முறையற்ற வாழ்க்கையினால் மரணம் அவரை தழுவிக் கொண்டது. அதற்குள் நாகு அவரிடம் தொழில் கற்றுக் கொண்டதுமில்லாமல் அவர்களின் கஸ்டமர்களையும் கவர்ந்து வைத்திருந்தான். நாகுக்கு ஒரு கெட்ட பழக்கமும் கிடையாது. வெள்ளிக்கிழமை தவறாமல் மீனாட்சி அம்மன் கோவிலுக்கும், தினமும் இன்மையில் நன்மை தருவார் கோயில் ஒரு நாள், மதனகோபால் சாமி கோயில் ஒரு நாள், கூடலழகர் பெருமாள் கோயில் ஒரு நாள் என்று முறை வைத்து போய்விடுவான். இதையெல்லாம் இசக்கியா பிள்ளை கிண்டல் பண்ணிக் கூடப் பார்த்தார். சும்மா இருங்க அண்ணாச்சி நான் பாட்டுக்குப் போறேன் உங்களையா கூப்பிடுதேன்னு சொல்லிக் கொண்டே போய் வந்து விடுவான்.

இசக்கியா பிள்ளை இவனுக்கு விட்டுச் சென்றது ஒரு நான்கு சைக்கிள் சக்கரங்கள் பொருத்திய, ஒரு தள்ளு வண்டி. அதில் ஒரு தகரக் கூரை இருக்கும். வண்டியின் முகப்பு கீழ்புறம் தகரத்தால் அடைக்கப்பட்டு நெல்லை இசக்கி பலகாரங்கள் என எழுதப்பட்டிருக்கும். இவன் அதை நன்றாகப் புதுப்பித்து, வைத்துக் கொண்டான். இவன் அதில் ஒரு குடையும், ஒரு ஸ்டூலும் சேர்த்துக் கொண்டான். மற்றபடி, ஒரு சிறு மண்ணெண்ணெய் அடுப்பு, ஒரு இருப்புச் சட்டி, இரண்டு கரண்டி, பத்து ஸ்பூன்கள், பத்து பீங்கான் சாசர் மட்டும், வடை எடுத்து வைக்க இரண்டு எவர்சில்வர் தாம்பாளங்கள், மூன்று

# கலையும் ஒப்பனைகள்



வகை சுண்டல்களுக்குரிய எவர் சில்வரில் மூன்று உயரச் சட்டிகள் ஒரு பிளாஸ்டிக் கப் இரண்டு சிறிய வாளிகளையும் அண்ணாச்சி இவனுக்கு விட்டுச் சென்றிருந்தார்.

இவைகளைத்தவிர வியாபாரத்தின் புதுவரவு செல்லப்பா. தென்காசிப் பக்கமிருந்து வீட்டை விட்டு ஓடி வந்து இவனிடம் பசிக்குதுன்னு கை நீட்டி நின்றவனை அப்படியே வேலைக்கு சேர்த்துக் கொண்டான். அவனும் இவனுக்கு ஒரு அடிமையைப் போல இருந்து உதவிக் கொண்டிருந்தான்.

சாயுங்காலம் சென்ட்ரல் சினிமா வாசலில் கடை போட்டால் இரவு பதினோரு மணி வரை வியாபாரம் நடக்கும். இடையில் போலீஸ் தொந்தரவு இல்லையென்றால் அங்கேயே இருந்து வியாபாரத்தை முடித்து விட்டு வீடடைய பனிரெண்டு மணியாகிவிடும். போலீஸ் தொந்தரவு இருந்தால் வண்டியை அப்படியே டவுன்ஹால் ரோடு வழியாக தள்ளிக் கொண்டே ரயில்வே ஸ்டேசன் வரை போய் பஸ் ஸ்டாண்டு, பெருமாள் கோவில், மீனாட்சி டாக்கீஸ்ன்னு சுத்தி வந்து வியாபாரம் முடிய சில நேரம் இரண்டாம் ஆட்டம் முடிகிற நேரம் ஆகிவிடும்.

இன்னும் இரண்டு நாட்களில் தமுக்கம் மைதானத்தில் சித்திரைத் திருவிழா தொடங்கிவிடும். அங்கே போய் வண்டியை நிறுத்தினால் கொஞ்சம் நல்ல வியாபாரம் ஆகும். கார்ப்பரேஷன் அதிகாரிகளுக்கும், போலீஸ்காரர்களுக்கும் கொடுக்க பணம் தனியாக எடுத்து வைத்துவிட்டான். பழைய நியூஸ் பேப்பர் வாங்கி பொட்டலம் போட வசதியாகக் கிழித்து வைத்து விட்டான். வடை சுட புது எண்ணெய், சுண்டல் வகையறாக்களுக்கு கீழமாசி வீதியில் போய் தேங்காய், பருப்பு வகைகளையெல்லாம் நல்ல நயம் சரக்காக வாங்கி வைத்துவிட்டான்.

“செல்லப்பா நாளைக்கு ஒரு நாள் லீவுடா”

“ஏண்ணே”

“இன்னைக்கு வெள்ளிக் கிழமையா, ஞாயித்துக்கிழமையிலிருந்து நாம தமுக்கத்தில பொருட்காட்சிக்கு. போகணுமில்ல”

“சரிண்ணே”

ஞாயிற்றுக் கிழமை காலை ஆறு மணிக்கே இருவரும் வண்டியத் தள்ளிக் கொண்டு தமுக்கம் நோக்கி நடக்கத் தொடங்கினார்கள். அங்கே போய் சேரும் பொழுது மாலை

***சித்திரைப் பொருட்காட்சி நிறைவேறும் சமயம் அடிக்கடி சந்தித்த ராணி இவனைத் தேடி வரவேயில்லை. நாகு அவளைத்தேடி ஒரு இரவு போகும் பொழுது, உள்ளே உட்கார்ந்து அழுது கொண்டிருந்தாள்.***

மூன்று மணிக்குத் தொடங்க இருந்த பொருட்காட்சிக்காக வேலைகள் மும்முரமாக நடந்து கொண்டிருந்தன.

வாசலிலேயெ நிறுத்தி பாஸ் இருக்கான்னு கேட்ட செக்யூரிட்டி கையில் பணத்தைத் திணித்துவிட்டு உள்ளே நுழைந்து திசையெல்லாம் பார்த்து நாள் முழுவதும் வெயிலில்லாமல் நிழலாக இருக்கும் ஒரு இடமாகப் பார்த்து வண்டியை நிறுத்திவிட்டு மற்ற வேலைகளைப் பார்க்கத் தொடங்கினான், நாகு. செல்லப்பா பரபரப்பாகி வேலைகளை நாகுக்கு இலகுவாக்கினான். இரண்டு நாட்களில் பொருட்காட்சிக்கு எல்லா அரங்குகளும் வந்து விட பொருட்காட்சி களை கட்டத் தொடங்கியது. இவனுக்கு நேர் எதிரில் டில்லி அப்பளம் ஸ்டால் வந்ததில் இவனுக்குக் கொஞ்சம் வருத்தம் இருந்தாலும் வியாபாரம் ஒன்றும் குறையவில்லை என்கிற சந்தோஷமும் இருந்தது. எல்லாம் நம்ம கையிலேல்லடா இருக்குன்னு செல்லப்பாவிடம் சொல்லிக் கொண்டான்.

மூன்றாம் நாள் மாலையில் இன்னும் பொருட்காட்சிக்கு யாரும் வராத அந்தி வேளையில், “ஏங்க இங்க எங்க குழாய் இருக்குன்னு” கேட்டுகிட்டே எதிரில் வந்து நின்றவள்தான் ராணி. இவன் “என்ன குழாய் ன்னு” கேட்க என்றான்.

“என்ன நக்கலா” தண்ணிக் குழாயத்தான் கேக்கேன்” ”இங்க வேற எதுவும் குழாயில வருதான்னு” கேட்டாள். “அய்ய இந்த விருதாப் பேச்சுக்கு ஒண்ணும் குறைச்சலில்ல, நான் கேட்டது தண்ணிக் குழாயா, குடிக்கிற தண்ணி குழாயான்னு” என்றான். “அப்படியா, குடிக்கிற தண்ணிக் குழாய்தான் கைல பாட்டில் இருக்கு பாக்கலியாண்ணு” என்றாள். “பாட்டில் எங்க தெரியுதுன்னு சொல்லி சிரித்துக் கொண்டே, அங்க வடக்க ஒரு ஊதாக் கலர் டிரம் தெரியுதா

அதுக்குப் பின்னால போய் பாரு குழாய் இருக்கும். மத்த தண்ணிக்கெல்லாம், தெற்க போணும் சரியா என்றான். சரிதான், தப்பாவா சொல்லப் போறீக, சொல்லிக் கொண்டே வடக்கே நடக்கத் தொடங்கினாள்.

ஒரு வார இடைவெளியில் ஒரு மதியம் மும்முரமாக சுண்டலுக்கு தேங்காய் துருவிக் கொண்டிருந்த நாகு பக்கத்தில் யாரோ நிற்பது போலத் தோன்ற பார்த்தான் இவள்தான்.

"என்ன இந்தத் துருவு துருவிறீக, நல்லா சமையல் வருமோ" என்றாள்.

"ஆமா. நான் சுண்டல் விக்கிறேன், நீ என்ன பண்றே"

"நாந்தான் கடல் கன்னி தெரியாதா" என்றாள்.

"அடிப்பாவி நீதான் அந்த ஏமாத்துக்காரியா" என்றான்.

"ஏமாத்துறோம்னு தெரிஞ்சும் அவ்வளவு கூட்டம் வருதேய்யா"

"சரி கடல் கன்னி பேர் என்ன"

"கடல் கன்னிதான்"

"ஏட்டி பேரைச் சொன்னா என்ன குறைஞ்சா போயிருவே, என் பேரு நாகு, நாகராஜன்" என்றான்.

"ராணி" என்றாள்.

"என்னய என்ன நீ பாட்டுக்கு ஏட்டின்னு கூப்பிட்ட, எந்த ஊரு"

"திருநெல்வேலிப் பக்கம்" என்றான்.

"நான்கூட சுரண்டைப் பக்கம்தான்"

"அப்படியா நம்மாளா போயிட்டியே" என்றான்.

"நான் என்ன உன் ஆளா" ன்னு சொல்லிக் கொண்டே இவனது ஸ்டூலில் உட்கார்ந்து கொண்டாள்.

"ஏயப்பா, என்னா கோபம் வருது, நம்ம ஊர் பக்கம்ன்னு சொல்றததான் அப்படி சொல்லீட்டேன்"

"பரவாயில்ல....பரவாயில்ல"

கொஞ்ச நேர மௌனத்திற்குப் பிறகு, சுண்டல் ரெடியா சாப்பிடக் கிடைக்குமான்னு கேட்டாள். அவிச்சு, தாழிச்சு வைத்திருந்த சுண்டலை எடுத்து ஒரு சாசரில் போட்டு துருவிய தேங்காயை கொஞ்சம் அதிகமாக அதன் மேலே தூவி ஒரு ஸ்பூன் போட்டுக் கொடுத்தான். ராணி சாப்பிட ஆரம்பித்தாள், என்ன உப்புலெம்மாம் கரெக்டா இருக்கான்னு கேட்டான்.

"நாகு பிரமாதம். நல்லா சமையல் வரும்போல"

"சமையலெல்லாம் வராது சுண்டலும் வடையும் நல்லாப் போடுவேன்"

"சரி, ராணி உங்கூட யார் இருக்கா, வீட்டுக்காரரா"

"கொஞ்சம் கொழுப்புதான்யா உனக்கு இப்படி வெறுங்கழுத்தோட இருக்கேன், வீட்டுக்காரரான்னு கேட்கிறேயே, அவர் எங்க அப்பா"

''சரி அந்தத் தொட்டிக்குள்ள எப்படி அவ்வளவு நேரம் படுத்துக் கிடக்க. கண்ண வேற சிமிட்டவே மாட்டேங்கிற. எதுவும் மருந்து சாப்பிடுவியா?"

யோவ் உனக்கு உண்மையிலேயே கொழுப்புத்தான்யா, எல்லாம் பயிற்சிதான்யா. சரி சரி நான் போறேன், இப்பப்போய் கண்ணாடி முன்னால உட்காந்தாத்தான் ஆறு மணிக்கு படுக்க முடியும். நாகு ஐந்தரை மணிக்கு வா, நான் தொட்டிக்குள்ள படுக்கிறேனா இல்ல தொட்டிக்குப் பின்னால படுக்கிறேனான்னு பாக்கலாம்ன்னு சொல்லிக் கொண்டே சேலை தலைப்பை கொஞ்சம் கஷ்டப்பட்டு இழுத்து விட்டுக் கொண்டு கிளம்பினாள்.

நாகு சாரத்தை இறுக்கிக் கட்டிக் கொண்டு, செல்லப்பாவைத் தேடினான், நல்ல வேளை அவன் அங்க இல்லை.

இரண்டு நாள் கழித்து மீண்டும் ராணி காலை நேரத்தில் தேடி வந்தாள். "என்ன நாகு இன்னும் குளிக்கலயா"ன்னு கேட்டுக் கொண்டே.

இல்லை ராணி கொஞ்ச நேரம் ஆகும். கடல் கன்னி சௌக்கியமா, கடல் கன்னி வடை சாப்பிடுமான்னு கேட்டுக் கொண்டே பீங்கான் தட்டில் இரண்டு வடையை வைத்து நீட்டினான். ராணி நேத்தைய வடைதான் தப்பா எடுத்துக்காதன்னு சொல்லிக் கொண்டே கொடுத்தான். யோவ் பேசாம இரு வடை சூப்பரா இருக்கு, சட்னி இருந்தா இன்னும் சூப்பரா இருக்கும் என்றாள், ஊகும் சட்னி ஊசிப் போச்சு. நாளைக்கு வா காலையிலேயே கொஞ்சமா அரைச்சு வைக்கிறேன்னு சொன்னான். வந்துட்டாப் போச்சு என்றாள்.

கையைக் கழுவிக்கொண்டே, ”உன்னய மாதிரி வடைப் போட பழகினோம்ல இப்படி படுத்துக்கிட்டு, எனக்குக் கொஞ்சம் கூட பிடிக்கல”

“ஏன் ராணி, இதுவும் ஒரு தொழில்தானே”

“நீதான் மெச்சிக்கணும்” “ஒவ்வொருத்தனும் முன்னால வந்து நின்னுக்கிட்டு என்ன என்ன பேசுரான்னு எனக்குத்தான தெரியும், பதிலும் பேச முடியாது, கண்ணையும் சிமிட்ட முடியாது, உடம்பையும் அசைக்கக் கூடாது எனக்கு எப்படி இருக்கும் தெரியுமா”

“.............................”

“என்ன அசிங்கமா பேசுவாங்க தெரியுமா” “நேத்து ஒருத்தன் அவன் பிரண்டுகிட்ட சொல்றான் யப்பா எவ்வளவு பெரிசுன்னு” அதுக்கு அவன்பிரண்டு “எதைச் சொல்றேங்கிறான்”

“எதச் சொன்னாங்க”

“ஏய் நாகுன்னு ஒரு பொய் கோபத்துடன் கையை ஓங்கிக் கொண்டு அடிக்க வந்தாள்”

“சரி இதுக்கு எதுக்கு கோபம், உண்மைதான” என்றான்.

ராணிக்கு கண்களிலிருந்து பொல பொலன்னு கண்ணீர் வடிய ஆரம்பித்தது, நீயுமா, நான் என்ன எல்லாருக்கும் காட்றதுக்கா வச்சுருக்கேன்” என்றாள்.

நாகு பக்கமாக நெருங்கி வந்து அவள் கைகளைப் பற்றிக் கொண்டு நீ இவ்வளவு வருத்தப்படுவேன்னு எனக்குத் தெரியாது, சும்மா கிண்டல் பண்ணேன்” என்றான்.

“இனிமே கிண்டல் பண்ணக்கூடாது” என்றாள்.

“சரி உங்கப்பாகிட்ட சொல்லி வேற தொழிலுக்கு மாற வேண்டியதுதான”

“அதுக்கு இருபத்தி நாலு மணி நேரமும் சாராயத்துக்கு காசு வேணும் அதுக்கு இதுலதான நல்ல காசு வருது. இரண்டு ரூபாயக் கொடுத்துட்டு எவ்வளவு நேரம் வேணாம்னாலும் நின்னு நிதானமா பாக்கலாம், எனக்குக் காது கேட்கும் தெரிஞ்சே அசிங்க அசிங்கமா பேசலாம், அதுக்குத்தான திரும்பத் திரும்ப வர்றாங்க”

“சரி விடு, நான் வேண்ணா உங்க அப்பாகிட்ட பேசவா”

”உடனே அந்தாளு நீயென்ன அவளுக்கு வக்காலத்து அவள வச்சிருக்கியான்னு வாய் கூசாம கேட்பான்”

“அய்யோ ராணி நான் வரலப்பா” “நீ வேணா என் கூட வந்து சேர்ந்திரேன்”.

“போய்யா என்ன இருந்தாலும் அவன் என் அப்பந்தான் விட்டுட்டு வர முடியாது”

“சரி ராத்திரி உன் ஷோ பாக்க வர்றேன், எத்தன மணிக்கு வர்ற”

“”ஒம்பது மணிக்கு மேல வா, ஆளே இருக்காது”

“நீ, இருப்பியா”

“சீ வா”ன்னு மூக்கை ஒரு மாதிரி சுருக்கி வழிப்புக் காட்டிக் கொண்டே கவர்ச்சியாக நடந்து போனாள். போனவள் கொஞ்ச தூரத்தில் திரும்பி வந்து, உனக்கு என்ன கலர் பிடிக்கும் என்றாள், எனக்கு புளூன்னா ரொம்பப் பிடிக்கும் ஏன் என்றான், அவள் சிரித்துக் கொண்டே அவசியம் வரணும் சொல்லிக் கொண்டு நடந்தாள்.

மாலையிலிருந்து நாகு ஒரு பரபரப்புடன் இயங்கிக் கொண்டிருந்தான், செல்லப்பா அவனைக் கவனித்துக் கொண்டே அவனுக்கு சமமாக வேலைகளை இழுத்துப் போட்டு செய்து கொண்டிருந்தான். ஒன்பது மணிக்கு முகம் கழுவி அழுந்தத் துடைத்துக் கொண்டு சட்டையை மாற்றிக் கொண்டு, செல்லப்பா கொஞ்ச நேரம் பாத்துக்க நான் போய் இந்த ராணியைப் பாத்திட்டு வந்துர்றேன்னு நகர்ந்தான்.

ராணியின் அப்பா வாங்க வடை வண்டி தம்பியில்ல போங்க போய் பாருங்க டிக்கெட் எல்லாம் வேண்டாமென்று சொல்லிக் கொண்டே உள்ளே அனுமதித்தார். நல்ல இருட்டில் ஒரு தண்ணீர் தொட்டியில் விளக்கு எரிய தொட்டிக்குள் அல்லது தொட்டிக்கு அந்தப்புறம் ராணி கண்ணைக் கவரும் புளூ மேலலங்காரத்திலும், இடுப்புக்கு கீழே வெள்ளையும் மஞ்சளும் கலந்த மீனின் உடல் போல தைக்கப்பட்டிருந்த ஆடைகளையும் அணிந்து கொண்டு ஒரு கையை தலைக்குத் தாங்கு கொடுத்துக் கொண்டும், இன்னொரு கையை பெருமாளைப் போல உடம்பில் வைத்துக் கொண்டும் படுத்துக் கிடந்தாள். கால்களில் இருந்த செதில்கள் இலேசாக ஆடிக்கொண்டிருந்தது. நாளைக்கு எப்படீன்னு

ராணிகிட்ட கேட்கணும்னு நினைத்துக் கொண்டே பார்த்துக் கொண்டிருந்தான், அவள் இமைக்காமல் அப்படியே கிடந்தாள். இன்னும் கொஞ்சம் ஒளியைக் குறைத்தால் அப்படியே கடல் கன்னிதான்னு நினைத்துக் கொண்டு அவளைப் பார்த்து சிரித்தான், அவள் அப்படியே கிடந்தாள். சரி போகலாம்ன்னு திரும்ப இவனைப் பார்த்து கண்ணடித்தாள். இவனும் பதிலுக்குக் கண்ணடிக்க, கண்களாலேயே, புளு டிரஸ் எப்படி என்று கேட்டான், அவள் கேட்டது இவனுக்கு வேறு மாதிரி புரிய கையாலேயே கொஞ்சம் பெரிசுதான்னு சைகை செய்ய அவள் சீன்னு பொய்க் கோபம் காட்டினாள். இவன் கடிகாரத்தைக் காட்டி ஒரு மணிக்கு வர்றேன்னு சொல்லிவிட்டு அவளைப் பார்த்து கண்ணடித்துவிட்டு கிளம்பினான். அவள் சிரித்துக் கொண்டாள்.

ஒரு மணிக்கு செல்லப்பா நல்லா தூங்கிட்டானான்னு பார்த்துட்டு சாரத்தைக் கட்டிக் கொண்டு கிளம்பினான். கடல் கன்னி கூடாரம் இருட்டிக் கிடந்தது, உள்ளே மெழுகுவர்த்தி ஏற்றி வைத்தாற் போல் இரவு விளக்கு எரிந்து கொண்டிருந்தது, ராணியின் அப்பா குடியின் போதையில் முனங்கிக் கொண்டே தரையில் உருண்டு கொண்டிருந்தார், இவன் அவரை இலேசாக தொட்டு ஓரமாக படுக்க வைத்தான்.

“அவர் என்ன அங்கேயேவா படுக்கப் போறார் இன்னும் கொஞ்ச நேரத்தில திரும்பி இதே இடத்திலதான் கிடப்பார்ன்னு” குரல் கேட்க ராணி நின்று கொண்டிருந்தாள். இவனுக்கு அவளைப் பார்க்கும் பொழுது ஒரு ராணியைப் போலவே தோன்ற “ராணி” ன்னு ஒரு மாதிரியான குரலில் கூப்பிட்டான்.

“நாகுன்னு சொல்லிக் கொண்டே அவனைக் கையைப் பிடித்து இழுத்துக் கொண்டு உள்ளே போனாள்’ ஒரு பிளாஸ்டிக் நாற்காலியக் காட்டி முதல்ல உட்காருன்னு சொல்லிக் கொண்டே கொஞ்சம் உள்ளே போய் கையில் எதையோ கொண்டு வந்து கொடுத்தாள்.

“இது என்ன”

“சாப்பிட்டுப் பாரு”

“இந்தா நீயும் சாப்பிடுன்னு அவளுக்கு கொஞ்சம் கொடுத்தான்”

அவள் கையை நீட்டாமல் முகத்தை நீட்டினாள், நாகு ஒரு விநாடி திகைத்துவிட்டு அவள் வாயில் கொடுத்தான்”

“ராணி, அல்வா சூப்பர் என்றான்”

”உனக்காகத்தான் வாங்கி வச்சேன்”

இந்தான்னு இன்னொரு வாய் கொடுத்தான். உங்கப்பா எப்பத்தான் தெளிஞ்சு எந்திருப்பார்ன்னு கேட்டான். எனக்கே தெரியாது, நான் காலைலே எட்டு மணிக்கு எந்திருப்பேன் அவரும் உக்காந்திருப்பார் அவ்வளவுதான்.

“சாய்ங்காலம் உன் புளு கலர் டிரஸ் நல்லா இருந்திச்சு ராணி” என்றான்.

“உனக்குப் பிடிக்குமேன்னுதான் போட்டேன், அப்பா கூட நேத்துதான புளுன்னுச்சு நான்தான் இருக்கட்டும்ன்னு சொல்லி சமாளிச்சேன்” “நீ புளு கலரையா பாத்திரிருப்ப, நீயும் ஒரு ஆம்பளைதானய்யா”

நாகு சட்டென்று எழுந்து நின்றான், ராணி பதறிப் போய் “என்ன” என்று கேட்டுக் கொண்டே அவனை நெருங்கி நின்றாள். நாகு அவள் மோவாக்கட்டையை தூக்கி பிடித்து என் கூட வந்திரு கல்யாணம் பண்ணிக்கலாம் என்றான். “நான் ரெடி ஆனா உன் வருமானத்தில எங்கப்பாவுக்கும் சேர்த்து சோறு மட்டுமல்ல சாராயமும் வாங்கி கொடுத்து உனக்கு கட்டுப்படியாகாது, எங்கப்பாவும் அதுக்கு சம்மதிக்காது”ன்னு சொல்லிக் கொண்டே அவள் கழுத்தை இரண்டு கைகளினாலும் கட்டிக் கொண்டாள், நாகு அப்படியே கொஞ்ச நேரம் நின்று கொண்டிருந்தான், அவள் முகத்தை நெருங்கி வந்து “என்ன” என்றாள், நாகு ராணியை இடுப்போடு சேர்த்து அணைத்துக் கொண்டான்.

சித்திரைப் பொருட்காட்சி நிறைவேறும் சமயம் அடிக்கடி சந்தித்த ராணி இவனைத் தேடி வரவேயில்லை. நாகு அவளைத்தேடி ஒரு இரவு போகும் பொழுது, உள்ளே உட்கார்ந்து அழுது கொண்டிருந்தாள். நாகு பதறிப் போய், “ராணி, என்னாச்சு ஏன் அழுகிறன்னு கேட்க” “போய்யா இனி ஒன்னய அடுத்த வருஷம்தான பாக்க முடியும், அதான்” என்றாள்.

“அதான் அடுத்த வருஷம் அவசியம் பாப்போமில்ல”

“அப்ப நடுவில என்ன நினைக்கவேமாட்டியா, நீயில்லய்யா எல்லா ஆம்பிளைகளும் இப்படித்தான்”

“சீ அப்படி நினைக்காத நான்தான் உன்னைய

கட்டிக்கிறீயான்னு கேட்டேன், மாட்டேன்கிற, நான் என்ன செய்ய"

"அட போய்யா அதெல்லாம் நடக்காது, ஆனா நான் சொல்றத கேளு, நாங்க இன்னும் பதினைந்து நாளுக்கு நான் சொன்னேல்ல அந்த ஊர் திருவிழாதான் இருப்போம், நீயும் அங்க வந்து கடையைப் போடேன்."

"இல்ல ராணி மதுரையில எங்க வாடிக்கை இடம் போயிரும், இங்க இருந்தாலாவது இன்னும் ஒரு பத்து வருஷத்திலயாவது உன்னக் கட்டிக்கலாம், மதுரைய விட்டுப் போயிட்டா நாலு காசு சம்பாரிக்க முடியாது"

"சரி நாளைக்கு கிளம்புறோம், முடிஞ்சா திருவிழாவுக்கு ஒரு நாள் வா"ன்னு சொல்லிக் கொண்டே நாகுவை முதுகுப் பக்கமாக இறுக்கிக் கட்டிக் கொண்டாள்.

"செல்லப்பா நான் எங்கேயாவது ஊருக்குப் போனா, தனியா இரண்டு நாள் சமாளிச்சுருவியாடா'

"என்னண்ணே நீங்கள் போயிட்டு வாங்க நான் பாத்துகிறேன்னு" செல்லப்பா சொன்னதும், இருக்கிறதிலேயே நல்ல சட்டையும், பேண்ட்டும் போட்டுக் கொண்டு ராணியை தேடிப் புறப்பட்டான்.

முதலில் ஒரு மணி நேர ரயில் பயணம் பிறகு அரை மணி பஸ் பயணமுமாக ராணி சொன்ன திருவிழா ஊரை வந்தடைந்தான். முல்லையாற்றாங்கரையில் ரோட்டுக்கு தெற்குப் பக்கம் கோவிலும், வடக்குப் பக்கம் ஒரு பெரிய மைதானமுமாக இருந்தது ஊர். கோவிலில் ஒரு வார காலம் திருவிழாவும், மைதானத்தில் பதினைந்து நாட்களுக்கு கேளிக்கைகளுக்கும் அனுமதி உண்டு என்று ராணி சொல்லியிருக்கிறாள்

மைதானத்தில் ராட்டினம், சிறிய சர்க்கஸ், பெரிய ஜெயண்ட் வீல் ராட்டினம், துப்பாக்கி சுடுதல், பலூன் உடைத்தல், சின்னப் பிள்ளைகள் விளையாட ஒரு குகை போன்ற அமைப்பு, சிறிய ரயில் வண்டி, பிள்ளைகள் ஓட்டி மோதி மோதி விளையாட ஒரு கார் மைதானம், பல வகையான சூதாட்டம், சர்பத் வண்டி பலூன் வண்டி, ஜவ்வு மிட்டாய், பஞ்சு மிட்டாய், சுண்டல் வண்டி எல்லாம் இருந்தது. மைதானத்தின் நடுவில் ஒரு உயரமான கூடாரம், அது ஒரு பிரமிட் போல எந்தப் பக்கம் இருந்து பாத்தாலும் முக்கோணமாகத் தெரிகிற மாதிரி ஒரு அமைப்பு, அநேகமாக நடுவில் ஒரு உயர தடியில் மேலிருந்து கீழாக எல்லாப் பக்கமும் இறக்கி பலத்த ஆணிகளால் தரையோடு நன்கு அறையப்பட்ட ஒரு கூடாரம்.

**மீண்டும் ராணியைத் தேடினான், எங்கும் அவள் தென்படவில்லை. கொஞ்ச நேரம் உட்காரலாம்ன்னு ஒரு புளிய மரத்தடியில் உட்கார்ந்தான், அவனையும் அறியாமல் தூங்கி விட்டான். கண் விழித்துப் பார்க்கும் பொழுது மணி ஆறு.**

இவன் போன மதிய நேரம் எல்லா விளையாட்டுகளும், ராட்டினங்களும் கூட்டம் கூட்டமாகக் கொண்டாடிகிட்டு இருக்க, இந்தக் கூடாரத்தில் மட்டும் ஆள் நடமாட்டமே இல்லை, விளம்பர பலகை எதுவுமேயில்லை. இரண்டு முறை மைதானத்தைச் சுற்றி வந்து, இரண்டு முறை கோவிலுக்குள்ளேயும் வெளியேயும் தேடியும் ராணி கண்ணில் படவேயில்லை.

மணி மூன்று என்று தெரிய வந்ததும் அவனை அறியாமலேயே பசி வந்தது. இருக்கிறதிலே பெரிய ஓட்டலாகப் பார்த்து, மூலையில் கிடந்த ஒரு மேஜையில் தனியாக அமர்ந்து கொண்டு வந்தவரிடம் ஒரு சாப்பாடு என்றான்.

பாதி சாப்பாட்டில் சாருக்கு என்னமும் வேணும்னா கூச்சப் படாம கேளுங்கன்னு சொல்லிக் கொண்டே பறிமாரியவர் அவனுக்கு எதிர் சேரில் வந்தமர்ந்தார்.

இவன் சிரித்துக் கொண்டே இந்தத் திருவிழால கடல் கன்னி கிடையாதான்னு கேட்டான். இல்ல சார், போன வருஷம் போட்டாங்க, ஆனா இந்த வருஷம் அத விட பெரிசா இந்தத் "தீக்குச்சி டான்ஸ்"த்தான் பேசிக்கிறாங்கன்னு சொன்னார்.

"என்னது தீக்குச்சி டான்ஸா" அப்படீன்னா?

"நான் இன்னும் பாக்கல சார், ஆனா ராத்திரி பாருங்க கூட்டத்தை"

"என்ன நடக்கும்"

"சார் உள்ள போனீங்களா?"

"ஆமா"

"நடு மைதானத்தில ஒரு உயரமான கூடாரம் பாத்தீங்களா, அதுதான் அது நடக்கிற இடம்"

"ரொம்ப சின்னக் கூடாரமல்ல இருக்கு,

அதில போய் எப்படி டான்ஸ்............"

"இல்ல சார், டான்ஸெல்லாம் கிடையாது. உங்களுக்கு உண்மையிலேயே தெரியாதா?"

"தெரியாதுங்க, நான் திருவிழாவுக்கு வர்றதே, ஏன், இந்த ஊருக்கு வர்றதே இதுதாங்க முதல்முறை"

"அப்படியா, ஒண்ணுமில்ல சார், நடுவில கருப்புக் கலர் கூடாரம் இருக்குல்ல, அதில நடுவில ஒரு உயரமான கழி இருக்குல்ல, அதில ராத்திரி ஏழு மணிக்கு மேல, முழு இருட்டில ஒரு வயசுப் பொண்ணு உடம்புல ஒட்டுத்துணியில்லாம இரண்டு கையையும் மேலே தூக்கிகிட்டு நிற்குமாம். நம்மகிட்ட ஐந்து ரூபா வாங்கிகிட்டு, ஒரு ஆள் ஒரு காலி தீப்பெட்டியும் ஒரே ஒரு தீக்குச்சியும் கையில கொடுத்து உள்ள விடுவானாம், அப்ப அங்க இருக்கிற ஒரு ஆளு நம்ம கையைப் பிடிச்சுக் கூட்டிட்டுப் போய் அந்த கழி முன்னால நிற்க வச்சு சீக்கிரம்ன்னு சொல்வானாம். நாம உடனே தீக்குச்சிய பொருத்தி அந்தப் பொண்ண நிர்வாணமாப் பாத்துக்கிடலாமாம். எப்படியெல்லாம் யோசிக்கிறாங்க பாருங்க சார்"

"இதில என்ன இருக்கு எல்லாருதான் பாத்துருவாங்களே"

"அட போங்க சார் இதுவரை ஒருத்தர் கூட பாத்ததில்லையாம்"

"ஏன்"

"சார், நாம ஆம்பளையெல்லாம் என்ன பண்ணுவோம், உடம்பப் பாக்கிறத விட, உடம்புக்காரியாருன்னு பாக்கத்தானே முயற்சி பண்ணுவோம்" "தீக்குச்சிய உரசி முகத்துக்கு நேரா கொண்டுபோனவுடனே அவ வாயால புஸ்ஸூன்னு ஊதி அணைச்சிருவாளாம், அப்புறம் என்னத்த பாக்க. அந்த நாள் கையைப் பிடிச்சு வெளிய கொண்டுவந்து விட்டிருவானாம்"

"அப்புறம்"

"அப்புறம் என்ன அப்புறம்" "மறுபடியும் வரிசையில வந்து நிக்க வேண்டியதுதான்"

"போலீஸ் ஒண்ணும் பண்ணலியா"

"அதெல்லாம் பணம் சரி பண்ணீரும் சார், உங்களுக்குத் தெரியாதா"

நாகு சாப்பிட்டுவிட்டு வெளியே வந்தான், மீண்டும் ராணியைத் தேடினான், எங்கும் அவள் தென்படவில்லை. கொஞ்ச நேரம் உட்காரலாம்ன்னு ஒரு புளிய மரத்தடியில் உட்கார்ந்தான், அவனையும் அறியாமல் தூங்கி விட்டான். கண் விழித்துப் பார்க்கும் பொழுது மணி ஆறு.

மீண்டும் ஒரு டீ குடிக்கலாம்ன்னு அதே ஓட்டலுக்குப் போனான். சர்வர் டீயை வைத்துக் கொண்டே என்ன சார் தீக்குச்சி டான்ஸ் பாக்கலாம்னு இருக்கீங்களான்னு கேட்டார். இல்ல கிளம்பீட்டேன் ஆனா நீங்க கேட்டவுடன் பாக்கலாமான்னு ஒரு ஆசைதான் என்றான், சும்மா பாருங்க மதுரைக்குத்தான போகணும் விடிய விடிய பஸ் இருக்குன்னு சொன்னார்.

இரவு எட்டரை மணிக்கு முல்லை ஆற்றில் ஒரு குளியல் போட்டுவிட்டு, அப்படியே நடந்து வந்து நடு மைதானத்தை அடைந்தான். சில பேர் வரிசையில் நின்று கொண்டிருந்தார்கள். எல்லோரும் பெரிய டர்கி டவலை தலை முழுவதும் சுற்றியிருந்தார்கள், யாருடைய முகமும் கண்ணும் தெரியாத மாதிரி துண்டு அவர்களைப் பார்த்துக் கொண்டது. இவனும் வரிசையில் நிற்கும் பொழுது தனது கைக்குட்டையை எடுத்து மூக்கோடு சேர்த்து பின் பக்கமாக கட்டிக் கொண்டான்.

இவன் முறை வந்ததும் ஐந்து ரூபாயை வாங்கிப் போட்டுக் கொண்டு வாசலில் நின்ற ஆள் இவனிடம் தீப்பெட்டி, லைட்டர் போன்றவைகள் இல்லையென சோதித்து உறுதி செய்து கொண்டு ஒரு காலி தீப்பெட்டியும் ஒரு குச்சியும் கொடுத்து ம்.. என்றான்.

உள்ளே சர்வர் சொன்னது போல ஒரு ஆள் வந்து கூட்டிக் கொண்டு போனான். ஒரு பத்தடி நடந்த பிறகு, சார் பாருங்க தீக்குச்சி அணைஞ்சிருச்சுன்னா கிளம்பீறனும், கையை க்கியை நீட்டிறக் கூடாது ம்.... உரசுங்கன்னார்.

நாகு வெகு ஜாக்கிரதையாக தனது நெஞ்சுக்கு நேராக தீப்பெட்டிய பிடித்து காற்றின் அசைவு எதுவுமில்லைன்னு உறுதி செய்து கொண்டு. இது வரை யாரும் பார்க்காத அவளை தான் பார்த்து விடணும்ன்னு ஒரு உறுதியோட தீக்குச்சிய உரசி முகம் நோக்கி போனான் புஸ்ஸூன்னு ஊதி அணைக்கப்பட்ட அந்த ஒரு நொடி அவன் அவள் முகத்தை பார்த்தான்.

வெளியே வரும்பொழுது பின்னால் யாரோ அழுவது போல கேட்டது.

"முகத்தைப் பொத்திக் கொண்டு ஒரு கிழிந்த குரலில் ராணி அழுது கொண்டிருந்தாள்" •

# ஒரு நாள் என்பது 24 மணி நேரமல்ல

**நூலாசிரியர்: ஜெயதேவன்**

மகாதேவன் எனும் இயற்பெயர் கொண்ட ஜெயதேவன் அவர்களின் எட்டாவது கவிதை நூல் இது. ஆசிரியப்பணி அதுவும் தமிழாசிரியர் என்பதாலும் ஆனந்த விகடன் மற்றும் சாவி இதழ்களில் பணியாற்றிய அனுபவத்தாலும் தமிழ் இவரைக் கொஞ்சுகிறது. இவர் தமிழைக் கெஞ்சுகிறார்.

என் நேசத்துக்குரிய கவிஞர் வண்ணதாசன் அவர்களுக்கு என்பதிலிருந்து எத்தனை நேசம் என்பதையும், கவிதைகளின் வாயிலாக அந்த நேசத்தையும் நம்மால் உணர முடிகிறது. பல்வேறு இலக்கிய இதழ்களில் வந்த கவிதைப் பூக்களை தொகுத்து ஆண்டாளைப்போல் சூடி மகிழ்ந்திட மாலையாகத் தந்திருக்கின்றார்.

*"கூழாங்கல் ஆற்றின் உள்ளே இல்லை.*
*ஆறுதான் கூழாங்கல்லுக்கு மேலே இருக்கிறது"*
என்று ஞானத்தைத் திறக்கிறார்.

*"மா" எனும் கனைப்போடு வீடு திரும்பும்*
*மாட்டின் கழுத்து மணி ஒலியில் கேட்கிறது*
*பெருங்காட்டின் சிறு ஒலி..* என காட்டினையும் மாட்டினையும் துறந்த கதையை மீட்டெடுக்கின்றார்.

வாழ்வைப்பற்றி..

*"வாழ்வென்பது பூரணமல்ல.*
*துளிகளின் முழுமை.*
*ஒரு கோப்பைத் தேனீரில்*
*இருக்கிறதுதானே தோட்டத்தின் மணம்.."*

இதைவிட வேறெப்படி எளிதாய் அரத்தமுற்றதாய் சொல்லிவிட இயலும்.

கடிகார சுழற்சியில் உயிர்த்த வரிகள்..

*"வார நாட்களில் ஏறி பயணிக்கிறோம்*
*மிக மிக களைப்பாகிவிடுகின்றன*
*நொடி முட்கள்*
*விடுமுறை நாட்களில் சோம்பல் முறிக்கின்றன.*
*கடிகாரம் காலத்தைத் தின்கிறது*
*ஒரு சுற்றில் ஒரு சொட்டு உயிர் உதிர்கிறது."*
*"கடற்கரை மணலில் நீ ஒரு துகள்*
*நான் ஒரு துகள்.."*

பார்வையற்ற மாற்றுத்திறனாளியின் வலியினை

*"வண்ணத்துப்பூச்சி வண்ணமில்லாமல் பறப்பது*
*பார்வையில்லாதவர் தோட்டத்தில்தான்..."* எனும் வரிகளால் உணர வைக்கின்றார்.

பறவையின் பறத்தலை காணும் கண்களில் வரும் வார்த்தைகள்..

*"பறவை எப்போதும் பறப்பதாகவே நீங்கள் நினைக்கின்றீர்கள்*
*சிறகுகளை இலகுவாக்கி காற்றில் ஓய்வெடுப்பதைப் பார்த்ததில்லையா.?"*

குறுங்கவிதைகளில் நிரம்பிவழியும் கற்பனைகள்:

*"மல்லிகைத் தோட்டத்தில் அமர்ந்து*
*எழுதும் போது வராத கவிதை*
*மானத்திலிருந்து திரும்பும் போது*
*வந்து விடுகிறது*
*பஞ்சாரத்தில் வைக்காத முட்டையை*
*வீட்டு மூலையில் வைத்து விடும் கோழி"*
*"பறவைகள் வந்து விட்டுப்போன*
*வீட்டுக்கும்*
*பறவைகள் எழுந்து போய்விட்ட மரத்திற்கும்*
*இடையில் இருக்கும் மௌனம்*




**ஒரு நாள் என்பது 24 மணி நேரமல்ல**

**ஜெயதேவன்**
**சந்தியா பதிப்பகம்**
**பககங்கள் 104.**
**விலை: 100.**

நமக்கு ஏதோ சொல்கிறது"
"ஒரு மழைத்துளியை துரத்திக் கொண்டு
இன்னொரு மழைத்துளி ஓடி வருகின்றது
இரண்டும் கீழே விழுந்து இறந்து விடுகின்றன"

காதலைச் சொல்ல நாம் கடினப்படுவதை எடுத்து

"தன் முதல் காதலை எப்படித் தெரிவித்திருக்கும்
நாகப்பாம்பு பெண் பாம்பிடம் "என்று கவிதைப்படுத்தியிருக்கின்றார்.

"அரும்பு மலராவதற்கிடையே
கழிந்து போகிறது நொடியினால் கூட கணக்கிட முடியா காலம்"
"கை நிறைய கடல் நுரையை அள்ளி
முகர்ந்து பார்த்தாள் சிறுமி
இப்போது கடல் காணமல் போய்விட்டது
கை நுரைக்குள் நூறு கடல்கள்"
"திரைச்சீலைகள் மெல்லிய நடனமாடிக்கொணடு ஒரு பாடலைப் பாடுகின்றன...
தனக்குத்தானே.."
"கடல் தந்த ஒரே சங்கு
கோவிலில் ஒரு மாதிரி
இழவு வீட்டில் வேறு மாதிரி"
" இது மரணமடையும் காலத்தில்
எங்கோ ஒரு கானகத்தில் பூ ஒன்று பூக்கும்
அதற்குள் போய் அடங்கிவிடும்
இதன் ஆன்மா"
"நீரிலிருந்து நீரை பிரித்தெடுப்பது போல்
காதலியிடமிருந்து காதலை மட்டும் பிரித்துத் தாருங்கள்
காதலிகளைவிட காதல் அழகானது"
"குழந்தையின் கண்ணிலிருக்கும் சிரிப்பை மட்டும்
என் கண்ணுக்குள் வைத்தால் மரணமற்ற பெருவாழ்வு என்னுள் தளிர்க்கும்"
"மண்புழு வெளிவரும்போது கேட்டு ருசிப்போம்
மண்புழுவின் காதல் கவிதையை"

எப்படி இவரால் இப்படி வார்த்தைகளை பிரசவிக்க இயலுகிறது எனும் ஆச்சரியத்தைத் தந்தது. மீண்டும் மீண்டும் கேட்கத்தூண்டும் சில பாடல்களைப் போல மீண்டும் மீண்டும் வாசிக்கத் தூண்டுகிறது இக்கவிதைத் தொகுப்பு.

**– ப.தாணப்பன்.**

# பெயர் ராசி


சிலருக்கு அதிர்ஷ்டமாகவும் இருக்கலாம்...
நட்சத்திரத்தையோ இராசியினையோ
தன் பெயராக மாற்றிக்கொள்ளுதல்..
மிதுனா என்றோ,
ரேவதி... சித்ரா... என்றோ...
அது சரி,
மூலம்... மிருகஷிரிடம்... நட்சத்திரக்காரர்கள்
என்ன செய்வார்கள்
யோசனையுடன் கடந்தேன்..
என் இராசிப்படி
கும்பம் இராசியான நான்
கும்பேந்திரன் என்று
பெயர் மாற்றம் செய்தால்,
அதிர்ஷ்டம் அடிக்காதா என்ற
நப்பாசையுடன் நடக்கலானேன்....
வழக்கம் போல் ரவா உப்புமாவை
மதிய உணவிற்கு எடுத்துக்கொண்டு.
★★★



வறண்ட வயல்வெளி...
வெயில் விளைச்சல்,
மிதித்து கடக்கிறேன் ஊர்வெளி.
★★★
குளங்களால் நிறைந்த ஊர்...
பேருந்து பலகைகளில் பல
சுமந்தலைய நீரில்ல நிதர்சனம்.
★★★
எறும்புகளும் ஊர்ந்தலைய
வரிசையாக,
காலிகுடங்கள்.

**– செ.ச.பிரபு,** நெல்லை நகரம்.

# குறவேசம்



மாடக்கண் தனது மகள் எழிலாவின் இமையில் வெள்ளையும் சிகப்புமாய் வரிசையாக புள்ளிகள் வைத்துக் கொண்டிருந்தான். அழகான நெற்றிச்சூடி, அதே நிறத்தில் கம்மல், இலை இலைகளாலான நீண்ட காதுமாட்டி, பாசி மாலைகள், பொட்டுகள் என்று வாங்கி வந்து ஒப்பனை போட்டுக் கொண்டு இருந்தான்.

பெரியவனுக்கு பொம்பளைப் பிள்ளையைப் போல அதிகம் வாங்கவில்லை. அவனைப் போலவே, டால்டா டின், பெல்ட், தலைக்கு உறுமால், சின்ன வேட்டி, பாசிமணிமாலை, ரப்பர் கட்டிய கவுட்டை போதுமானது. மற்றவைகள் எல்லாம் வீட்டிலியே இருக்கிறது. பொம்பளைப் பிள்ளைகளுக்கு அதிகமாக ஆபரணங்களும், ஜிகினா, பவுடர், வண்ண உடைகள் எனத் தேவைப் படுகின்றன. நல்லவேளையாக குட்டைப் பாவாடையை ஒரு வாரத்திற்கு முன்பே தைக்கக் கொடுத்து வாங்கி வந்து விட்டான். அழகான குஞ்சங்கள் நிறைந்த குட்டை பட்டுப் பாவாடை. எழிலாவுக்கு அழகாக இருக்கிறது. உடையை அணிவித்துவிட்டு பார்த்தான். குறத்தி உடையில் ஒரு தேவதை வீட்டுக்குள் வந்து நிற்பதைப் போல இருக்கிறது. அப்படியே ஒரு ஆரத்தி எடுத்து ஊர் முச்சந்தியில் அதைக் கொண்டு போய் கொட்ட வேண்டும். “ஏய், கமலா வந்து பார்டி எழிலாவை”, என்றழைத்தான் தன் துணைவியை. அடுப்பங்கரையை விட்டு அவள் வெளிவராமல் ஏதோ பதில் சொல்லவும் அவனுக்குள் கோபம் புரண்டு எழுந்தது. ஒப்பனை முடித்தவுடன் அவளை அழைப்போம். அதுதான் அவளுக்கு ஆச்சரியமாக இருக்கும் என்று சமாதானம் செய்து கொண்டான். கைகள் பரபரக்க ஒப்பனையிடுகையில் மகளின் மினுக்கம் கூடிக் கொண்டே போவதை உணர்ந்தான்.

கடைசியாக இமைகளின் மேலே ரோஸ் கலர் மென்தூரிகையால் வைத்தான். அசல் நரிக்குறவச்சியாக மாறி இருந்தாள். அவளை அருகில் இழுத்து உடலை சுழற்றிப் பார்த்து தனக்குள் சிரித்துக் கொண்டான். முதுகுப் புறம் மேக்கப் எதுவுமில்லாமல் ‘அசல்’ குறத்தியாகத் தெரிந்தாள்

பீரோ கண்ணாடியில் பார்த்து விட்டு வருகிறேன் எனறு சொல்லியபடியே எழில் ஓடிப் போனாள். பெண் குழந்தைகள் மனதுக்கும் ஆண் பிள்ளைகள் மனதுக்கும் எத்தனையோ வித்தியாசங்கள் இருக்கின்றன. தன்னையே உற்றுப் பார்ப்பதும், தான் அழகாய் இருப்பதில் பெருமை கொள்வதும், தன்னழகில் தானே மயங்குவதும் இயல்பாய் நிகழ்கிறது. வேகமாய் வீட்டுக்குள் ஓடிப் போனவள் மெதுவாக தலையை மட்டும் நீட்டி அறையிலிருந்து எட்டிப் பார்த்து, அவன் பார்த்ததைப் பார்த்தவுடன் நாணிக் கொண்டு மெதுவாக நடந்து வந்ததை மகிழ்வோடு பார்த்துக் கொண்டிருந்தான்.

மனதிற்குள் பளிச்சென்று யோசனை உதித்தது. வருடாவருடம் குறவன் வேடம் போடுறேன். தானும் குறத்தி வேடம் போட்டால் எப்படி இருக்கும்னு எண்ணிப் பார்த்தான். அடுத்த வருடம் அம்மன்ட்ட உத்தரவு கேட்டுட்டுப் போடலாம் என்ற எண்ணிய போதே மனது மகிழ்ச்சியானது. எழிலாவின் அழகில் பாதியாவது இருக்க மாட்டேனா என்று தனக்குள் முனங்கிக் கொண்டான்.

“அப்பா, அப்பா அம்மாட்ட காட்டிட்டு வாரேன்”, ஓடியவளின் காலில் கட்டியிருந்த சின்ன சலங்கைகள் அவள் குதித்து ஓடுவதற்கு ஏற்ப சல் சல்லென ஒலித்தன.

பிள்ளைகளை ஆசை தீரப் பார்க்கிற போது அவர்கள் வேறு ரூபம் கொண்டு விடுகிறார்கள். தன் தாயைப் போலவே, அல்லது மனைவியின் சாயலிலோ அவர்கள் ரூபம் ஆகி விடுகிறது. வேடம் புனைந்தவுடன் குழந்தை முகம் மாறி, அவன் அம்மாவைப் போல குச்சி முடியும் வட்டமுக வடிவமும் கொண்டு விடுகிறது.



அவன் சட்டை உள்பைக்குள் கைவிட்டு பத்து ரூபாய் நோட்டைப் போடப் போனான். பிள்ளைகள் இருவரும் ‘நாங்களும் போட்டோமே’ என்றதும் அதிர்ச்சியுடன் பார்த்தான். பின்பு சுதாரித்துக் கொண்டு அவர்களுக்கு போட்டது சரிதான் என்று கொண்டான்.

மகிழ்ச்சியோடு மகளைப் பார்த்த மாடக்கண்ணின் பார்வை அப்படியே சோகம் கட்டியதைப் பார்த்து மிரண்ட மகள் “என்னப்பா” என்றது பரிதாபமான முகத்துடன். ‘‘ஒண்ணுமில்லப்பா’’, என்று துண்டால் கண்களைக் கசக்கிக் கொண்டவன். “பாட்டியை நினைக்கத் தோணுச்சும்மா.”

“போங்கப்பா, எப்பப் பாத்தாலும் பாட்டி, பாட்டினிட்டு. நல்லவேளை ராக்கம்மா ன்னு பேரு வைக்காமெ எழில்ராசின்னாவது வச்சீங்களே.” சிரித்துக் கொண்டே சொன்னாள் எழிலா. “நீ தானே என் அம்மா”, என்று தனக்குள் இழுத்து நெற்றியில் முத்தினான்.

‘‘ஏலே, முத்து, லுங்கிய கட்டிட்டியா வா, மேக்கப் போட்டுட்டு சாமி கும்பிட்டு வெளியே நேர்ச்சைக் கேட்கப் போவலாம்’’. மகனின் ஒப்பனை எளிதானது. முகத்தில் ரோஸ் பவுடர் பூசி கரும்புள்ளி செம்புள்ளி வைக்க வேண்டியது. இடுப்பில் ஒரு டால்டா டின், கையில் கவுட்டை அவ்வளவுதான். எளிதாகக் குறவனாகினான் மகன் அவனைப் போலவே.

மீண்டும் அவன் மனதிற்குள் பெண்குறத்தி வந்து நின்றாள். மாடக்குளத்தில் அவன் மச்சினன் மார் அம்புட்டு பேரும் காளி வேடம்தான் போடுவார்கள். ராமு மாமா மொவன் வெள்ளப்பாண்டி பச்சைக்கலர் காளி ரூபம் தரிப்பான். அவன் சூடனெ உள்ளங்கையில் கொளுத்தி அப்படியே எரிய விட்டு வாயில் போட்டுக் கொள்வான். உள்ளங்கை கொளுத்திக் கொளுத்தி வெந்து போயிருக்கும். ஆனா வாயில ஒண்ணும் ஆகாது. இவன்தான் இப்படிப் பண்றான்னா கண்ணையத்தேவர் மகன் சொடலை நாக்குல வச்சி சூடனக் கொளுத்துவானாம். அவன் நாக்கை அரைஅடி நீளம் நீட்டி அதில் சூடனை வச்சி கொளுத்தி எரிய விட்டு முழுங்குவானாம். அவன்

நாக்க வெளியே நீட்டும் போது அம்மனே நேரில் நாக்கை தொங்கப் போட்டபடி இருக்குமாம்.

சொடலை உக்ரகாளி வேடம்தான் போடுவான். உடம்பெல்லாம் சிவப்பு பவுடர்ல விளக்கெண்ணெய் தேங்கா எண்ணெய் கலந்து உடம்பே ரத்த சிவப்புல இருக்குற மாதிரி இருக்கும். முதுகிலிருந்து இரண்டு பக்கமும் பன்னீரண்டு கைகள் அதே வண்ணத்தில் இரு புறமும் மாட்டியிருப்பான். தலைமுடிக்கு நீளச்சடைக் கொண்டு மாட்டி அப்படியே உக்கிரக் காளியாகவே மாறியிருப்பான். அத்தோட அவன் ஆடுற ஆட்டத்துல உடம்பெல்லாம் ரத்தம் வழிவது போல இருக்கும். உச்சபட்ச கோபம் அவன் முகத்தில் இருக்கும்.

உள்ளூர் முத்தாரம்மன் கோவில் ராப்பூசை முடிக்கிற வரைக்கும் இப்படி கோர முகத்தை எப்படி வைத்துக் கொண்டிருக்கிறான் என்பது பெரிய ஆச்சரியம்தான். எல்லாம் சாமியோட கைங்கரியம். மனுசன் மேல அம்மன் ஏறி விட்டால், அவனால் எதையும் செய்ய முடியும் என்று பேராசிரியர் பரமசிவம் சென்னது ஞாபகத்தில் வந்தது. மாடக்குளத்தில் எட்டுக் கலர் காளி வேடத்திற்கும் எட்டு பேர் உண்டுமாம். அட்டகாளி எட்டு பேரும் எண்திசையிலும் நின்றபடி ஆடுவார்களாம். ஆயிரம் கைகளோடும் எண்திசையிலும் நின்று பூமி அதிர ஆடுவது போல இருக்குமாம். அத்தோட குரங்கு, கரடி, முயல் என்றும் குறவன் குறத்தி. கள்ளன், போலீஸ், பொம்பளை, பேய்கள் என்று எத்தனையோ வேடங்களைப் போட்டபடி சாமிகள் ஊரையே வலம் வருவார்கள். சிலர் வேனில் முத்தாரம்மன் சிலை வைத்து அலங்கார ஆராதனையோடும் வேசங்களோடும் குலசேகரப்பட்டினத்துக்கு நடந்தே போவார்கள்.

சில ஊர்களில் முத்தாரம்மன் ஆடல் பாடல் குழுவில் எல்லா வேசக்காரர்களும் அவர்களோடு சில திருநங்கைகளும் பெரிய லாரியில் வருவார்கள். அப்படியே பெருந்தனக்காரர்கள் வீட்டு முன்பு செண்டை, உடுக்கை மேளத்துடன் இறங்கி ஆடுவார்கள். அப்படியே உறுமி செண்டையும் ஒன்றொன்று மோதி அதிர வேடக்காரர்கள் வட்டமாய் கூடி அட்ட அசைவு போட்டு ஊரே அதிர ஆடுவார்கள். அட்டகாளிகளும் நாக்கை நீட்டி எல்லா துர்ப்பகைகளையும் விழுங்குவது போல இருக்கும். செல்லாத்தா, செல்ல மாரியாத்தா பாட்டுக்கு எல்லோரும் குதித்து ஆட செண்டையும், தவில்களும் வெடிக்க ஈரேழு லோகங்களும் பொடிபடுவது போல இருக்கும். அதை அவன் பார்த்தால் சிரித்துக் கொள்வான். குலசேகரப்பட்டினத்தில் முத்தாரம்மன் கோவில் முன்னுக்கு இப்படி ரெண்டாயிரத்துக்கு மேற்பட்ட செட்டுகள் ஒட்டுமொத்தமாய் ஆடுவது கண்ணில் தோன்றும். கற்பனைக்கும் எட்டாத அந்த நிகழ்வை வாயால் சொல்லி விட முடியுமா என்ன என்று திணறுவான்.

மாடக்கண்ணுவின் ஊரில் அப்படி நிறைய பேர் வேடம் போடுவதில்லை. மாடக்கண்ணு இப்படி வேசம் போட்டு போவோர்களைக் கேலிச் செய்திருக்கிறான். இப்ப அவனே குறவன் வேசம் போட்டுக்கிட்டு போறத ஊரே ஆச்சரியமா பார்க்கிறது.

அவன் வீராவரம் பழக்கமிசன் மண்டியில் வேலைக்குச் சேர்ந்து அங்குதான் பல வருடங்களாக வேலை பார்த்து வந்தான். பின்னாடி ஆரஞ்சு, ஆப்பிள் தள்ளுவண்டியில் எடுத்துப் போட்டுக்கிட்டு விற்கவோ ஜூஸ் அடித்துக் கொடுக்கவோ போவான். தள்ளுவண்டிக்கும் பழச்சாறு மிசினுக்கும் வாடகை கொடுக்கணும். தள்ளுவண்டியை முதலாளிட்ட சொல்லிட்டு ப்ரீயா எடுத்துக் கொள்வான். அப்படியே ஹைகிரவுண்டுல வாகைமரத்துக்குக் கீழே வண்டியை நிறுத்துவான். வெயிலில் களைத்துப் போயி வருகிறவர்க்குப் பழச்சாறு போட்டுக் கொடுப்பான் அந்தப் பக்கம் ஓரளவிற்கு வசதியானவர்கள் அதிகம் சீனி கலக்காத பழச்சாறுதான் அதிகம் விற்பனையாகும்.

அவனுக்கான மனம் வியாபாரிக்கானதல்ல. சற்று விசாலமானதுதான். ஒரு கிளாஸ் சாறு கேட்டால் பிழிஞ்ச சாறு காக்கிளாஸ் கூட இருந்தால் கூட அதையும் திரும்ப ஊத்திக் குடிக்கக் கொடுப்பான். அப்படிப்பட்ட உதார குணத்தில் அவனது தொழிலும் நன்றாக நடந்தது. மதியம் சாப்பிட்டு விட்டு சிறிது நேரம் மரத்தடியில் தலைவைத்துத் தூங்குவான். வாடிக்கையாளர்கள் சாறு வாங்க வந்தால் அவனது கோழித் தூக்கத்தைக் கலைக்காமல் அப்படியே நின்று கொண்டிருப்பார்கள். அந்த கண நேரம்தான் அவனது தூக்கம் என்பதும் எல்லோருக்கும் தெரியும். அவனும் யாரும் வந்தது தெரிந்தால் உடனே எழுந்து விடுவான்.

வியாபாரம் செய்பவனுக்கும் வாடிக்கையாளனுக்கும் எப்போதும் ஒரு இனிமையான பிணைப்பு இருக்க வேண்டும். அதில் ஒருவருக்கொருவர் லாபத்தை விட்டுக் கொடுத்தல் இருக்க வேண்டும். மாடக்கண்

அப்படிப்பட்ட நல்ல வியாபாரியாக இருந்தான்.

யாரும் வரவில்லையென்றால் ஸ்டூலில் அமர்ந்து வாகை மரத்தின் ஊடாக வானத்தைப் பார்த்தான். குளிர்காலத்தில் வானம் என்ன எதுவும் தெரியாது. ஆனால் வேனில் காலம் துவங்கியவுடன் கொஞ்சம் கொஞ்சமாக வானம் தெரிய ஆரம்பிக்கும். அக்னி நட்சத்திர காலத்தில் அந்தக் கறுத்த சிறிய கிளைகளில் ஒட்டிக் கொண்டிருக்கும் ஒவ்வொரு இலையும் தனித்தனியாகத் தெரிய ஆரம்பிக்கும். பின்வரும் மழைக்காலத்தில் இடைவெளிகளை புதிய இளம்பச்சைக் கலரால் இழுத்து மூடிக் கொள்ளும். எந்தக் காலத்திலும் வாகைமரம் வெயிலை விரட்டிக் கொண்டிருக்கும். அதனால்தான் அவனை எட்டு ஆண்டுகளாக அங்கேயே நிலைகொள்ள வைத்திருக்கிறது.

இப்போது திம்மராஜபுரத்தில் ஒரு சின்ன ஓட்டு வீடு வாங்கி அதை இழுத்துக் கட்டி மேல்மாடியில ஒரு அறையும் கட்டியுள்ளான். அதற்கெல்லாம் காரணம் அவனது அம்மாதான். அவன் அப்பா இவன் பிறந்த இரண்டாம் வருசம் செத்துப் போனாராம். அன்னையிலேர்ந்து அவன் அம்மா அவனுக்காக எல்லா வீட்டு வேலையில் இருந்து எல்லா ஈனச்சோலியும் பாத்து காப்பாத்தியது தான் காரணம்.

அப்படிப்பட்டவளுக்கு ஏழு வருசத்துக்கு முன்னாடி வயிறு உப்பிப் பசியில்லாமல் போனது. ஐகிரவுண்டு, பால் ஆசுபத்திரி அங்க இங்கன்னு எல்லா மருத்துவமும் பார்த்தாச்சு. குணமாகுற மாதிரி தெரியல. யாரோ ஒரு தொள்ளாளியை கூட்டிட்டு வந்து மந்திரிச்சிப் பாரு சொன்னாங்க. அவன் வந்து என்னல்லாமோ பரிகாரம் பார்த்தான். ஒண்ணும் வேலைக்காகலை. அப்பதான் மாடக்குளத்து மச்சான் வந்தார். அவருதான் முத்தாரம்மன் சந்நிதிக்கு வேசம் கட்டி வாரேன் நேந்துக்க என்று, மஞ்சள எடுத்து வரச் சொல்லி கையில காப்பு கட்டி விட்டான். குலசேகரத்து அம்மை அவன் ஆத்தாவை கண் விழிச்சி பார்த்தாள். அம்புட்டுதேன். வயிறு சரியாகி அம்மா பழைய நிலைக்கு வந்து விட்டாள். அந்த வருசத்துல போட்ட குறவன் வேசம் இன்னிக்கு வரைக்கு தொடர்ந்து கிட்டே இருக்கிறது. இந்த வருசம் என்னமோ புதுசா ஆசை வந்துட்டது. அப்படியே புள்ளகளையும் வேசம் போட்டு அம்மன் முன்னாடி அவள் பார்வையில நிறுத்திடணும்னு ஆசை. அதான் அவன் பிள்கைகளுக்கும் குறவன், குறத்தி வேசம் போட்டு இருக்கிறான். இன்னும் கொஞ்ச நேரத்துல சாமி கும்பிட்டுவிட்டு அப்படியே தெருவுக்கு கையேந்தப் போகணும்.

மூவரும் ரெடியாகி திம்மராஜபுரத்திலிருந்து பேருந்து ஏறி புதிய பேருந்து நிலையம் போய் அங்கிருந்து எங்கு செல்லலாம் என முடிவு செய்து கொள்ள முடிவு செய்தான். பேருந்து நிலையத்தில் கூட்டம் சலசலவென்று ஏறியும் இறங்கியும் வழிந்தோடினார்கள்.

பேருந்து நிலையத்தில் இறங்கியவுடன் தோள்ப் பையிலிருந்து மூன்று சிறிய எவர்சில்வர் தட்டுக்களை எடுத்து அதில் வேப்பிலை, மஞ்சள், திருநீறு, காசுகள் எனப் போட்டு மகளையும் மகனையும் முக்கியமான இடத்தில் நிற்க சொல்லி, வந்தவர்களிடம் தட்டை நீட்டி காணிக்கை கேட்கச் சொன்னான். மகன் காளிமுத்து தன் தங்கையை கையில் பிடித்துக் கொண்டு சரியாகவே வருகிற பயணிகளைப் பார்த்து விட்டு அவர்களருகில் தட்டையை நீட்டிக் காணிக்கை கேட்டான்.

சிறிது நேரத்தில் மகள் எழிலாவுக்கும் காணிக்கை கேட்கும் லாவகம் தெரிந்து விட்டது. எழிலும், முத்துவும் வருகிற மக்களிடம் ஓடிச் சென்று கேட்பதும் அவர்கள் குழந்தைகளைப் பார்த்துவிட்டு மகிழ்ச்சியோடு ஏதாவது தட்டில் போடுவதுமாக இருந்தார்கள்.

அவர்களுக்கு எதிர்த்த வரிசையில் இரண்டு கரடி வேசம் போட்டவர்கள் கரடித் தலையை முதுகில் தழுவ விட்டபடி போய்க் கொண்டிருந்தார்கள்.

சணல் சாக்கில் செய்யப்பட்ட கரடி உடையில் தேங்காப்பூ டவலில் பூ நீட்டிக் கொண்டிருப்பது. போல இருந்தது. இரு பிள்ளைகளும் அவர்களை ஆச்சரியத்தோடு பார்த்தார்கள். வேசம் கட்டிய பிள்ளைகள் தட்டோடு ஓடி வருவதைப் பார்த்தார்கள் கரடி வேசக்காரர்கள். பின்னால் வந்தக் கரடிக்காரன் வாயில் வைத்திருந்த பீடியை தரையில் வீசி காலால் நசுக்கினான். இருவரும் கரடித்தலைப் பொம்மையை தலைக்குள் பொருத்தி விட்டு இருவரையும் பார்த்து உறுமினார்கள். பிள்ளைகள் இருவரும் பயந்து பின்வாங்கினார்கள். பிள்ளைகளின் பயத்தை உணர்ந்த கரடிகள் நின்றபடி இருவரையும் கைநீட்டி அழைத்தார்கள். எழிலா மிகவும் பயந்தாள்.

"தங்கங்களே. நாங்களும் குலசேரம் கோவிலுக்குத்தான் வேசம் கட்டி இருக்கோம் பயப்படாதீங்க, உங்க அப்பா அம்மாவெ

எங்க", என்று கேட்டார்கள். முத்து மேற்கு திசை நோக்கு கை நீட்டி அங்கு நிற்பதாகச் சொல்லவும், அவர்கள் தோளில் தட்டிக் கொடுத்தபடி போய்க் கொண்டு இருந்தார்கள்.

அவர்கள் போய்க் கொண்டிருப்பதைப் பார்த்த எழிலா அண்ணனைப் பார்த்து, "அய்யோ நானும் கரடியைத் தொட்டுப் பார்த்திருப்பேனே", என்றாள்.

“கரடி கறுப்பால்லா இருக்கும், இது என்ன சாணிக் கலர்ல இருக்கு” என்று எழில் கேட்ட கேள்விக்கு முத்து, “இது நிசக்கரடி இல்ல எழில். இது வேசக்கரடி”. என்றான். அவனது பதில் அவளுக்கு விளங்கவில்லை. அவளுக்குள் கரடி குறித்து ஒரு உருவம் மனதில் பதிந்து கொண்டிருந்தது.

வானம் கூராப்பு போட்டிருந்தது. மேற்கே சூரியன் மங்க, மேகங்கள் உறுமிக் கொண்டிருந்தன. வெயில் காலத்து மழை, பெய்தால் பெரும் பாட்டமாய் பெய்யும். இல்லாட்டி உறுமி விட்டு ஒன்றுமில்லாமல் போய்விடும்.

மாடக்கண்ணு பேருந்து நிலையத்தை ஒரு சுற்று சுற்றியிருந்தான். வானத்தைப் பார்த்த போது மேகமில்லாமல் திரைந்த பாலைக் கொண்டியது போலிருந்தது. வேகமாகப் பிள்ளைகளைப் பார்க்க விரும்பினான். மணி ஐந்து கூட ஆகவில்லை.

அவனது பிள்ளைகள் ஓடியோடி காணிக்கை கேட்டார்கள். ஒரு வளர்ந்த மனிதரின் அருகில் சென்று வானத்தை ஏறிடுவது தலை உயர்த்திப் பார்த்தாள். அவர் சிரித்துக் கொண்டே, "குலசை கோயிலுக்கா என்று சொல்லியபடி மணிப்பர்ஸ்லிருந்து பத்து ரூபாயை எடுத்துப் போட்டார். முத்து அருகில் சென்று தட்டை நீட்டிய போது, அவனை அணைத்துப் பிடித்து உச்சி மோர்ந்து மீண்டும் பணத்தை எடுத்துத் தட்டில் வைத்து திருநீறு எடுத்துப் பூசிக் கொண்டார்.

எழிலாவைப் பார்த்து சிரித்து விட்டு காணிக்கைகளைத் தாராளமாகப் போட்டார்கள். முத்துவுக்கும் சில சமயம் யோகம் அடித்தது போலக் கிடைத்தது.

அவர்களுக்கு பயணிகள் பணம் கொடுப்பதைப் பார்த்த வயதானவர் நடக்க முடியாமல் தவழ்ந்து தவழ்ந்து எழிலாவின் பக்கத்தில் இருந்தபடி பிச்சை கேட்டார். பயணிகள் யாரும் போடாமல் வேகமாகப் பேருந்து ஏறச் சென்றார்கள்.

வயதானக் கிழவரை எழிலா உற்றுப் பார்த்தாள். தோலெல்லாம் சுருக்கம் விழுந்திருந்தது. விரிந்த இரு தோள்கள், தோள்பட்டை. மணிக்கட்டுகளில் தேள், டிராகன், மயில் எல்லாம் பச்சை குத்தப்பட்டு இருந்தன. தலையைச் சுற்றியிருந்த தலைப்பாகையையும் மீறி நீண்ட வெள்ளை மயிர்கள் பரட்டையாய் கிடந்தன. காதுகள், இமைமுடிகள் வெளுத்து நீண்டிருந்தன. கால்களில் புண் ஏற்பட்டு நடக்க முடியாமல் தவழ்ந்து வந்தார் அவளுக்கு பின்னால் சேலையை முழங்காலுக்கு மேல் கட்டியவாறு உருக்குலைந்த பெண் அவருக்கு பாதுகாப்பாக நின்று கொண்டிருந்தாள். அவள் கையில் ஒரு ஸ்குரு டிரைவரும் ஒரு செப்புகம்பியில் பாசிகள் கோர்க்கப் பட்டிருந்தன. மடியில் தொங்கிய பை புடைத்து இருந்தது.

கூர்மையாக இருவரையும் பார்த்த எழிலாவுக்கு அவர்களைப் பார்க்க பரிதாபமாக இருந்தது. தனது தட்டில் கிடந்த இரண்டு மூன்று ரூபாய் நோட்டுக்களைக் கொடுத்தாள்.

“அய்யோ, காணிக்கைப் பணம் சாமிக்கல்லா போடணும்”, என்ற முத்துவைப் பார்த்து, “அய்யோ, அந்த தாத்தாவும் பாட்டியும் ரொம்ப பாவம்னேன். நீயும் கொடுன்னேன்” என்றாள்.

அவனும் அவர்களைப் பார்த்து விட்டு, “பணம் வேணுமா” என்றான். அவர்கள் ஏதோ பேச, அது விளங்காமல் தட்டில் கிடந்த இருபது ரூபாயைக் கொடுத்தான். அவர்கள் மகிழ்வோடு வாங்கிக் கொண்டு காலைத் தேய்த்துக் கொண்டே திரும்பிப் போவதை இருவரும் பார்த்தபடி இருந்தார்கள்.

கறுத்த வானம் எல்லோரையும் விரட்டிக் கொண்டிருந்தது. எழில் ஓடிப் போய் காணிக்கை வாங்குகையில் முத்துக்கு கொஞ்சம் பொறாமையாக இருந்தது. அப்பாவிடம் சொல்லி பெண் வேடம் போட்டால் அதிகமாய் கிடைக்குமே என்று எண்ணினான்.

சட்டென இறுகிய வானம் பெருந்தூறல்களை அள்ளி வீச ஆரம்பித்தது. எல்லோரும் ஓடி கட்டிடங்களுக்குள்ளும் பேருந்துக்குள்ளும் மறைந்தார்கள். பிள்ளைகள் இரண்டும் கட்டிடங்களுக்குள் வருவதற்குள் நன்றாக நனைந்து விட்டார்கள்.

சன்னமான இடைவெளிகளில் கண்ணாடி இழைகளாய் இறங்கி மழைகள் பிள்ளைகளுக்குப்

பிடித்துப் போயின. கையை நீட்டி மழையை ஏந்திக் கொண்டே இருந்தார்கள். அவர்கள் ஒப்பனை முகத்தில் விழுந்த துளிகள் வண்ணமையாய் கழுத்தில் இறங்கிக் கொண்டிருந்தது.

அவர்கள் மழைக்கு ஒதுங்கி நிற்பவர்களிடம் காணிக்கை கேட்ட போது யாரும் கொடுக்கவில்லை. ஒரு சுற்று சுற்றி விட்டு அப்பாவை எதிர் பார்த்தாள் எழில். அப்பா வேறு எங்கோ ஒதுங்கி இருக்கிறார். “பயப்படாதே. வந்திருவார் அப்பா”, என்ற காளிமுத்துவின் குரலில் ஆறுதல் அடைந்தாள். அண்ணனைப் பார்த்து சிரித்தாள். முகத்தில் அப்பாவைக் காணாத வெறுமை நிறைந்திருந்தது.

மழை சட்டென நின்றது. உள்ளங்கையில் ஏந்திய மழைத்துளிகளைப் பொத்தி வைத்துக் கொண்டாள்.

அப்பா தூரத்தில் வருவதைப் பார்த்த காளிமுத்து துள்ளிக் குதித்தான். மழைக்கு ஒதுங்கியவர்கள் இருவரின் ஓட்டச் சாட்டங்களைப் பார்த்துக் கொண்டே இருந்தார்கள்.

அப்பா வந்தவுடன் இருவரின் தலையையும் தனது துண்டால் துடைத்து விட்டார். மீண்டும் தூறல் விழ ஆரம்பித்தது. அவர்களிடம் பணம் வாங்கிப் போன வயதான கிழவரைத் தோளில் தாங்கியபடி அழைத்து வந்தார் அவரது மனைவி. சரியாக மாடக்கண் அருகில் வந்து பிச்சைக் கேட்கவும், அவன் சட்டை உள்பைக்குள் கைவிட்டு பத்து ரூபாய் நோட்டைப் போடப் போனான். பிள்ளைகள் இருவரும் ‘நாங்களும் போட்டோமே’ என்றதும் அதிர்ச்சியுடன் பார்த்தான். பின்பு சுதாரித்துக் கொண்டு அவர்களுக்கு போட்டது சரிதான் என்று கொண்டான்.

குறவன்-குறத்தி வேசத்துக்குத் தானே எல்லோரும் காணிக்கை போடுகிறார்கள். வேசத்தை தந்தவர்கள் அவர்கள்தானே. அப்போ அவர்களுக்கும் காணிக்கை வரவில் பங்கு இருக்கிறது தானே என்று எண்ணிக் கொண்டான்.

அப்பா இவுங்க யாருப்பா என்று முத்து கேட்கவும், "இவங்க தாம்பா உண்மையான நரிக்குறவர்கள். இவங்களோட வேசத்தைத்தான் நாமெ போட்டிருக்கோம்", என்றான் மாடக்கண்.

எழிலா மீண்டும் ஒருமுறை அந்த வயதான நரிக்குறவர்களைப் பார்த்தாள். மழை மீண்டும் வருவதற்குள் வீட்டுக்குத் திரும்புவது நல்லது

## இந்தியனே புரிந்துகொள்!

இந்தியனே புரிந்துகொள்!
அரசின் வழிகளை மதித்திடு!
ஊரடங்கை மதித்து வீட்டினுள் இரு!
அவசியமின்றி வெளியுலகம் தவிர்!

நித்தம் சுடுநீர் குடித்திடு!
நாளுக்கு இருமுறை நீராவி பிடித்திடு!
இருந்தால் நீராவிக் குளியல்!
இல்லையேல் சுடுநீர்க் குளியல்!
பிரணாயாமம் மூச்சுப் பயிற்சி விடாமல் தினமும்!!
நுரையீரல் திறமையை உயர்த்திடு!
தப்பிடுவாய் கொரோனா நுண்கிருமியிலிருந்து!

உயிர்குடித்த நோய்தனைப்
பரவாவண்ணம் தவிர்த்திடு!!!

மக்களைப் பாதிக்கின்ற
கொரோனாவைப் பரவாமல் முடித்திடு!!!

**இரா.மீனாட்சி சுந்தரம்**

என்று மாடக்கண் நினைத்தார். மழையும் இடியும் கொண்டு ஒன்றையொன்று முறுக்கிக் கொண்டு திமிறின.

“அப்பா அவுங்க உண்மையான குறவன் குறத்தின்னா அவுங்களெ மாரி நாமெ உடை உடுத்தாமெ இப்படி அலங்காரமா ஏன் வேசம் போட்டிருக்கோம்?”, என்றாள் எழிலா. சுருக்கென்றிருந்தது அவனுக்கு. அப்பா, இவங்க உடம்புக்கு என்னப்பா, இப்படி இருக்காங்க”, என்ற காளிமுத்துக்கு. “எல்லாம் பசிக் கொடுமேதான். நல்லா சாப்பாடு கொடுத்தா நம்ம மாரி நல்லா ஆயிருவாங்க” என்றான் மாடக்கண்.

தூறல் மழை அவர்கள் போட்டிருந்த வேசத்தைக் கலைத்திருந்தது.

‘‘அப்பா, உண்மையான இவுங்களெ ஆஸ்பத்திரியிலெ காட்டி சரியாக்கி அடுத்த வருசம் அவுங்களுக்கு குறவன் குறத்தி டிரஸ் வாங்கிக் கொடுத்து சாமிக்கிட்ட அழச்சிட்டு போவோமாப்பா”, என்றாள் எழிலா.

என்ன பதில் சொல்வது என்று தெரியாமல் பிள்ளைகளைக் கையில் பிடித்தபடி பேருந்தை நோக்கி விறுவிறுவென நடந்தான் மாடக்கண். ●



பாப்பாக்குடி இரா.செல்வமணி

# தொலைந்து போன நிமிடங்கள்

மறந்து போன
பாதைகள்
மீண்டிடக் கூடும்...

கேட்க மறந்த
ஒலிகள்
துவங்கிடக் கூடும்!...

பணத்தையும்
உழைப்பையும்
பழையபடி
பத்திரமாக
நிலைநிறுத்திக் கொள்ளலாம்!...

காலம் உருண்டால்
களையிழந்து போன
கொண்டாட்ட வாழ்வும்
கைவசம் கிடைத்துவிடலாம்!...

தாமதமானாலும்
தயக்கம் களைந்து
கல்விச்சாலைகளும்
பாதையைப் பிடித்து
பயணப்பட்டு விடும்!

கிருமிநாசினி தெளித்து
கடவுள்களையும்
காட்சிப்படுத்தி விடலாம்!...

அன்பே!
நமக்கான சந்திப்புகளின்
தழுவல்கள் உருவாக்கும்
மின்னல் சுமந்த நிமிடங்களை
யாரால் மீட்டுத் தந்துவிட முடியும்?

# காணிநிலம்

அடுத்த இதழில் உங்கள் படைப்புகள் இடம்பெற கதை, மற்றும் கவிதைகள் ஆகியவற்றை அனுப்பி வையுங்கள். அடுத்த இதழில் புதிய எழுத்தாளர், கவிஞர்களுக்கு வாய்ப்பு தர விரும்புகிறோம்.

**- ஆசிரியர் குழு.**

*வண்டியில்ல வாசியில்ல*
*தொண்டுக்கும் ஊழியத்துக்கும்*
*துளியேனும் வழியுமில்ல*

*நாள் கடந்து வாரமாச்சு*
*வாரந்தாண்டி மாசமாச்சு*
*முடியுமினு பாத்த நேரம்*
*விரியுதுனு சேதி சொல்ல*
*ஊராரு நாட்டாரு*
*சம்பளமும் சன்னமாயி*
*வருமானமும் வறண்டுபோயி*
*வேட்டிலேருந்து கோவணத்திற்கு*
*மாறிபோச்சு வாழ்வாதாரம்*

*காடு வித்து படிக்கவெச்சு*
*டைய கட்டி கைய கட்டி*
*கம்ப்யூட்டர் வேல பாத்த*
*மயில்சாமி மகன் இப்போ*
*வேட்டி நிக்க டைய கட்டி*
*மாடு ஓட்ட கைய நீட்டி*
*ஆகிப்போனான் நிரந்தர*
*ஊரடங்கு விவசாயி*

*வேலைக்கு ஆளு இல்ல*
*விசுவாசிக்க மொதலாளியில்ல*
*சுதந்திர காத்துமேல*
*சொகமா தூக்கம்வர*
*கம்ப்யூட்டர கடைதெருவுக்கும்*
*மமுட்டி சட்டிய தலைமேட்டுக்கு*
*உயர்த்தி போனான்*
*ஊரடங்கு விவசாயி*

**– மெல்லின முட்கள்**



ப்ரிம்யா க்ராஸ்வின்

# அத்தனைக்கும் பெயர் காதல் என்பேன்!

நீ பதின்மத்தில் சிரிக்கிற
படமொன்று காண நேர்ந்தது...
உனது சாயல்களை
அதில் தேடிக்களித்த பின்
உன் பிரதிமையை
என் பால்யத்தின் அறைகளில்
ஒரு தாய் குளவியின் லாவகத்தோடு
கொண்டு சேர்க்கிறேன்...
என்னோடு இறகு முளைக்கும்போது
எப்படியிருப்பாய் நீ என்று
காண வேண்டும்...

★★★

உனக்கு எல்லாரும்
இருந்திருக்கிறார்கள் சீராட்ட..
என் பால்யம் ஒரு முள்பாதை
நீ விவரித்த அன்றொரு நாள்
நான் தூங்கவில்லை...
உன்னிடம் எப்படிச் சொல்ல?!
நீ பட்டினியுடன் தூங்கிய ஒரு இரவில்
கனவில் பூ கொணர்ந்தது நான்தான்...

★★★

உன் குடும்பப் படம்..
அந்த கனகாம்பரம் வைத்த
பெண் பிள்ளையை மடி மீது
வைத்திருக்கிறாயே!
அவள் ஒன்றும்
குழந்தையில்லை இப்பொழுது..
இறக்கிவிடு!

★★★





# துளி கனல்...காதல்!

வாழ்ந்த வீட்டை கடந்து செல்வது போலத்தான்
தலை குனிந்து செல்கிறேன்
நீ எதிர் வரும் வேளை...

★★★

பிஞ்சும் பூவும் வைத்து
பட்டுப்போன மரம்
இன்னும் பார்க்கும்போதெல்லாம்
பழுக்கிறது உன் முகம்...

★★★

தின்னாமல் மண்ணில் விழுந்த பண்டத்தை
எறும்புகள் இழுத்துசெல்வது பொறுக்காமல்
அவசரமாய் கல்லெடுத்து நசுக்கும்
சிறுவனை நான் என்பேன்...

★★★

தரை வீழ்ந்த பறவைக்கூடு
இன்று இட தயாராய் இருந்த முட்டையை
செரித்திருக்குமா குருவி...

★★★

எப்போதும் எல்லாரையும்
திருப்திபடுத்தும் விலைமகள் மனநிலை
உனக்கு நன்றன்று கண்மணி...
வெறுக்க கற்றுத் தருகிறேன் வா!

★★★

கனகா பாலன்

# பள்ளித் தோழி

யதேச்சையாக
கடக்கும் அவளை
எங்கோ பார்த்த ஞாபகம்...

வலப்புருவத்தின் மேல்
கொப்பளித்துக் கிடக்கும்
கருவண்ண மச்சத்தை
தொட்டு பழகிய விரல்
நீள முயற்சிக்கையில்
அடக்கிக் கொள்கிறேன்...

வண்ணம் மாற்றி போட்ட
கைவளையலின் தேர்வில்
அவளென்று முடிவு செய்தாலும்
தொங்கு கம்மல் இப்போது
தோடாகிப் போனதில்
சந்தேகம் உதித்தது கொஞ்சம்...

முறுக்கிக் கொண்டேயிருக்கும்
தாவணி முனைக்குப் பதிலாய்
சேலையில் முடிச்சுட்டு
அவிழ்த்த வண்ணம் இருப்பதில்
அவளேதானென
அடித்துச் சொல்கிறதென் மனம்...



கருவளையத்திலிருந்து
எட்டிப் பார்க்கும் விழிகளுக்கு
அவளின் சாயல்...

ஒவ்வொரு சொற்களுக்கும்
பொருத்தமான கையசைவில்
நிறைந்து கிடக்கிறது
அவளின் அநேக அசல்...

இத்தனை என் யோசனைக்கும்
முற்றுப்புள்ளி வைப்பதுபோல்
அடுத்த நிறுத்தத்திற்கு
தயாராகிறாள் அவள்...

மறந்து போனாளா?-இல்லை
மறந்ததுபோல் நடித்துப் போகிறாளா?

உயிர்த் தோழியாக இருந்தவளை
உலுக்கியாவது கேட்டிருக்கவேண்டும் நான்...

ஆறுதலுக்கு தோள் தந்தவளை
அரற்றியேனும்
கேட்டிருக்க வேண்டும் நான்...

மீண்டுமொரு ரயில்பயணத்தில்
அவளெதிர் இருக்கையில்
தேடக்கூடும் என்னை...

பகிரக் கதை ஆயிரம் இருக்கிறது
கிடைக்கவேண்டும் நான்...!

# படித்ததில் பிடித்தது

**வா**ட்ஸ்ஆப்பில உலாவிய இந்த கவிதை யார் எழுதியது என்று தெரியவில்லை. அவருக்கு எங்கள் பாராட்டுக்கள்.

பேரப்பிள்ளைகளும் மக்கமாரும்
கண்முழிக்கும் முன்னமே
கருக்கல்ல எந்திரிச்சு
கனிவோடு தாத்தா
காலமே போட்டுவச்ச
கருப்பட்டி காப்பியும்..

காந்திமதி அம்மனக்
கும்பிட்ட கையோட
வரிசைல நின்னு
வாயூற வாங்குன
இருட்டுக்கட அல்வாவும்...

'தாம்ரவருணித் தண்ணிக்கே தனிருசில்லா'
டவுனுப் பெரியம்ம வீட்டுல
சட்டவட்டமாய் உக்காந்து
சப்புக்கொட்டி தின்ன
வெண்டக்கா சாம்பாரும்
விதவிதமா வெஞ்சனமும்..

கொக்கிரகுளத்து அத்த
கூட்டிவச்ச புளிக்குழம்பும்
பக்கத்துணையா பருப்புக்கடைசலும்
பாவக்கா வெல்லம் போட்டுவச்ச கூட்டும்...

உடன்குடி ஆச்சி
உரிமயோட கொண்டுவந்து
உருட்டிக் கைல போட்ட
உளுந்தங் களியும்
நடுவுல குழிவெட்டி
நல்லெண்ண ஊத்துனதும்..

மொளகு சேர்த்தரைச்சு
முருங்கக்கீர போட்டுவச்ச
புளியிலாக் கறியும்
பொடலங்காப் பொரியலும்



'வளர்ர பிள்ள..இப்பிடியா கொரிக்கது?'
ஏசிக் கொண்டே ஆழ்வார்திருநகரி மதினி
ஆசைஆசையா சுட்டுப் போட்ட
தண்டித் தோசையும் தக்காளிச் சட்னியும்..

குறுக்குத்துறைல குளிச்சுமுழுகி வந்தா
சுடச்சுட தொண்டைல இறங்கும்
கூட்டாஞ் சோறும் கூழ் வத்தலும்

தொலிப்பருப்பு போட்டுசெஞ்ச
உளுந்தஞ் சோறும்
தோதாக அதுக்குவச்ச
வாழக்காப் பொரியலும்
வறுத்தரைச்ச தொவையலும்..

'நாரோயிலு' சித்தி பிரியமா வச்சுத்தரும்
அருமையான அவியலும் அதுக்குன்னே அடையும்..

இரயிலடிக்குக் கௌம்பினாலே
இணைஞ்சே வந்திடும்
மொளோடி இட்லிகளும்
வாழையில பொதிஞ்ச
வழித் தொகையலும்தான்

கவிதையில அடங்குமோ..
காத்து நிக்கையிலும் மறக்குமோ!

மதிகெட்டுப் போனேனே..
சொதி சொல்ல மறந்தேனே!
கதிமோட்சம் கிட்டுமே-நல்
விதியால் நெல்லை பிறந்தோர்க்கே!


கோயில்பட்டி கடலமிட்டாய், சாத்தூரு காரசேவு
குத்தாலம் பக்கத்துல பார்டர் கட பரோட்டா..
சுத்தியுள்ள ஊர்ப்பண்டம் சேத்தே நினைச்சாக்க-மண்ட
கிறுகிறுத்துப் போகுமையோ..
பொறவாலே சொல்லுதேன்-தனியா ஒரு
போஸ்ட்டு போட்டு

இன்னம் ஒரு வரி..இத மட்டும் படிச்சிடுங்க
தின்னப் பொறந்தவன்யா திருநேலிக்காரன்

## நூல் அறிமுகம்

எம்.ஆர்.சி. திருமுருகன் எழுதி பாவைமதி வெளியீடாக வந்திருக்கும் சிறுகதைத் தொகுப்பு "நானொரு டெர்ன் பறவை". பத்து கதைகளைத் தந்துள்ளார் இந்த நூலில். முதல்கதையானா ஆத்ம கருப்பையினை ஒரு குறு நாவல் வடிவில் அத்யாய எண்களுடன் தந்திருந்தார். பூலோகத்தில் கடன் தொல்லையால் மனைவி குழந்தைகளைக் கொன்ற ஒருவனுக்கு எமலோகத்தில் என்ன நடக்கும்? மனைவி குழந்தைகள் என்ன ஆவார்கள்? என்பது குறித்தான ஒரு அதீத கற்பனைக்கதை! இரசிக்கலாம். ஆனால் கிட்டத்தட்ட அனைத்துகதைகளிலுமே இதனைக் கையாண்டிருப்பதால் முதலில் ஏற்பட்ட ஒரு சுவாரசியம் போக போக மனதை சாதாரண வாசிப்புக்கு தள்ளி விடுவதை மறுக்க முடியாது.


புத்தகத் தலைப்பாக தந்துள்ள கதையில் டெர்ன் பறவை குறித்து "டெர்ன் பறவை அழகான பெயர்தான். முற்பிறவியில் இப்பறவை சூரியனின் காதலியாகத்தான் இருந்திருக்க வேண்டும். டெர்ன் பறவை பற்றி ஒரு கவி என்னிடம் ஒரு சிறு குறிப்பு தந்தார். சூரியனின் ஒளிக்கதிர்கள் வடக்கு பக்கம் பூமியின் மீது விழும்போது, சூரியனின் வெப்பத்தில் ஆறு மாதங்கள் வாழும். சூரியனின் ஒளிக்கதிர்கள் தெற்கு பக்கம் பூமியின் மீது விழும்போது, சூரியனின் வெப்பத்தில் ஆறு மாதங்கள் வாழும். ஆக டெர்ன் பறவை சூரியனின் வெப்பத்தில் மட்டுமே வாழும் பறவை. இதற்காக பல மைதல் தூரம் பயணம் செய்து, தனது இரண்டு திசைப் பயணங்களைத் தீர்மானிக்கும்." எனக் குறிப்பிட்டிருப்பது நமக்கே அப்பறவையை பார்க்கும் ஆவலைத் தந்திருப்பது உண்மை. கற்பனையுலகை விரும்புபவர்களுக்கு இந்த நூல் நிச்சயம் பிடிக்கும்!




**நானொரு**
**டெர்ன் பறவை**

**எம்.ஆர்.சி.திருமுருகன்**
**பாவைமதி வெளியீடு**
**பககங்கள் 96.**
**விலை: ரூ.90.**
**அலைபேசி: 94441 74272**
**95001 14229**

இரா.நாறும்பூநாதன்



# புதுமைப்பித்தன்

( ஏப்ரல் 25 – பிறந்த நாளை முன்னிட்டு )

இவருக்கு எல்லாமே எள்ளல் தாம்..ஆனால் இலக்கிய விமர்சனம் என்று வந்து விட்டால் மனுஷன் நெற்றிக்கண்ணை திறந்து விடுவார்.

தனக்கு வேண்டியவர் என்பதால் அவரது படைப்புக்களை பாராட்டி விடமாட்டார். மனிதர் நக்கீரப்பிறவி தான்.

அவரோட நண்பர் சுடலைமுத்து அஞ்சல் துறையில் வேலை பார்ப்பவர்.

கூடவே கொஞ்சம் கவிதைப் பைத்தியமும் உண்டு. ஒரு பிரபந்தத்தை இயற்றி (!) புதுமைப்பித்தனிடம் நீட்டி,

"இதுக்கு ஒரு சிறப்புப் பாயிரம் எழுதிக்கொடும் ஓய்.." என்றார். நண்பர் என்பதால், பிரபந்தத்தை முழுவதும் கேட்டார்.

கேட்டபிறகு ஒன்றுமே சொல்லவில்லை. (மனுஷன் எப்படித்தான் பொறுமையுடன் கேட்டாரோ).

சிறப்புப்பாயிரம் எழுதியே தர வேண்டும் என்று குரங்குப்பிடியாய் நிக்கிறார் நம்ம சுடலைமுத்து.

மளமளவென ஒரு தாளை எடுத்து ஒரு பாடல் எழுதினார் :

*"அஞ்சல் சுடலைமுத்துவின்*

*ஆலகவி கேட்டவர்கள்*

*நெஞ்சம் உலர்ந்துபட்ட*

*நேர்மை என்னே ! - நஞ்சு தின்னும்*

*பிறந்திறவா வரம் பெற்றான்*

*பித்தனான என்றக்கால்*

*பிறந்திருப்பார் பெற்றி என்ன*

*சொல் ! "*

பாடலின் அர்த்தம் புரிகிறதா ? கோனார் நோட்ஸ் தேவையே இன்றி புரியும் என்று நினைக்கிறேன். காதில் ரகசியமாய் வந்து கேட்பவர்களுக்கு சொல்கிறேன்.

திருப்பாற்கடலில் உருவான விஷத்தை சிவபெருமான் பருகியது தேவர்களை காப்பாற்றுவதற்காக இல்லை ஐயா. நம்ம சுடலைமுத்துவின் கவிதைகளை கேட்ட கொடுமை தாங்காமல் பருகி விட்டார். அவரால், தற்கொலையும் பண்ண முடியாத நிலைமை ஏற்பட்டு பித்தனாகி விட்டார். ஆனானப்பட்ட ஆதிசிவனுக்கே இந்த நிலைமை எனில், சாதாரண மானிடப்பிறவிகளான மக்களின் கதி என்னவாகும்?

அன்றோடு போனவர் தாம் சுடலைமுத்து.

★★★

ஞானராஜசேகரன் தயாரித்த "பாரதி" திரைப்படத்தில் ஒரு காட்சி உண்டு.

பிஜீத்தீவில் கண்ணீர் விடும் தமிழ்பெண்களை எண்ணி பாரதி


கவிதை வரிகளை எழுதும்போதே, கண்ணீர் விட்டு அழுவார் :

*"நாட்டை நினைப்பாரோ? எந்த*
*நாளினிற் போயதைக்*
*காண்போமென்றே அன்னை*
*நாட்டை நினைப்பாரோ ?- அவர்*
*விம்மி விம்மி விம்மி விம்மி யழுங்குரல்*
*கேட்டிருப்பாய் காற்றே ! துன்பக்*
*கேணியிலே எங்கள் பெண்கள் அழுங்குரல்*
*மீட்டும் உரையாயோ ?...*
*.. .. .. .. .. .. .. .. .. .. .. "*

இந்தக்காட்சி எவரின் மனதையும் தொடும். இந்த கவிதை வரிகளில் இருந்தே புதுமைப்பித்தனின் "துன்பக்கேணி " உருவாகியது.

இலங்கை தேயிலை தோட்டத்தில் வெள்ளைக்காரர்களின் பொருளாதார சுரண்டலுக்கும் பாலியல் வல்லுறவுக்கும் உள்ளான தமிழ்ப்பெண்களின் குரலை தனது நீண்ட நெடுங்கதையில் பதிவு செய்தார்.

அந்தக்கதையில் " வெள்ளிக்கிழமை மத்தியானம் வெயிலின் ஆதிக்கம் ஹிட்லரை




நல்லவனாக்கியது " என்ற வரிகளை போகிறபோக்கில் எழுதி இருப்பார்.

வெள்ளக்கோவில் சுடுகாட்டு அருகே உள்ள பனைவிளையில் இருக்கும் மருதாயி கிழவியிடம் மூக்குடை பட்டு திரும்பும் எமதர்ம ராஜாவைப்

பார்த்தால், நமக்கே பரிதாபமாய் இருக்கும்.

சாகப்போகிற கிழவியைப்பார்த்து " நான்தான் எமன்.." என்று விஸ்வரூபம் எடுத்து காட்சி தரும்போது,

"அப்படியா..வா..இப்படி இரி .." என்று காலை நீட்டி வெற்றிலையை தட்ட தொடங்கும்போதே, எமனின் கம்பீரம் மறைந்து போகும்.

"உன்னாலே என் உசுரைத்தானே எடுத்துக்கிட்டு போவ முடியும்?

இந்த உடலைத் தூக்கிட்டு போவ உனக்கு திறமை இருக்கா ?

ஒன்னை வேறயா மாத்த முடியும்..உன்னால அழிக்க முடியுமா? அடியோட இல்லாம ஆக்க முடியுமா? அதை உன்னைப்படைச்ச கடவுளாலேயே செய்ய முடியாதே ! அப்புறமில்ல உனக்கு? பழசுன்னா அவ்வளவு கிள்ளுக்கீரேன்னா நெனச்சே?" என்று பொக்கை வாயை திறந்து கிழவி சிரிக்கையில், எமன் மட்டுமா..நாமே வாயடைச்சு நிக்கிறோம்.

இது தான் புதுமைப்பித்தனின் அசலான எழுத்து.

★★★

"மனிதன் கடவுளைப் படைத்தான்;

அப்புறம் கடவுள் மனிதனை சிருஷ்டிக்க ஆரம்பித்தான்..

இருவரும் மாறி மாறி போட்டி போட ஆரம்பித்தார்கள் ;

இன்னும் போட்டி முடியவில்லை.

நேற்று வரை பிந்திப் பிறந்த கடவுளுக்கு முந்திப்பிறந்த

மனிதன் ஈடுகட்டிக்கொண்டு வந்தான்."

என்று துவங்கும் "சாமியாரும் குழந்தையும் சீடையும்" கதையின் களம் திருநெல்வேலி வண்ணாரப்பேட்டை பேராச்சி அம்மன் கோவில் அருகே இருக்கும் தாமிரபரணி ஆற்றின் படித்துறை.

படித்துறையில் அமர்ந்து தத்துவ விசாரத்தில் ஈடுபட்டிருக்கும் சாமியார்.

அருகே சற்று தள்ளி நான்கு வயது பெண் குழந்தை...

ஆற்றில் வெள்ளம் கரைபுரண்டு ஓடுகிறது. இடது பக்கம் சுலோச்சன முதலியார் பாலம்.. முட்டையும் பதநீரும் விட்டு அரைத்த காரையில் கட்டிய பாலம். கட்டபொம்முவின் துபாஷ் இராமலிங்க முதலியார் மகனான சுலோச்சன முதலியார் கட்டியது என்பதில் திருநெல்வேலிக்காரர்களுக்கு அபாரப்பெருமை என்று கிண்டல் செய்கிறார் புதுமைப்பித்தன். (இப்பவும் பாலம் கட்டி நூற்றி எழுபத்தாறு வருஷம் ஆச்சு என்று வருஷா வருஷம் கொண்டாடிட்டு இருப்பதை பார்த்தால் என்ன சொல்வாரோ ?)

பாவாடையில் சீடையை கட்டிக்கொண்டு வந்த குழந்தை காலை தண்ணீரில் விட்டு ஆட்டிக்கொண்டே அப்பப்ப சீடையை தின்கிறது.

சின்ன கால்காப்புகள் தண்ணீரில் இருந்து வெளிவரும்போது, சூரிய கிரணம் அதன் மேல் பட்டு கண் சிமிட்டும். அடுத்த நிமிடம் கிரகத்திற்கு ஏமாற்றம். குழந்தையின் கால்கள் தண்ணீருக்குள் சென்றுவிடும்.

சூரியனாக இருந்தால் என்ன? குழந்தையின் பாதத் துளிக்கு தவம் கிடந்து தான் ஆகவேண்டும்.

கதையை வாசித்து விட்டு வருகையில், இந்த இடத்தை கடக்க முடியாமல் வியந்து நிற்க வைப்பார் புதுமைப்பித்தன்.

" மனிதன் நல்லவன்தான். தான் உண்டாக்கின கடவுளிடம் அறிவை ஒப்படைத்திருந்தால் புத்திசாலியாக வாழ்ந்திருக்க முடியும். அது தன்னிடமிருந்ததாக அவனுக்கு தெரியாது. இப்பொழுது அறிவாளியாக அல்லல்படுகிறான்." என்று சாமியார் சொல்லும்போது வேறேதோ நம் மனக்கண்ணில் ஓடினால், அது அவரின் தவறல்ல.

"மனிதன் தன் திறமையை அறிந்து கொள்ளாமல் செய்த பிசகுக்கு கடவுள் என்று பெயர். மனிதனுக்கு உண்டாக்கத்தான் தெரியும். அழிக்க தெரியாது. அழியும்வரை காத்திருப்பதுதான் அவன் செய்யக்கூடியது."

என்று மேலும் சொல்லிச்சென்ற சாமியாரின் சொற்கள் அர்த்தம் மிக்கவை. அவை சாமியாரின் சொற்களா? இல்லையில்லை..

புதுமைப்பித்தனின் சொற்கள்..

அந்த கோடிக்கணக்கான சாயைகளின் கூட்டத்தில் ஒருவராவது சிலையை ஏறிட்டுப் பார்க்கவில்லை.. அனந்த கோடி வருஷங்களில் ஒருவராவது ஏறிட்டுப் பார்க்க வேண்டுமே!

"உயிரற்ற மோட்ச சிலையே..உன்னை உடைக்கிறேன்"

சாத்தனின் கோபம் நியாயமானது..

என்ன..இந்தக்கதை வாசிப்பவன் எவனும் கோவிலுக்குப் போவதில்லை.


வாசித்தவன் கோவிலுக்கு சென்றால் ..சிலையின் மகோன்னதத்தை உணர முடியும்..

மீண்டும் மீண்டும் வாசிக்க வாசிக்க ஒளிச்சுடராய் தெரிகிறான் புதுமைப்பித்தன்...! ●

## வாசித்தல் மறந்தவர்களுக்கு...

நின்ற இடந்தனில்
அங்குமிங்கும் அசையும்
ஆனைபோல்
எந்திரமொன்று
இருக்கும் வாத்தியங்களை
அச்சுர சுதி தொலைத்து
இசைத்துகொண்டிருந்தது...
நேரிடை வாத்திய
இசையினை
செவி குளிர கேட்ட
தெய்வங்கள்
கொஞ்சம் கொஞ்சமாய்
இவ்விசைக்கு தமை
அசைவிக்க
பழகிக்கொண்டன..
சுவாசம் தொலைத்து
சொச்ச வாழ்வினுக்காய்
வாசித்தல் மறந்தவர்களுக்கு
புனுகு தடவிட
இருந்துவிட்டுப்போகட்டும்...
அதுவரையினில்
மின்சாரம் மட்டும்
தொலைந்துபோகமில்
இருக்கக்கடவுக.

– ப.தாணப்பன்



கவிதைசூழ் உலகில்
வாழ்கிறேன் நான்
வாசிப்பின் ரசனையும்
அகம்புரிபடு இதயமும்
மௌனச்சம்மதமும்
வார்த்தையற்ற வெளியினாலான
தினப்புழக்கத்திலும் என
வியாபித்து நிற்கிறாய் நீ...!

ஞாபகமிருக்கிறதா...
அன்று உன்னிடம் நான் சொன்னது...!
உறக்கம் வரமறுத்த
பலப்பல இரவுகளை நான்
காலம் கவர்ந்த
என் அம்மாவின் புடவைபோர்த்தி
துயில்கரை ஏறியிருக்கிறேன்
சிதிலமான தாய் புடவையும்
விடைபெற்று
போனநாளின்பின்
உறங்கவேண்டி உன்னிடம்
ஒன்று கேட்டேன்
இன்னும் தருகிறாய் நீ...!

காலதாமதம் செய்யாதே
இனியும்...!
கிழிந்த உன் புடவை
ஒன்றேனும்
தந்தருள் எனக்கு...!
இரவின் பாரம் அதிகமாய்
கனக்கிறது இப்போதெல்லாம்

அம்மாவின் கதகதப்பையும்
உன் காதலின் கணகணப்பையும்
ஒருசேர போர்த்திக்கொண்டு
ராத்துயில்
கரையேறவேண்டுமடி நான்...!

**– ஆர்க்கே இராமநாதன்**



# இறக்கைச் சமனிகள்

பழையதைத் தரும்
மனிதர்களிடம் பகைமை
பாராட்டுவதில்லை பறவைகள்..
விலையில்லா அரிசியை
வீதியில் இறைத்தாலும்
இரையென உண்டு
புண்ணியத்தைத் தூவிச் செல்பவை..
உடைந்து ஒழுங்கற்ற
உதவாத நெகிழியில் உணவோ, நீரோ
ஒன்றும் சொல்லாமல்
உற்சாகமாய் உரக்கக் கத்துபவை..
மீந்து போனதையோ காய்ந்து போனதையோ
கடித்துக் குதறும் அவைகள் கடிந்து
கொள்வதில்லை மனிதர்களை..
இலையில் வைத்தாலும், வலையில்
வைத்தாலும் வந்துண்பதை வாடிக்கையாகக்
கொள்பவை.
நேரந்தவறினாலும், நேர்மை தவறினாலும்
நிறைந்த வயிறுகளுடன்
நன்மைகளையே சிதறிச் சென்றிருக்கும்..
என்றோ ஒருநாள் உணவிடுபவர்களும்
அன்னலெட்சுமிகள்தான் பறவைகளுக்கு.
வேகாததையும், வேண்டாததையும்
விளக்கியதையும், விருப்பமற்றதையும்
ஏற்கும் அவை உணவிடாத
மனிதர்களுக்காகவும்
இயற்கையைச் சமன்செய்பவை.

**– பெருமாள் ஆச்சி, சென்னை – 95**



# பொன்னகரம்!

பொன்னகரத்தைப் பற்றிக் கேட்டிருக்கிறீர்களா? நமது பௌராணிகர்களின் கனவைப் போல் அங்கு ஒன்றுமில்லை. பூர்வ புண்ணியம் என்று சொல்லுகிறார்களே, அந்தத் தத்துவத்தைக் கொண்டு, நியாயம் என்று சமாதானப்பட வேண்டிய விதிதான். ஒரு சில 'மகாராஜர்களுக்காக' இம்மையின் பயனைத் தேடிக்கொடுக்கக் கடமைப்பட்டு வசிக்கும் மனிதத் தேனீக்களுக்கு உண்மையில் ஒரு பொன் நகரந்தான் அது.

ரயில்வே தண்டவாளத்தின் பக்கமாக, சாராய டிப்போவுக்குப் போகிறதே ஒரு சந்து, அது தான் அங்கு 'மெயின்' ராஸ்தா. கைகோர்த்த நான்கு பேர் வரிசை தாராளமாகப் போகலாம். எதிரே வண்டிகள் வராவிட்டால், இதற்குக் கிளையாக உள் வளைவுகள் உண்டு. முயல் வளைகள் போல்.

இந்தத் திவ்வியப் பிரதேசத்தைத் தரிசிக்க வேண்டுமானால்... சிறு தூறலாக மழை சிணுசிணுத்துக் கொண்டிருக்கும் பொழுது சென்றால்தான் கண்கொள்ளாக் காட்சியாக இருக்கும். வழி நெடுகச் சேற்றுக் குழம்புகள். சாலையோரமாக 'முனிசிபல் கங்கை' அல்ல, யமுனைதானே கறுப்பாக இருக்கும்? அதுதான். பிறகு ஓர் இரும்பு வேலி, அதற்குச் சற்று உயரத் தள்ளி அந்த ரயில்வே தண்டவாளம்.

மறுபக்கம், வரிசையாக மனிதக் கூடுகள் ஆமாம், வசிப்பதற்குத்தான்!

தண்ணீர்க் குழாய்கள்? இருக்கின்றன. மின்சார விளக்கு? ஞாபகமில்லை சாதாரண எண்ணெய் விளக்கு, அதாவது சந்திரன் இல்லாத காலங்களில் (கிருஷ்ண பட்சத்தில்) ஏற்றி வைத்தால் போதாதா?

பொன்னகரத்துக் குழந்தைகளுக்கு 'மீன்



பிடித்து’ விளையாடுவதில் வெகு பிரியம். அந்த முனிசிபல் தீர்த்தத்தில், மீன் ஏது? எங்கிருந்த பணக்கார வீடுகளிலிருந்தோ, சில சமயம் அழுகிய பழம், ஊசிய வடை, இத்யாதி உருண்டு வரும். அது அந்த ஊர்க் குழந்தைகளின் ரகசியம்.

ரயில்வே தண்டவாளத்தின் பக்கத்தில் விளையாடுவதில் என்ன ஆனந்தமோ? வேலி இருக்கத்தான் செய்கிறது. போகக் கூடாது என்ற சட்டம் குழந்தைகளுக்குத் தெரியுமா? ‘போனால்’ பெற்றோருக்குத் தான் கொஞ்சம் பாரம் ஒழிந்ததே! குழந்தைகள் தான் என்ன, ‘கிளாக்ஸோ’ ‘மெல்லின்ஸ் பூட்’ குழந்தைகளா, கம்பி இடையில் போக முடியாமலிருக்க? புகைந்தோடும் அந்த இரும்பு நாகரிகத்திற்கு, வரிசையாக நின்று “குட்மார்னிங் சார்!” என்று கத்துவதில் ரொம்ப ஆனந்தம் அவர்களுக்கு. அதுதான் அவர்களுக்குக் கிடைக்கும் ஆரம்ப ஆங்கிலக் கல்வி.

ஐந்து மணிக்கு அப்புறந்தான் ஊர் கலகலவென்று உயிர் பெற்று இருக்கும். அப்பொழுதிருந்து தான் அவ்வூர்ப் பெண்கள் தங்கள் வேலையைச் செய்வார்கள். சாராய வண்டிகள், தண்ணீர் எடுக்கவரும் பெண்கள்! அங்கு தண்ணீர் எடுப்பது என்றால் ஒரு பாரதப் போர்.

இள வயதில் நரைத்தது போல் பஞ்சு படிந்த தலை, மாசடைந்த கண்கள் விடிய விடிய மின்சார ‘ஸ்பின்டிலைப்’ (கதிர்) பார்த்துக் கொண்டு இருந்தால், பிறகு கண் என்னமாக இருக்கும்? கண்கள்தாம் என்ன இரும்பா? உழைப்பின் ஆரோக்கியத்தால் ஏற்பட்ட கட்டமைந்த அழகு. ஆரோக்கியமா? அது எங்கிருந்து வந்தது? பாக்டீரியா, விஷக் கிருமிகள், காலரா இத்யாதி அங்கிருந்துதானே உற்பத்தி செய்யப் படுகின்றன! எப்படியாவது உயிர் வாழ வேண்டும் என்று ஆசையிருந்தால் எல்லாம் நடக்கும். பழைய கற்காலத்து மனிதன், புலி சிங்கங்களுடன் குகையில் வாழ்ந்து வந்தான்; அவைகளும் அவனைக் கொன்றன; அவனும் அவைகளைக் கொன்றான். அதற்காக வலிமையற்று, வம்சத்தை விருத்தி செய்யாமல் செத்தொழிந்தா போனான்? வாழ்க்கையே ஒரு பெரிய வேட்டை, அதற்கென்ன?

கழுத்தில் ஒரு கருப்புக் கயிறு வாழ்க்கைத் தொழுவின் அறிகுறி. அதைப் பற்றி அங்கு அதிகக் கவலையில்லை. அது வேறு உலகம் ஐயா, அதன் தர்மங்களும் வேறு.

அம்மாளு ஒரு மில் கூலி. வயது இருபது அல்லது இருபத்திரண்டிற்கு மேல் போகாது. புருஷன் ‘ஜட்கா’ வைத்திருக்கிறான்; சொந்த வண்டிதான். அம்மாளு, முருகேசன் (அவள் புருஷன்), அவன் தாயார், தம்பி, முருகேசன் குதிரை ஆக நபர் ஐந்து சேர்ந்தது அவர்கள் குடும்பம். இருவருடைய வரும்படியில்தான், இவர்கள் சாப்பாடு (குதிரை உள்பட), வீட்டு வாடகை, போலீஸ் ‘மாமூல்’, முருகேசன் தம்பி திருட்டுத் தனமாகக் கஞ்சா அடிக்கக் காசு எல்லாம் இதற்குள் தான். எல்லாரும் ஏகதேசக் குடியர்கள் தான். ‘டல் ஸீஸ’னில் பசியை மறக்க வேறு வழி? பசி, ஐயா, பசி! ‘பத்தும் பசி வந்திடப் பறந்துபோம்’ என்று வெகு ஒய்யாரமாக, உடம்பில் பிடிக்காமல் பாடுகிறீரே, அங்கு நீர் ஒரு நாள் இருந்தால் உமக்கு அடிவயிற்றிலிருந்து வரும் அதன் அர்த்தம்!

அன்றைக்கு முருகேசனுக்குக் குஷி, அவனும், அவன் குதிரையும் ‘தண்ணி போட்டு’ விட்டு ரேஸ் விட்டார்கள். வண்டி ‘டோ க்கர்’ அடித்தது. ஏர்க்கால் ஒடிந்தது. குதிரைக்கு பலமான காயம். முருகேசனுக்கு ஊமையடி. வீட்டில் கொண்டுவந்து போடும்பொழுது பேச்சு மூச்சில்லை. நல்ல காலம் குடித்திருந்தான், இந்த மாதிரி வலி தெரியாமலாவது கிடக்க. வீக்கத்திற்கு என்னத்தையோ அரைத்துப் பூசினாள் அம்மாளு. அப்பொழுதுதான் சற்று பேசினான். அவனுக்குப் பால் கஞ்சி வேண்டுமாம்! அம்மாளுவுக்குக் கூலிபோட இன்னும் இரண்டு நாள் இருக்கிறது. வீட்டில் காசேது?

அம்மாளு தண்ணீர் எடுக்க வருகிறாள்.

‘கும்’மிருட்டு பஞ்சாங்கத்தின்படி இன்றைக்குச் சந்திரன் வரவேண்டும். ஆனால் அது மேகத்தில் மறைந்து கொண்டால் முனிசிபாலிடி என்ன செய்ய முடியும்?

எப்பொழுதும்போல் இரைச்சல்தான். ஒருவாறு தண்ணீர் பிடித்தாய்விட்டது. திரும்பி வருகிறாள்.

சந்தின் பக்கத்தில் ஒருவன் அம்மாளுவின் மேல் ரொம்ப நாளாகக் ‘கண்’ வைத்திருந்தவன்.

இருவரும் இருளில் மறைகிறார்கள். அம்மாளு முக்கால் ரூபாய் சம்பாதித்து விட்டாள். ஆம், புருஷனுக்குப் பால் கஞ்சி வார்க்கத்தான்!

என்னமோ கற்பு, கற்பு என்று கதைக்கிறீர்களே! இதுதான் ஐயா, பொன்னகரம்! ●



துரைராசு மெத்தையைத் தடவிப்பார்த்தான். சுந்தரம் ஐயா வீட்டு இட்டலி போல மெத்தை மெத்மெத்தென்றிருந்தது. வேலாயி மெத்தையில் சுருண்டு படுத்திருந்தாள். நான்கு நாட்களுக்கு முன்வரை ஓரம் கிழிந்த கோரைப்பாயில் கிடந்தவளுக்கு வாழ்வு வந்துவிட்டதென்று எல்லோரும் பேசிக்கொண்டார்கள்.

‘‘தொர்ராசு... ஒங்க ஆத்தாளுக்கு வந்த வாழ்வப் பாத்தியா... போற காலத்துல பஞ்சி மெத்தையில படுக்கணும்னு எழுதியிருக்கும் போல...” என்று சரசுகூட சொல்லிச் சிரித்தாள்.

“பாயில படுக்க முடியலடா. மேலெல்லாம் முள்ளு, முள்ளா குத்துது” என்று வேலாயி புலம்பியதை செல்வமணி அப்படியே மாடசாமியிடம் சொல்ல மறுநாளே ஒரு ஆட்டோவில் மெத்தை வந்து இறங்கிவிட்டது. மாடசாமி, செல்வமணியின் பெரியப்பா மகன். ஆனால் வளர்த்ததெல்லாம் வேலாயிதான்.

‘‘பெத்தவ இவளா, அவளான்னு தெரியலியே...” என்று ஊர்சனம் ஆச்சரியப்படும். மாடசாமியும், செல்வமணியும் வேலாயியின் இடுப்பின் இரண்டுபக்கமும் எப்போதும் இருப்பார்கள்.

“மூத்தாரு புள்ளயும் எம்புள்ளமாரிதான்...” என்பாள் வேலாயி.

அந்தப் பாசம்தான் மெத்தை வாங்கி வரச் செய்தது. மாடசாமி அரசாங்கத்தின் கடைநிலை ஊழியனென்றாலும் செல்வமணியைவிட பொருளாதாரத்தில் ஒருபடி உயர்ந்தவன்.

செல்வமணிக்கு சாண் ஏறினால் முழம் சருக்கிற்று. விவசாயம் செய்த புண்டியம்.

துரைராசு பிள்ளைகளைக் கூட்டிவந்து மெத்தையை காட்டினான்.

“தொட்டுப் பாக்கலாமாடா...?”

ஒருவன் கேட்டான்.

ஒங்கையெல்லாம் புளுதி அப்பியிருக்கு. இதோட தொட்டீன்னா மெத்த அழுக்காயிரும். அப்புறம் எங்கப்பா வஞ்சும்.”

“நீ தொட்டுப் பாத்துருக்கியா...?”

இன்னொருவன் கேட்க, துரைராசுவின் தலை பெரிதாக அசைந்தது. கடந்த நான்கு நாட்களாக போகும்போதும், வரும்போதும் அவன் கைகளைச் சட்டையில் அழுந்த துடைத்துக் கொண்டு தொட்டுப் பார்ப்பதை வழக்கமாக வைத்திருந்தான்.

மெத்தை கெட்டியான வெள்ளைக்காடாவில் தைக்கப்பட்டிருந்தது. வெள்ளை என்றால் அரைவெள்ளைதான். இருந்தும் சாணம் மெழுகிய தரையில் அது தும்பைப்பூப்போல தெரிந்தது.

செல்வமணி அடியில் கோரைப்பாயை விரித்து மேலே மெத்தையை போட்டிருந்தான். குடிசைக்குள் அது பொருந்தாத பொருளாக காட்சி தந்தது.

தோல் சுருங்கிய வேலாயியை அதில் கிடத்தியபோது மெத்தையின் லட்சணம் குறைந்துவிட்டாற்போல் எல்லோருக்கும் தோன்றியது.

“ஒரு ஒற தச்சாந்து போடணும். இல்லாட்டி மெத்த அழுக்காயிரும்.” மெத்தையைப் பார்க்க வந்த பக்கத்துத்தெரு வாலாம்பா அதை நோட்டம் விட்டபடியே சொன்னாள்.

வேலாயியைப் பார்க்க வருவதைவிட மெத்தையைப் பார்க்கவே அதிக கூட்டம் கூடியது.

“ஒற தக்க காசுக்கெங்க போறது. மெத்த வாங்கிக் குடுத்த மவராசனே ஒறயும் தச்சாந்து போட்டாத்தான் உண்டு” என்றாள் சரசு.


அவளுக்கு உள்ளூர நமைச்சலாக இருந்தது. கிழவிக்கு அடித்த யோகத்தில் அவள் கறுவிக் கொண்டிருந்தாள். மாடசாமி மெத்தை வாங்கித்தர அவன் மனைவி சம்மதித்ததே பெரிய விஷயம். இதில் உறையாவது ஒண்ணாவது...

மெத்தை அந்தப் பத்து நாட்களுக்குள் ஆங்காங்கே அழுக்கடையத் தொடங்கியது. தண்ணீர்க்கறை பட்ட இடங்களில் எல்லாம் குட்டி, குட்டி நாடுகளின் வரைபடங்கள் உருவாயின.

வேலாயி கஞ்சி குடித்தபோது கைதவறி மெத்தையில் சிந்தினாள். சிந்திய கஞ்சியை கையால் வழித்தெறிந்தாள். அதுவும் கறையாகிப்போனது. துரைராசு கவலையுடன் பார்த்துக் கொண்டிருந்தான்.

மெத்தையில் ஒருநாளாவது படுத்துவிட வேண்டுமென்று அவனுக்கு ஆசை. ஒற்றை மெத்தை அது. அதில் வேலாயி

# மெத்தை




கோணல்மாணலாக படுத்துக் கிடந்தாள்.

“ஒங்காத்தா அதிஷ்டக்காரி...” என்றும்

‘‘குடிசைக்குள்ள மெத்த போட்டு ஒறங்குற மவராசி...”

என்றும் நண்பர்கள் துரைராசுவிடம் கூறினார்கள்.

‘‘எலவம் பஞ்சில தச்ச மெத்த... எப்படியும் மூவாயிரம் ரூவா இருக்கும்” என்று சரசுவின் அண்ணன் ஒருமுறை வந்தபோது சொன்னான்.

துரைராசுவுக்கு மெத்தை மீதான மதிப்பு கூடிப்போனது. ஆரம்பத்தில் தடிமனாக இருந்த மெத்தை நாளாக, ஆக உயரம் குறைந்து சப்பையாகிப்போனதில் அவன் கலவரமானான்.

‘‘மெத்த வீணாப்போயிருச்சாப்பா...?”

துரைராசு கவலையுடன் கேட்க, செல்வமணி சிரித்துவிட்டு, “வீணால்லாம் போவல. பஞ்சி மெத்த அப்புடித்தான் நாளாவ ஆவ அமுங்கிப்போயிரும்’’ என்றான்.

வேலாயிக்கு பேரனின் ஆசை புரிந்ததோ என்னவோ அடிக்கடி அழைத்து அழைத்து அருகில் அமரவைத்துக் கொண்டாள்.

“தொர்ராசு, இஞ்ச வா சாமி...” என்ற வேலாயியின் குரலுக்கு துரைராசு எங்கிருந்தாலும் பாய்ந்து வருவான்.

“ஆத்தாளுக்கு காலு நோவுது, புடிச்சு விடு சாமி...’’ என்றோ “முதுவு அரிக்கிது சொறிஞ்சிவுடு ராசா...” என்றோ அவள் சொல்லும் வேலைகளை மெத்தையிலமர்ந்து முகம் சுளிக்காமல் செய்வான்.

‘‘மெத்த வாங்கிக் குடுத்தவுரு கலரு மெத்தையா வாங்கியாந்துருக்கக் கூடாது...”

என்று சரசு ஒரு நாள் முணுமுணுத்தது வேலாயியிக்கு காதில் விழுந்தது. அவளுக்கும் அதே நினைப்புதான்.

“ஒடம்பு நோவுதுன்னவுடனே மெத்த வாங்கிக் குடுத்தான். தானத்துக்கு குடுத்த மாட்ட பல்லப் புடிச்சி பாக்கக்கூடாது, ஆமா...” என்று தன் மனதுக்கு கடிவாளம் போட்டுக் கொண்டாள்.

“பெரியய்யா வூட்லயும் இந்தமாரி மெத்ததான் இருக்கு.” என்றாள் பக்கத்துவீட்டு கனகு. அவள் பெரியய்யா வீட்டில் வேலை செய்கிறாள்.

‘‘நல்லா அடிக்கிற நீல நெறத்துல ஒற தச்சிப் போட்ருக்காங்க. அத வாராவாரம் தொவைக்கப் போடுவாங்க. அந்தமாரி இதுக்கு ஒற தச்சிப்போட்டா மெத்த வீணாவாம இருக்கும்’’ என்று அவள் யோசனை சொன்னது துரைராசுவுக்குப் பிடித்திருந்தது. செல்வமணியிடம் சொன்னான்.

‘‘சரி பார்க்கலாம்.’’ என்றான் அவன். இப்பவோ, அப்பவோ என்று கிடக்கும் கிழவியின் ஆயுசுதானே அதற்கும். அதை உத்தேசித்து மகனை சமாதானப்படுத்தும் விதமாக அவன் சொன்னது துரைராசுவுக்கு சந்தோசத்தைத் தந்தது.

துரைராசு குண்டானில் பழையதை அள்ளிப்போட்டு மொக்கிக் கொண்டிருந்தான். பக்கத்தில் அலுமினிய சில்லிலிருந்த முருங்கைக்கீரை போட்டு சுண்டிய சுண்டக்குழம்பை அவ்வப்போது தொட்டுக்கொண்டான்.

“பள்ளிடத்துக்கு கௌம்பிட்டியா ராசா...?”

மாத்திரையின் வீரியத்தில் தூக்கமும் விழிப்புமாக இருந்த வேலாயி கேட்டாள். அவள் தாட்டியமாக நின்று உழைத்தவள். ஒரு வேலை தெரியாதென்பதில்லை. அப்படி ஒரு சுறுசுறுப்பு. வேலையில் ஒரு செய்நேர்த்தி. இழுத்துப்போட்டு உழைத்ததில் போதுமான சத்து சேர்த்தியுமில்லாததில் உடம்பு பழுதடைந்து போனது.

துரைராசு கையலம்பி சட்டையில் கையை துடைத்துக் கொண்டு மெத்தை அருகில் வந்து நின்றான். வேலாயி கண்கள் மூடிக்கிடந்தாள்.

“ஆத்தா எப்ப சாவும்...?”

சட்டென உள்ளுக்குள் ஒரு கேள்வி முளைத்தது. நெடுநாளாக மனசுக்குள் புதைந்து கிடந்த கேள்வி இன்று தூர்விட்டு விட்டது.

துரைராசு மெல்லக் குனிந்து வலது கையை மெத்தையின் ஒரு நுனியில் வைத்து மெல்லமாய் தடவியபடியே இடது நுனிவரை வந்தான். மீண்டும் இடதிலிருந்து வலம். திரும்பவும் அப்படி இரண்டுமுறை.

“என்னடா பண்ற...?”

சரசு குரல்கொடுக்க, வேலாயி திடுக்கிட்டு கண்களைத் திறந்தாள். பேரன் அருகில் அமர்ந்திருப்பதைக் கண்டதும் வயிறு குழைந்தது.

“ஏஞ்சாமி, சோறு தின்னுட்டியா...?”

“தின்னுட்டன் ஆத்தா... நான் பள்ளிடம் போயிட்டு வாரன்” என்றவன் புத்தகப்பையை எடுத்து மாட்டிக்கொண்டு வெளியே வந்தான்.

மெத்தையில் படுத்துக்கொள்ள ஆசையாயிருந்தது. ஆத்தா போய்விட்டால் ஒத்தையாக மெத்தையில் படுத்துக்கொள்ளலாம். தெருப்பிள்ளைகள் எதிரில் கெத்து காட்டலாம்.

“மெத்தையில் படுத்து ஒறங்குறப்ப ராசா கனவா வருதுடா...” என்று எடுத்துவிடலாம்.

ருசியாக தின்றதோ, பளிச்சென்று உடுத்தியதோ கிடையாது. அதற்கான ஆசைகளும் மனதில் குமிழிகளிட்டதில்லை. மூங்கில் காட்டில் வளரும் மூங்கில், தன் தன்மையிலேயே வளருமேயன்றி, ஆலின் தன்மையில் வளராது. அதுபோல துரைராசு தன் தன்மையையொத்த சிறுவர்களுக்கு மத்தியில் வளர்ந்ததால் வளமையான அந்நியத்தன்மையைப் பற்றி கவனம் கொள்ளவில்லை.

புதிதாக மெத்தை வீட்டுக்குள் இடம் பிடித்ததும் மெல்லிய ஆசையொன்று ஊர்ந்தெழுந்து மனக்குறுக்காக ஓடிக் கொண்டிருந்தது. சதா அதில் படுப்பது பற்றிய எண்ணம் அவனை அழுத்திக்கொண்டேருந்தது.

பள்ளியில் இண்டெர்வெல் பீரியடில் சிறுநீர் கழித்தபடி அவன் அருகில் நின்றிருந்த சிறுவனிடம் சொல்லிக் கொண்டிருந்தான்.

“பெரியப்பா, ஆத்தாவுக்கு மெத்த வாங்கிக் குடுத்துருக்காரு. தொட்ட கையி பொதஞ்சி போயிரும். அம்புட்டு மெதுமெதுப்பு. சும்மா இல்லா, மூவாயிரம்ரூவா.... இன்னிக்கி சாங்காலம் பள்ளிடம் வுட்டதும் வாரியா, காட்டுறேன்...”

கேட்டுவிட்டு கையில் தெறித்த சிறுநீரை டிராயரில் துடைத்து, உறுப்பை டிராயருக்குள்

இருவரும் *பேசிக்கொண்டது* திண்ணையிலமர்ந்து *வீட்டுப்பாடம் எழுதிக்* கொண்டிருந்த துரைராசுவின் *காதில் விழுந்தது.* அவனுக்கு ஒருபுறம் *மகிழ்ச்சியாகவும், மறுபுறம்* பயமாகவுமிருந்தது.

போட்டுக் கொண்டு ஜிப்பை மூடியபடியே கூட வந்தவன் தோளில் கைபோட்டு நடந்தான்.

“ஒங்காத்தா செத்துருச்சின்னா நீ அதுல படுத்துக்கலாம். ஒனக்கு யாரு போட்டி இருக்கா....” என்றான் அவன். துரைராசுவின் கண்கள் பெருமையில் மிளிர்ந்தன.

கிழிந்த கோரையை விரிக்கும்போது ஓரத்தில் கழன்று விழும் ஒற்றைக்கோரைகள் பாயை பலமிழக்கச் செய்து கொண்டிருந்தன. ஒவ்வொரு இரவும் சரசு பாய் விரிக்கையில் மாற்றுக்கோரை வாங்க செல்வமணியிடம் ஞாபகப்படுத்துவாள்.

“நூத்தம்பது, எரநூறாவும் அம்புட்டு காசுக்கு நானெங்க போறது. வர்ற காசு வாய்க்கும் கைக்குமே சரியா இருக்கு. கொஞ்சநாளு பொறு, பாக்கலாம்.” என்பான் அவன்.

ஆத்தா போய்விட்டால் மெத்தையில் படுத்துக்கொண்டு சுமாரான தன்னுடையதை அவர்களுக்குத் தந்துவிடலாம் என்று துரைராசு நினைத்துக் கொண்டான்.

கருப்பு மசிக்குள் முக்கி எடுத்தது போன்ற இரவு. ஊதக்காற்றின் ஈரமான வீசலுக்கு தெருநாய்கள் உடல் குறுக்கி உறங்கிக் கொண்டிருந்தன. சரசுவின் பழைய புடவைக்குள் சுருண்டு கிடந்த துரைராசு வயிறு முட்டு புரண்டு படுத்தான்.

“யப்பா....சாமி.... குளுரு புடுங்கி எடுக்குதே...”

வேலாயி தூக்கத்தில் முனகியதில் விழித்துக் கொண்டவனுக்கு அவள் போர்த்திக் கொள்ளாமல் படுத்துக் கிடந்தது தெரிந்தது. மெல்ல எழுந்து சென்று போர்வையை போர்த்திவிட்டவன் சிறிதுநேரம் அப்படியே நின்றிருந்தான்.

மெத்தைக்கு உரிமையாளன் என்கின்ற தோரணையில் அவனின் பார்வை அதன்மேல் நிலைத்திருந்தது.

‘‘ஆத்தா செத்துட்டா பெரிப்பா வந்து மெத்தைய எடுத்துட்டுப் போயிருவாரா...”

திடீரென்று அந்த எண்ணம் தோன்ற, துரைராசு திகைத்துப்போனான்.

‘‘அவர் வாங்கித்தந்ததை அவரே எடுத்துப்போனால் யார்தான் என்ன சொல்ல முடியும். கிண்ணத்தில் எண்ணெயோ பருப்போ அக்கம்பக்கத்தினரிடம் கடன் வாங்கும் அம்மா அதை மறக்காமல் திருப்பி விடுகிறாளே. அப்படி இதுவும் திரும்பப்போய்விடுமோ...”

ஏதேதோ நினைவுகள் ஓடின. உடனே அம்மாவிடம் அதுபற்றி கேட்டுவிட மனசு துடித்தது. எழுப்பிக்கேட்டால் நாலு மொத்து மொத்துவாள் என்ற பயத்தில் மெல்ல அவள் கையைச் சுரண்டினான்.

“யம்மா.... யம்மா...”

“என்னடா....?”

அவள் தூக்கக் கலக்கத்தில் எரிந்து விழுந்தாள்.

‘‘வயித்த முட்டுதும்மா... ஒண்ணுக்கு போவணும்...”

‘‘ஒன்னோட பெரிய ரோதனையாப் போச்சிடா... வந்து தொல...”

கோபத்தோடு வந்து கொல்லைக் கதவைத் திறந்துவிட்டாள்.

துரைராசு சிறுநீர் கழித்தபடியே அவளைப்பார்த்தான். சுவரில் தலை சாய்த்து கண்கள் மூடியிருந்தாள்.

‘‘யம்மா... ஆத்தா செத்துப் போயிட்டா பெரிப்பா வந்து மெத்தைய கொண்டுக்கிட்டு போயிருவாரா...?”

கவலையோடு கேட்டான்.

“கூறுகெட்ட மூதி... எந்த நேரத்துல என்னா கேள்வி கேக்குற.... ஒழுங்கா மூத்திரம் பேஞ்சிட்டு உள்ளாற வா. இல்லாட்டி கொல்லையில வச்சி தாப்பா போட்டுட்டு போயிருவேன்.”

சரசு சுள்ளென்று விழ, துரைராசு மௌனமாக உள்ளே வந்தான்.

வேலாயியை கொல்லைப்புறம் தூக்கிவந்து குளிக்க வைக்கவும், மலம் கழிக்க வைக்கவும் செல்வமணிக்கு சிரமமாக இருந்தது.

காய்ந்த குச்சி போல அளிருந்தாலும் ஒற்றையாளாய் அவளை சுமந்து வர முடியாது மூச்சிரைத்தது.

அவன் சிரமம் புரிந்து சரசுவும் ஒரு கை பிடித்து தூக்கியதில் இடுப்பு நோவு கண்டது. வேலாயி இரண்டு நாட்களுக்கொரு முறை மலம் கழித்தாள். வாரம் ஒருமுறை குளிக்க வைக்கப்பட்டாள்.

''குளுரு காலம். அதனால வாரத்துக்கு ஒருமொற குளுப்பாட்டுறோம். கோடை ஆரம்பிச்சிருச்சுன்னா தெனந்தெனம் குளுப்பாட்டணும். இல்லாட்டி ஒடம்பு புண்ணு கண்டு போயிரும். கெழவிய தூக்கி எடுக்குறதுக்குள்ள அடி தள்ளிப் போயிருது. அவருக்கும் வரவர முடியல. இன்னும் எத்தினி நாளுதான் இப்புடி தும்பப்படணுமோ தெர்ல....''

சரசு செல்போனில் முனகிக் கொண்டிருந்தாள்.

"ஆகாரம் செல்லுதா, இல்லியா...?"

மறுமுனையிலிருந்த அண்ணி கேட்டாள்.

"முன்னமாரி இல்ல. மூணு வேளைக்கும் சேத்து ஒரு டம்பளர் கஞ்சி குடிச்சா பெரிய விஷயம்."

"அப்ப சீக்கிரம் போயிரும், கவலப்படாத..."

அவள் ஆறுதல் சொல்ல சரசு பெருமூச்செறிந்தாள்.

"கொலதெய்வம் மாரி நீங்க சொல்றீங்க. நீங்க சொன்னாப்ல அது சீக்கிரமே போயி சேந்துருச்சின்னா சரிதான்."

இருவரும் பேசிக்கொண்டது திண்ணையிலமர்ந்து வீட்டுப்பாடம் எழுதிக் கொண்டிருந்த துரைராசுவின் காதில் விழுந்தது. அவனுக்கு ஒருபுறம் மகிழ்ச்சியாகவும், மறுபுறம் பயமாகவுமிருந்தது.

"பெரிப்பா வந்து மெத்தைய தூக்கிட்டுப் போயிருவாரோ..."

நாலாம்நாள் வேலாயி தூக்கத்திலேயே மரித்துவிட்டாள்

உறவு சனம் குழுமிக்கிடந்தது. மாடசாமி வந்து கதறிவிட்டு போய் திண்ணையிலமர்ந்து கொண்டான். சரசு ஒப்புக்கு அழுது வைத்தாள். துரைராசு சுவரோரம் ஒண்டியிருந்தான்.

மெத்தைக்கு விடுதலை கொடுத்த வேலாயி பலகையில் கிடத்தப்பட்டிருந்தாள். சந்தன வாசனையோடு ஊதுபத்தி புகைந்து கொண்டிருந்தது. துரைராசுவுக்குள்ளும் சந்தோசப் புகைச்சல். மாடசாமியைப் பார்த்தபோது மட்டும் பயம் எழுந்து அடங்கிற்று.

''ஒத்தப் பேரப்புள்ள... அவன் மேல உசிரையே வச்சிருந்தா. அவன் இருமுனா பதறுவா, தும்முனா தொவண்டுடுவா. கடசீலா கட்டையில போனாளே...''

சில கிழவிகள் சிறுவனைக் கட்டிக் கொண்டு ஒப்பாரி வைத்தனர். அவனோ அன்றைய இரவின் மெத்தை மீதான உறக்கம் பற்றிய கற்பனையில் சஞ்சரித்திருந்தான்.

வேலாயியைக் குளிப்பாட்டி சடங்குகள் செய்தார்கள். பிணம் எடுத்ததும் வீட்டுக்குக் கிளம்ப அத்தனை சனமும் ஆயத்தமாயிருந்தனர்.

''பனிக்காலமில்ல... நேரத்தோட போயி தலையில தண்ணியள்ளி ஊத்திக்கணும். பொழுது போயி முழுவுனா காச்ச வந்து படுக்கையில போட்ரும்.'' கூட்டத்தில் யாரோ சொன்னார்கள்.

ஒருவழியாக சடங்குகள் முடிந்து பெரும் ஒப்பாரி சத்தத்துடன் பாடை கிளம்பிற்று. உறவினர் ஒருவர் வேலாயி போர்த்தியிருந்த போர்வை, எண்ணெய் இறங்கிய தலையணையை மெத்தைக்குள் வைத்துச் சுருட்டிப் பாயோடு சேர்த்து வெளியே கொண்டு போனார். பார்த்த துரைராசு பதைபதைத்துப் போனான்.

"யம்மா, மாமா மெத்தைய கொண்டுக்கிட்டு போறாரும்மா..."

"அதுக்கென்ன இப்ப...?" சரசு கோபமாகக் கேட்டாள்.

"எங்கம்மா கொண்டுக்கிட்டு போறாரு...?"

"தூக்கி வீசத்தான்..."

"தூக்கி வீசவா... யம்மா மெத்தம்மா.... அதமட்டும் குடுத்துற சொல்லும்மா...." துரைராசு செருமி செருமி அழுதான்.

''இந்த கலியுகத்துலயும் பாசம் வத்தலடியம்மா... பாரு, பய ஆத்தாள நெனச்சி தேம்பி தேம்பி அழுவுறத...'' ஒருத்தி சொல்ல, துரைராசு அழுதுகொண்டேயிருந்தான். ●

இரமணி முருகேஷ்

# சுண்டல்...

இந்த சுண்டல் பக்கத்தை எழுதும் இன்று மார்ச் 14.

இதே தேதியில் 1879ல் ஆல்பர்ட் ஐன்ஸ்டைன் பிறந்தார்.

அவர் பற்றி பேசுவோமா?

$E=mc^2$ என்று இளைஞர்கள் தம் டீ ஷர்ட்களில் புரிந்தோ புரியாமலோ பதித்திருக்கும் அணுகுண்டு உருவாகிய சூத்திரத்தைத் தந்த சூத்திரதாரி.

புகழ் பெற்ற சார்புக் கோட்பாட்டை (Theory of relativity) முன் வைத்ததுடன், குவாண்டம் எந்திரவியல், புள்ளியியற் எந்திரவியல் மற்றும் அண்டவியல் ஆகிய துறைகளிலும் அசத்தினார்.

ஒளி மின் விளைவைக் கண்டுபிடித்து விளக்கியதற்கு கோட்பாட்டு இயற்பியலில் அவர் செய்த சேவைக்காகவும் 1921ல் இயற்பியலுக்கான நோபல் பரிசைப் பெற்றார்.

‘பள்ளிக்கூடம் என்னை தோற்கடித்தது. நான் பள்ளிக்கூடத்தைத் தோற்கடித்தேன். ஆசிரியர்கள் காவல்காரர்கள் போல நடத்தினர். நான் எதை தெரிந்துகொள்ள வேண்டுமோ அதை கற்க விரும்பினேன். ஆனால், அவர்கள், தேர்வுக்காக என்னை தயார்படுத்துவதில் குறியாக இருந்தனர்’ என்று கசப்பான பள்ளி அனுபவங்களைச் சொல்வார்.

அப்போதே பள்ளிகள் அப்படித்தான் போலும்!

இப்போது ஐன்ஸ்டைன் என்று யாரையாவது சொல்வதனால் அதிக புத்திக்கூர்மையுள்ளவர் என அர்த்தமாகுமளவுக்கு மூளையை பயன்படுத்தியவர்.

1955ல் மரணம் அடைந்தார். அவரது உடலை தாமஸ் ஹார்வே என்ற டாக்டர் பிரேத பரிசோதனை செய்தார். அவரது அறிவு மிக்க மூளையை எடுத்து மறைத்து வைத்து கொண்டார்.


இதையறிந்த ஐன்ஸ்டீன் குடும்பத்தினர் தாமஸ் ஹார்வே மீது வழக்கு தொடர்ந்தனர்.

ஐன்ஸ்டீன் மூளையை தான் வைத்து கொள்ள அவரது மகன் அனுமதி அளித்ததாக கூறி ஐன்ஸ்டீனின் மூளையை தானே வைத்து கொண்டார்.

விஞ்ஞானியின் மூளையை ஆய்வு செய்வதற்காக நரம்பியல் விஞ்ஞானிகள் கேட்டுக் கொள்ள பல வருடங்களுக்குப் பிறகு அவரது மூளையின் சில பகுதிகளை பரிசோதனைக்காக நரம்பியல் விஞ்ஞானிகளுக்கு வழங்கினார்.

தற்போது மூளையின் 46 மெல்லிய அடுக்குகள் அமெரிக்காவின் நியூயார்க்கில் உள்ள பிலடெல்ஃபியாவின் முட்டர் அருங்காட்சியகத்தில் வைக்கப்பட்டுள்ளது. ஐன்ஸ்டீனின் மூளையை லென்ஸ் மூலம் பார்க்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

அவரைப் போல மூளையின் பெரும்பகுதிகளை



உபயோகிக்க ஆசைதான். (அவரே 10%க்கு சற்று கூடுதலாகத்தான் உபயோகித்திருந்தாராம்)

1999 ல் டைம் "இந்த நூற்றாண்டின் சிறந்த மனிதர்" என்ற பெயரை ஐன்ஸ்டீனுக்கு தந்தது.

★★★

2018 ஆம் ஆண்டில் 162 பேருக்கு மரண தண்டனைகள் விதிக்கப் பட்டுள்ளதாக தேசிய சட்டப் பல்கலைக்கழகத்தின் தகவல் தொகுப்பு தெரிவிக்கிறது. கடந்த 20 ஆண்டுகளில் இது அதிகபட்சம்.

இந்த செய்தியயை வாசித்த போது

விமானப்படையில் பணிபுரிந்த போது வாசித்து விக்கித்து போன நூல் சி.ஏ பாலன் எழுதிய "தூக்கு மர நிழலில்". நினைவு வந்தது.

(குமுதத்தில் வந்ததை அப்பா பைண்ட் செய்து வைத்திருந்தார்)

பாலன் கேரளாவில் ஒரு கம்யூனிஸ்ட் தலைவர். அவருக்கு நீதிமன்றம் தூக்கு தண்டனை விதித்தது. கருணை மனுவும் நிரகாரிக்கப்பட இன்னும் ஒரு வாரத்தில் தூக்கு எனும் நிலை.

அப்போது கேரளாவில் ஈ.எம்.எஸ் தலைமையில் கம்யூனிஸ்ட் ஆட்சி நடந்தது. வழக்கறிஞர் கிருஷ்ண ஐயர் மூலம் மீண்டும் ஜனாதிபதிக்கு மனு செல்ல, இம்முறை கருணை மனு ஏற்று கொள்ளப் பட்டுவிட்டது. (நடிகவேள் ராதாவும் அவரை விடுதலை செய்யச் சொல்லி போராடினார் என்பது கூடுதல் செய்தி)

பாலன் எந்த தவறும் செய்ய வில்லை என விடுதலை ஆகி வெளியே வந்து எழுதிய நூல்தான் அது.

வார்டன்கள் செய்கிற கொடுமை; சிறைக்குள் உள்ள அரசியல் என்பதையெல்லாம் சொல்லிப் போகும் இந்நூல் முக்கியமாக தூக்கு தண்டனை கைதிகளின் மனநிலையைச் சொல்கிறது.

ஆசிரியர் ஒரு தூக்கு தண்டனை கைதி என்பதால் பல தூக்கு தண்டனை கைதிகளுடன் பழகும் வாய்ப்புக் கிடைக்கிறது. நூலில் அவர்களின் கதைகள் பலவற்றை கூறுகிறார். அநேகமாய் ஒவ்வொரு மனிதனும் எதோ ஒரு நேரத்தில், கோபத்தில் அல்லது முட்டாள்தனத்தில் தவறு செய்து விட்டு அதற்காக கடும் மனவேதனையில் தவிப்பதைச் சொல்கிறார்.

"எந்த தவறும் செய்யாத எனக்குத் தானே தூக்கு விதிக்கப்பட்டது? அந்தத் தீர்ப்பு அப்படியே எடுத்து கொள்ளப்பட்டிருந்தால் நான் இறந்திருக்க வேண்டும் தானே? நமது நீதி முறையும் தூக்கு வழங்கும் விதமும் எவ்வளவு கேலிக் கூத்தாக இருக்கிறது பாருங்கள்" என்று நூலை முடிக்கிறார் சி.ஏ.பாலன்.

வருடங்கள் ஆகியும் இந்தப் புத்தகத்தை மறக்க முடியவில்லை.

★★★

செல்வராஜ் ஜகதீசன் எழுதிய கவிதையொன்று மனதை நெருடிக் கொண்டேயிருக்கிறது.

அவசரமாய் தொலைபேசியில்
அழைத்து
அன்பு பற்றிய கவிதையொன்று
அச்சில் வந்திருப்பதைச் சொன்னேன்
வேலை முடிந்து
வீட்டுக்கு வரும்போது
மகனுக்கு மறுக்காமல்
மருந்து மாத்திரைகள்
வாங்கி வா என்றாய்
எனக்குப் புரிந்தது
அன்பைப் பற்றி பேசிக் கொண்டிருப்பதும்
அன்பையே பற்றிக் கொண்டிருப்பதும். •

## "ரசிப்பதற்கு நேரமில்லை!"

பாசத்தைத் தொலைத்துவிட்டு
படபடப்போடு சாதத்தை
ஊட்டிவிடும் அன்னையோடு
மல்லுக்கட்டும் மகள்!...

படிப்பை தவிர்த்து
தன்னுடன் பேசும்
தாத்தாவுடன்
அளவளாவும் பேரன்!..

பந்தும் மட்டையும்
இல்லாமல்
கிரிக்கெட் ஒத்திகை
செய்திடும் சிறுவன்!...

விடுமுறையும் எடுத்து
வீட்டுப்பாடமும் எழுதாமல்
பக்கத்து ஊருக்கு
சென்று வந்த மகிழ்வை
பள்ளித் தோழனுடன்
பகிர்ந்து கொண்டிருந்தான்
பாலகன் ஒருவன்!...

பள்ளிவாகனம்
ஒலி எழுப்பி நின்றது!..

புத்தக மூட்டைகளை
தோளில் சுமந்து
போர்வீரர்களைப் போல்
வாகனத்தில் ஏற
மழலையின்இயல்புகள்
கலைந்து போனது
நொடிப்பொழுதில்!

–தச்சை மணி



நெல்லை சுத்தமல்லி திருவள்ளுவர் கழக ஆண்டு விழாவில் சிறப்பாக வெளிவந்து கொண்டிருக்கும் சிற்றிதழுக்கு நினைவுப் பரிசும் அதன் ஆசிரியர்களுக்கு பொன்னாடையும் அணிவித்து சிறப்பிக்கப்பட்டனர். அந்த வகையில் நம் காணிநிலத்திற்கும் பெருமை கிடைத்தது. காணிநிலத்தின் சார்பில் ஆசிரியர்கள் எழுத்தாளர் இரா.நாறும்பூநாதன், ஓவியர் சண்முகம், கவிஞர் பாப்பாக்குடி இரா.செல்வமணி, கவிஞர் ப.தாணப்பன், கவிஞர் ரமணி முருகேஷ், கவிஞர் ம.சக்திவேலாயுதம், கவிஞர் செ.ச.பிரபு ஆகியோர் தலைவர் சொக்கலிங்கம், ஆசிரியர் கண்ணன், பொருநை இலக்கிய வட்டம் தளவாய்நாதன் ஆகியோர் முன்னிலையில் நெல்லை பேரங்காடி கூட்டுறவுத் தலைவர் பள்ளிக்கோட்டை செல்லத்துரை அவர்களிடம் இருந்து பெற்றுக் கொண்டனர். காணிநிலத்தை சிறப்பித்த சுத்தமல்லி திருவள்ளுவர் கழகத்திற்கு எங்கள் மனமார்ந்த நன்றிகள்.




தாமிரபரணி இலக்கிய மாமன்ற 11ஆம் ஆண்டு தொடக்க விழா நடைபெற்றது. விழாவில் காணிநில ஆசிரியர் குழுவில் ஒருவரான ம.சக்திவேலாயுதம் அவர்களுக்கு ‘கவிமுகில்’ என்ற விருது வழங்கி சிறப்பிக்கப்பட்டார்.

## நாவின் சுவை அரும்புகள் சிலிர்க்கும் சுவைக்கு...






**SAMURAI**
MULTI CUISINE RESTAURANT

17, சிதம்பரம் நகர் முதல் தெரு,
தூத்துக்குடி, 628 008.

**94430 02017**

---

விரைவில்...
விரைவில்...
விரைவில்...
விரைவில்...




**ப.தாணப்பன்** அவர்களின்
அணிந்துரையோடும்

பாப்பாக்குடி **இரா.செல்வமணி**
அவர்களின் வாழ்த்துரையோடும்

**பாவைமதி வெளியீடாய்**

**ம.சக்திவேலாயுதம்**

நெருப்பு விழிகளின்

**சிறுகை**
**அளாவிய கூழ்**

கவிதைத் தொகுப்பு